திருக்கோயில்

பிப்ரவரி 1978 விலை ரூ. 1–25



புயல்வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வழங்குவதற்காக, அறநிலையத் துறையின் சார்பில், தமிழக முதல்வர் மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் அவர்களிடம், அறநிலையத்துறையின் செயலாளர், திரு. ஜி. எஸ். சேஷாத்திரி, I.A.S., அவர்கள், 89,248.00 ரூபாய் மதிப்புள்ள துணிமணிகளை வழங்குதல் (15-12-77).

முகப்பு:

புகழ் ஓங்கிய
கங்கை கொண்ட சோழபுரம் திருக்கோயில்,
அருள்மிகு
சண்டேச அனுக்கிரக மூர்த்தியின்
ஒப்புயர்வற்ற அற்புதச் சிற்பம்

திருக்கோயில்

மாலை : 20 | பிங்கள ஆண்டு—மாசித் திங்கள் பிப்ரவரி—1978 | மணி : 5

சந்தாதாரர்களுக்கு வேண்டுகோள்!

திருக்கோயில் திங்கள் இதழின் சந்தாதாரர் களாகச் சேர விருப்பமுள்ளவர்கள்

ஆணையர் அவர்கள்,
அறநிலைய ஆட்சித்துறை,
சென்னை — 600 034

என்ற முகவரிக்கு மணியார்டர் மூலம் பணம் அனுப்பிச் சந்தாதாரராகச் சேர்ந்து கொள்ளலாம்.

ஜனவரி முதல் டிசம்பர் வரை உள்ள காலம், சந்தா ஆண்டு எனக் கணக்கிடப்படும். இடைப் பட்ட காலத்தில் சந்தாதாரராக விரும்புவோர், முழு ஆண்டிற்குரிய சந்தாத் தொகை ரூ. 15—00 உடன், இடைப்பட்ட காலத்தில் உள்ள மாதங் களுக்கு, ஒரு இதழ் ரூ. 1—25 வீதம் சேர்த்துப் பணம் அனுப்பிச் ''சந்தாதாரர்'' ஆகலாம்.

தனிப்பட்ட 'சந்தாதாரர்கள்' ஒவ்வொரு வரும் நேரடியாக, ஆணையர் அலுவலகத்திற்கே மணியார்டர் மூலம் பணம் அனுப்புமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

பழைய சந்தாதாரர்கள், கடிதம் எழுதும் பொழுதும், பணம் அனுப்பும் பொழுதும், தங்கள் சந்தா எண்ணையும் தவறாமல் தெரிவித்து உதவினால்தான், உடனுக்குடன் ஆவன செய்ய வசதியாக இருக்கும். புதிய சந்தாதாரர்கள் பணம் அனுப்பும்பொழுது, மணியார்டர் கூப்பனில், புதிய சந்தா என்பதைக் குறிப்பிடு மாறும், சரியான முழு முகவரியைப் பின்கோட் *[PINCODE]* எண்ணுடன் தெரிவிக்குமாறும், கேட்டுக்கொள்ளப்படுகிறது.

வெளிநாட்டுச் சந்தாதாரர்களின் முகவரிகள் அனைத்தும் செவ்வனே பதிவு செய்து வரிசைப் படுத்தப் பெற்று அவர்கள் எல்லோருக்கும் முறை யாக இதழ்கள் அனுப்பப்படுகின்றன. தற் பொழுது வெளிநாட்டுச் சந்தாதாரர் ஒவ்வொரு வருக்கும் ஆண்டு ஒன்றுக்கு அஞ்சல் செலவு மட்டுமே ரூ. 9—60 ஆகின்றது. ஆதலால் வெளி நாட்டுச் சந்தா, ரூ. 20—00-ல் இருந்து ரூ. 25—00 ஆக ஜனவரி 1978 முதல் மாற்றி அமைக்கப் பட்டது. வெளிநாட்டுச் சந்தாதாரர்கள் அவ்வப் போது தங்கள் சந்தாவைப் புதுப்பித்துக் கொள்ளக் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

பொருளடக்கம்

அருளாளர்கள் மூவர்
—திரு. எம். கே. பாலசுப்பிரமணியம், I.A.S.

தெய்வப்புலவர் திருவள்ளுவர் —திரு. சிவநேசன்

தமிழகத்தின் திருத்தலங்கள்
—திரு. ந. ரா. முருகவேள், M.A., M.O.L

குலசைச் சான்றோர்
—திருமுருக. கிருபானந்த வாரியார் சுவாமிகள்

''சப்த காதை''—திரு. ந. ரா. முருகவேள், M.A., M.O.L.

எம்பெருமானும் களிறும்
—பி. ப. அண்ணங்கராசார்ய சுவாமிகள், காஞ்சிபுரம்.

சென்னையில் சிவாஜி தரிசித்த சென்னம்மன்
—''மகாவித்துவான்'' பண்டித நடேசனார், B.A., J.P.

இராமாநுச நூற்றந்தாதி —ஆசிரியர்.

சேக்கிழார் எடுத்த செஞ்சொற் கோயில்
திரு. சி. சு. கண்ணாயிரம், கோவை.

''ஆதி பகவன்'' —ஆசிரியர்.

திருவெட்டெழுத்து மந்திரம் —திரு. தமிழ் விரகன்

கந்தபுராணக் காப்பியநலம்
—திரு. க. த. திருநாவுக்கரசு, M.A., M.LITT.

'' அகர முதல எழுத்தெல்லாம் '' —ஆசிரியர்.

செங்கற்பட்டு மாவட்டக் கோயில்கள்
—திரு. ந. ரா. முருகவேள், M.A., M.O.L.

ஆசிரியர் : ந. ரா. முருகவேள், M.A., M.O.L.

"என் கடன் பணி செய்து கிடப்பதே"

அருளாளர்கள் மூவர்*

திரு. எம். கே. பாலசுப்பிரமணியம்,
ஐ. ஏ. எஸ்.,
ஆணையர், அறநிலையத்துறை,
சென்னை-34.

(1) தாயுமானவர்

''சான்ருேர்களின் வாழ்க்கை வரலாறுகள்: நாமும் அவர்களைப்போல நடந்து, நம்முடைய வாழ்க்கையினையும் தெய்விகம் நிறைந்ததாக, நாம்ஆக்கிக் கொள்ள முடியும்'' என்று நமக்கு இனிது உணர்த்துகின்றன. இதனையே, "Lives of great men all remind us we can make our lives subline'' என்று, லாங்ஃபெல்லோ (Long fellow) என்னும் ஆங்கிலக் கவிஞரும் பாடி அறிவுறுத்துகின்ருர். அம்முறையில், எத்தனையோ பல அருட்பெருஞ் சான்ருேர்கள், நம் தமிழகத்தில் தோன்றி வாழ்ந்துள்ளனர். அவர்களுள் ஒருவர் தாயுமான சுவாமிகள்.

தாயுமானவரின் வேதாந்த சித்தாந்த ஞானம், சமரச உள்ளம், தூய துறவொழுக்கம், யோக அநுபவநலம், அருளியல் உள்ளம், அருளனுபவச் சிறப்பு, எளிய இனிய கவிதைத் திறம் ஆகியவை, அனைவர் உள்ளத்தையும் கொள்ளை கொள்ளவல்லனவாகும்.

தாயுமானவரின் பாடல்களுள் ஒவ்வொன்றும், நெஞ்சை அள்ளும் செஞ்சொற்களால் அமைந்தது. உலகியல் அனுபவமும், அருளியல் அநுபூதியும், அவர்தம் பாடல்களில் நிறைந்து காணப்படும். எளிய இனிய சொற்களால், எல்லோர்க்கும் விளங்குகின்ற செம்பாகமான நடையில், தாயுமானவரின் பாடல்கள் சாலவும் சிறந்து விளங்கும்.

எல்லாச் சமயத்தவரும் இனிது உவந்து ஏற்கும் வண்ணம், இறைவனின் உண்மை இயல்பினை எடுத்து விளக்கும் முறையில், தாயுமானவர் அருளிச் செய்த, பரசிவ வணக்கப் பாடல்கள் அமைந்துள்ளன!

அங்கிங்கு எனுதபடி எங்கும்பிர காசமாய்
ஆனந்த பூர்த்தியாகி,
அருளொடு நிறைந்ததுஎது? தன்னருள் வெளிக்குளே
அகிலாண்ட கோடியெல்லாம்
தங்கும்படி இச்சை வைத்து உயிர்க்கு உயிராய்த்
தழைத்ததுஎது? மனவாக்கினில்
தட்டாமல் நின்றதெது? சமயகோடிகள் எலாந்
தந்தெய்வம் எம்தெய்வம் என்று
எங்குந் தொடர்ந்துஎதிர் வழக்கிடவும் நின்றதுஎது?
எங்கணும் பெருவழக்காய்,
யாதினும் வல்லவொரு சித்தாகி, இன்பமாய்
என்றைக்கும் உள்ளதுஎது?மேல்
கங்குல்பகல் அறநின்ற எல்லைஉளது எது?அது
கருத்திற்கு இசைந்தது; அதுவே,
கண்டன எலாம் மோன உருவெளிய தாகவும்
கருதி அஞ்சலி செய்குவாம்.

எனவரும் தாயுமானவர் பாடல், கடவுளின் இயல்பினை, எம்மதத்தவரும் சம்மதம் என்று, ஏற்றுக் கொள்ளும் வகையில் எல்லோர்க்கும் பொதுமையான நிலையில் சமரச ஞான நோக்கத்துடன், பாடப்பெற்றிருக்கக் காணலாம்.

இறைவனே எல்லாச் செயல்களுக்கும் காரணம். நம்முடைய அறிவினுலோ திறமையினுலோ, நாமே எதுவும் செய்துவிட இயலாது, நம்முடைய அறிவும், ஆற்றலும், செயல்திறனும், மிகவும் குறைவுடையன என்னும் கருத்தைத் தாயுமான சுவாமிகள், பின்வரும் பாடலில் அழகுறப் பாடுகின்ருர்.

ஆராயும் வேளையில், பிரமாதி ஆனுலும்
ஐயஒரு செயலும் இல்லை;
அமைதியொடு பேசாத பெருமைபெறு குணசந்த்
என இருந்தபேரும், [ரராம்

நேராக ஒருகோபம் ஒருவேளை வர,அந்த
நிறை ஒன்றும் இல்லாமலே,
நெட்டுஉயிர்த்துத் தட்டழிந்து உளறுவார்;வசன
நிர்வாகர் என்றபேரும்

பூராய மாயொன்று பேசுமிடம் ஒன்றைப்
புலம்புவார்; சிவராத்திரிப்
போதுதுயிலோம் என்ற விரதியரும் அறிதுயில்
போலே இருந்து துயில்வார்;

பாராதி தனிலுள்ள செயல்எலாம், முடிவிலே
பார்க்கில், நின் செயலல்லவோ?
பார்க்கும்இடம் எங்கும் ஒரு நீக்கமற நிறைகின்ற
பரிபூரண ஆனந்தமே!

தாயுமானவரின் பாடல்கள், நல்ல சொற்சிறப்பும், உயர்ந்தபொருள் நலனும், சிறந்த ஓசை நலமும் உடையனவாக விளங்கும். இவ்வுண்மையை விளக்கும் சான்ருக, அவர் இராமேசுவரத்தில் எழுந்தருளியுள்ள, மலைவளர்

காதலி என்னும் பருவதவர்த்தனி அம்மையின் மீது பாடியுள்ள பின்வரும் பாடலே போதிய சான்றாகும்.

''பூரணி, புராதனி, சுமங்கலை, சுதந்தரி,
புராந்தகி, திரியம்பகி, எழிற்
புங்கவி, விளங்குசிவ சங்கரி, சகஸ்ரதள
புட்பமிசை வீற்றிருக்கும்

நாரணி, மனாதீத நாயகி, குணாதீத
நாதாந்த சத்தி, என்றுஉன்
நாமமே உச்சரித்திடும், அடியர் நாமமே
நான் உச்சரிக்க வசமோ?

ஆரணி சடைக் கடவுள் ஆரணி எனப்புகழ,
அகிலாண்ட கோடி ஈன்ற
அன்னையே! பின்னையுங் கன்னிஎன மறைபேசும்
ஆனந்த ரூபமயிலே!

வாரணியும் இருகொங்கை மாதர்மகிழ் கங்கைபுகழ்
வளமருவு தேவையரசே!
வரைராசனுக்கு இருகண் மணியாய் உதித்த மலை
வளர் காதலிப் பெண்உமையே!

இப்பாடலில் வரும் பூரணி புராதனி சுமங்கலை சுதந்தரி புராந்தகி திரியம்பகி புங்கவி முதலிய சொற்கள் ஒவ்வொன்றிலும், நல்ல ஓசைநலமும், ஆழ்ந்த சிறந்த பொருள் வளமும் அமைந்திருக்கக் காண்கின்றோம். அம்பிகையை ''அகிலாண்டகோடி ஈன்ற அன்னையே'' என்று சிறப்புற விளித்து, ''பின்னையும் கன்னியென மறைபேசும் ஆனந்த ரூப மயிலே'' என உருவகம் செய்து புகழ்ந்திருப்பது, அம்பிகையின் தாய்மைத் தன்மையினையும், அழியாத கன்னிமையாகிய தூய்மைத் தன்மையினையும், ஒருங்கே விளக்குகின்ற அருமைப்பாடு, பெரிதும் வியந்து போற்றத் தக்கது.

இத்தகைய அரிய இனிய சிறந்தபாடல்கள் பலப்பல, வேதாந்த சித்தாந்த சமரச ஞான வித்தகச் செல்வராகிய தாயுமான சுவாமிகளால் பாடப்பெற்றுள்ளன. அப்பாடல்களை அன்புடன் ஓதுவதன் மூலம், நாம் நம் வாழ்க்கையில் பலவகை நலங்களைப் பெற்று மகிழலாம். தாயுமான சுவாமிகளின் பாடல்களை, அன்பர்கள் அனைவரும் படித்து மகிழ்ந்து பயன் அடைவார்களாகுக!

(2) பட்டினத்தார்

வழிபாடு என்பது, மனித வாழ்க்கைக்கு மிக மிக இன்றியமையாத ஒன்று. உடல்நலத்திற்கு உணவு தேவை; அதுபோல உயிர் நலத்துக்கு வழிபாடு மிகவும் தேவை. தண்ணீர் நமது தாகத்தைத் தணித்து, நம் உடலுக்கு நன்மைகள் புரிகின்றது; அதுபோல வழிபாடு நமது ஆன்ம தாகத்தைத் தணித்து, நம் உயிருக்கு நன்மைகள் பல விளைவிக்கின்றது. வாழ்விற்குக் காற்று இல்லாமற்போனால், நாம் ஒரு சில நொடிகள்கூட வாழ்தல் கடினம்; அங்ஙனமே நமது ஆன்மீக வாழ்விற்கு வழிபாடு என்பது, பெரிதும் வேண்டுவதொன்றாக இன்றியமையாததாக உள்ளது. மூச்சுவிடுதல் இயல்பாக நிகழமுடியாமற் போகுமாயின், நாம் பெரிதும் திக்குமுக்காடிப் போவோம். அவ்வாறே வழிபாடு என்பதனை, நாம் நம் வாழ்க்கையிற் கடைப்பிடிக்காதொழிந்தால், நமக்கு வாழ்க்கையில் இடையறாத பல அல்லல்களும், தொல்லைகளும், கவலைகளும் நேர்ந்துகொண்டேயிருக்கும். இவ்வுலகில் தொல்லைகளும் கவலைகளும் இன்றி, நாம் இன்புற்று வாழ்வதற்கு உரிய ஒரேஒரு நேரியவழி, இறைவனை வழிபாடு புரிதலேயாகும்.

தமிழ்நாட்டில் தோன்றியருளிய அருட்பெருஞ் சான்றோர்கள் பலர். அவர்களுள் தலைசிறந்த ஒருவர் பட்டினத்தடிகள். பட்டினத்தடிகளின் பெருமையினை வியந்து, வேதாந்த சித்தாந்த சமரசஞானச் செல்வர் ஆகிய தாயுமானவர்,

''பார்அனைத்தும் பொய்எனவே
பட்டினத்துப் பிள்ளையைப்போல்
ஆரும் துறக்கை அரிது அரிது''

என்று புகழ்ந்து பாராட்டியுள்ளார். அத்தகைய சான்றோர் ஆகிய பட்டினத்தடிகள், நம் மனத்தில் படிந்து படர்ந்து கிடக்கும் அழுக்குக் குப்பைகளையும், அவற்றைக் களைந்து கழித்துத் துப்புரவு செய்யும் முறைகளையும் பற்றித் தம்முடைய பாடல்ஒன்றில் அழகுறக் குறிப்பிட்டருள்கின்றார்.

நம்முடைய மனம் ஒரு சிறந்த அற்புதமான கருவி! மிகவும் புனிதம் வாய்ந்தது. "The mind is its own place, it can make a hell of heaven and a heaven of hell'' என்று ஜான்மில்ட்டன் என்னும் ஆங்கிலக் கவிஞர் பாடுவதுபோல, நாம் நம் மனத்தைப் பயன்படுத்துவதற்கு ஏற்ப, அஃது உயர்ந்ததாகவோ, இழிந்ததாகவோ அமைகின்றது. நமது மனம் ஒரு சிறந்த மாளிகையாக விளங்கத்தக்கது. அதனை நாம் ஒரு அசுத்தமான தொழுவம் அல்லது சகதி நிறைந்த மாட்டுக் கொட்டிலாகச் செய்து விட்டிருக்கின்றோம். அங்கே காமம் வெகுளி மயக்கம் முதலிய அழுக்குக் குப்பைகள், நீண்ட காலமாக நிரம்பிக் கிடக்கின்றன. மனமாகிய மாளிகையைத் தொழுவமாக மாற்றி, அங்கே மெய் வாய் கண் மூக்கு செவி என்னும் ஐம்பொறிகள் ஆகிய கருமை நிறம் பொருந்திய எருமைக் கடாக்களைக் கட்டி வைத்திருக்கின்றோம். அத்தொழுவம் மிகவும் இருள்படர்ந்து மங்கிக் கிடக்கின்றது. கால்வைக்க முடியாத சகதியாக, அதன் தரையோ அசுத்தம் நிறைந்து, தீநாற்றம் மிகுந்து காணப்படுகின்றது.

பட்டினத்தடிகள், மனமாகிய மாளிகை, பராமரிப்பு இன்றிப் பாழ்பட்டுப் பாழறையாய்த் தொழுவமாகப் பழுதடைந்து கிடத்தலைக் காண்கின்றார். மிகவும் வருந்துகின்றார். அதனைத் தூய்மைப்படுத்த முனைகின்றார். காமம் வெகுளி மயக்கம் ஆகிய குப்பைகளையெல்லாம் அரிதின் முயன்று போக்குகின்றார். ஐம்பொறிகளாகிய ஐந்து கடாக்களையும் அவிழ்த்து, ஓட்டி அகற்றிவிடுகின்றார். அன்புகொண்டு மெழுகி, அங்கே இருந்த மேடுபள்ளங்களைப் போக்கித், துப்புரவு செய்கின்றார். அருளு

ணர்வு என்னும் ஒளிவிளக்கை ஏற்றிவைத்து, அறியாமை என்னும் துன்ப இருளை ஓட்டுகின்ருர். உண்மை என்னும் விதானம் விரித்துப் பரப்பி, அப் பாழறையைத் துப்புரவு ஆக்கி அழகுசெய்து பரிசுத்தப்படுத்துகின்ருர். பள்ளியறைபோல் அங்கே ஒரு நல்ல குடும்பத்தினைப் பாதுகாப்புக்காக அமைத்துவைக்கக் கருதுகின்ருர். ஒரு சிறந்த கணவனையும் மனைவியையும் குடும்பமாக இருந்து வாழுமாறு செய்ய விரும்புகின்ருர். மனமாகிய மாளிகையில், உள்ளமாகிய பள்ளியறையில் இருதய கமலம் என்னும் செழுமலர்ப் பூந்தவிசு ஆகிய கட்டில் ஒன்றைக் கொணர்ந்து இடுகின்ருர். அக்கட்டிலின்கண், இமயக் கொழுந்து ஆகிய பார்வதி தேவியையும் உடன் அழைத்துக் கொண்டு எழுந்தருளி, குடும்பம் அமைத்துக் குடியிருந்து வாழ்ந்து வருதல் வேண்டும் என்று, சிவபெருமானைப் பட்டினத்தடிகள் வேண்டிக் கொள்கின்ருர்.

''கருமுதல் தொடங்கிப் பெருநாள் எல்லாம்
காமம் வெகுளி கழிபெரும் பொய் எனும்
தூய்மையில குப்பை தொலைவின்றிக் கிடந்ததை
அரிதின் இகழ்ந்து போக்கி; பொருதிறல்
மையிருள் நிறத்து மதனுடை யடுசினத்து
ஐவகை கடாவும் யாப்பவிழ்த்து அகற்றி ;
அன்பு கொடு மெழுகி; அருள்விளக்கு ஏற்றி;
துன்ப இருளைத் துரந்து; முன்புற
மெய் எனும் விதானம் விரித்து; நொய்ய
கீழ்மையிற் ருெடர்ந்து கிடந்த என் சிந்தைப்
பாழறை உனக்குப் பள்ளியறை ஆக்கி;
சிந்தைத் தாமரைச் செழுமலர்ப் பூந்தவிசு
எந்தை நீ இருக்கஇட்டனன்; நின்
செல்வச் சிலம்பு மெல்லென மிழற்ற
அமையாக் காட்சி இமையக்
கொழுந்தையும் உடனே கொண்டிங்கு
எழுந்தரு ளத்தகும் எம்பெரு மானே''

பட்டினத்தடிகள் பாடுவதுபோல, நாமும் நமது பாழறையாகிய மனத்தைப், பார்வதியும் பரமேசுவரனும் ஒருங்கே எழுந்தருளி விளங்கத் தகுந்த, சிறந்த பள்ளியறையாகும் வண்ணம், பல்லாற்ருனும் தூய்மை செய்து பொலிவுற வைத்துக் கொள்ள முயலும் செயலே, வழிபாடு எனலாம். அத்தகைய சிறந்த நல்ல வழிபாட்டினை, நாம் நமது உள்ளம் ஆகிய மாளிகைக் கோயிலில், இறைவனுக்கு என்றும் இடையருது செய்து, வையத்து வாழ்வாங்கு வாழ முயலுவோமாக!

(3) இராமகிருஷ்ண பரமஹம்சர்

நமது இந்தியநாடு, தொன்றுதொட்டு எண்ணற்ற எத்தனையோ பல சான்ருேர்களும், ஞானிகளும் தோன்றிய சிறப்புடையது. இந்திய தேசத்தில் தோன்றிய ஞானிகளாகிய அருளாளர்களின் வரிசையில் ஒருவராகத் தோன்றியருளியவர் இராமகிருஷ்ண பரமஹம்சர். அவர் தம் வாழ்க்கையும் போதனைகளும், மங்கி மழுங்கி ஒளியிழந்து கிடந்த நம் இந்துமதம், புதிய எழுச்சியும் வளர்ச்சியும் பொலிவும் பெற்று மறுமலர்ச்சியுறும்படி செய்துள்ளன. "The Consummation of the spiritual wisdom of 5,000 years of 500 million people" என்று ரோமன் ரோலண்ட் (Romain Rolland) என்னும் பிரஞ்சு நாட்டுப் பேரறிஞர் கூறுவதுபோல, நமது இந்திய நாட்டின் ஐம்பதுகோடி மக்களின், 5,000 ஆண்டுக்கால ஆன்மிக அருள் ஞானத்தின் முழுநிறைவான எடுத்துக்காட்டாகத் திகழ்பவர், நமது இராமகிருஷ்ண பரமஹம்சர் ஆவர்.

வங்காளத்தில் ஊக்ளி மாவட்டத்தில், காமர்புகூர் என்னும் சிற்றூரில், புதிராம் என்னும் தந்தையாருக்கும், சந்திராமணிதேவி என்னும் அன்னையாருக்கும் நான்காவது மைந்தராக, 1836-ஆம் ஆண்டில் இராமகிருஷ்ணர் தோன்றினர். அவர்தம் இயற்பெயர், கதாதரர். இளமையிலேயே தந்தையை இழந்த இராமகிருஷ்ணர், இராம்குமார் என்னும் தம் தமையனரின் பராமரிப்பில் வளர்ந்து வந்தார். கல்கத்தா நகருக்கு வடக்கே, 5 கல் தொலைவில் கங்கையாற்றின் கரையில், தட்சிணேசுவரம் என்னும் இடத்தில் இராணி ராஜாமணியம்மையார் கட்டிய காளிகோயிலில், தமது 19-ஆம் வயதில், பூசகராகச் சென்று பணிபுரியும் வாய்ப்பு இராமகிருஷ்ணருக்குக் கிடைத்தது.

இங்கேயே இராமகிருஷ்ணர், அன்னை காளியின் அருட்பேறு பெற்ருர். தமது ஆன்மிக வாழ்க்கை முழுவதையும் நடத்தினர். இராமகிருஷ்ணரின் தவ வாழ்க்கை நிலையமாகத் தட்சிணேசுவரம் திகழ்ந்தது. இராமகிருஷ்ணர் பள்ளிப் படிப்பு மிகுதியும் பெற்றிலர். ஆயினும், அவர்தம் வாழ்வும் போதனைகளும் தெய்விக நலம் நிரம்பி, ஈடும் எடுப்பும் அற்று, எவர் உள்ளத்தையும் கொள்ளை கொண்டு உய்விக்க வல்லனவாக, அமைந்து திகழ்கின்றன. இராமகிருஷ்ணரின் அருமை பெருமைகள், அவர் அருளிச் செய்துள்ள உபநிடதங்கள் போன்ற உபதேசமொழிகளால் தெளிவுறப் புலனுகின்றன.

இராமகிருஷ்ணர் எளிய இனிய சிறுசிறு கதைகளின் வாயிலாக, உயர்ந்த உண்மைகளை மக்களுக்கு எடுத்து விளக்கும் இயல்பு உடையவர். அவர் திருவாய் மலர்ந்தருளிய (Parables) போன்ற சிறுகதைகள் பலவற்றுள் பின்வருவதும் ஒன்று.

விறகுத் தலையன் ஒருவன் வனத்திலிருந்து விறகு சுமந்துகொண்டு வெளியே வருவதைச் சாது ஒருவர் பார்த்தார். ''உள்நோக்கிப் போ'' என்று மொழிந்துவிட்டு அவர் தம் வழியே சென்ருர். அதுகேட்ட விறகுத் தலையன் வனத்தினுள் மேலும் உள்நோக்கிச் சென்ருன். சந்தனக் கட்டை கிடைத்தன. சில நாட்களுக்குப் பிறகு, மேலும் உள்நோக்கிச் சென்ருன். தாமிரக் கட்டிகள் கிடைத்தன. இன்னும் சில நாட்களுக்குப் பிறகு, மேலும் உள்நோக்கிச் சென்ருன். வெள்ளிக் கட்டிகள் கிடைத்தன. சில நாட்களுக்குப் பிறகு, அவன் மேலும் உள்நோக்கிச் சென்ருன். பொன் வைரம் முதலியன கிடைத்தன, என்பது இராமகிருஷ்ணர் கூறிய கதைகளுள் ஒன்று.

மனிதன், தனது மனத்தினுள் உள்நோக்கிச் செல்லும் அளவும், அரிய பொருள்களைப் பெறுவான். உணர்வினை புறத்தே செலுத்தாமல், அகத்தே செலுத்தினால்தான், இறைவனை நாம் உணர முடியும் என்னும் உண்மையினை இச்சிறுகதை உணர்த்துகின்றது.

ஞானிகள், எல்லாம் இறைவன் செயல்; நம்மால் ஆகும் செயல் ஒன்றுமில்லை. இறைவன்தான் நம்மைக் காப்பாற்றுகின்றார். நம்மால் நம்மை காத்துக் கொள்ளுதல் இயலாது என்று தெளிந்து உணர்ந்திருப்பர். ஆனால் அஞ்ஞானத்தில் உழல்கின்ற நாமோ, எல்லாம் நம் செயல்தான், நம்மால் முடியாதது எதுவுமேயில்லை, எதனையும் நாம் முயன்று முடித்துவிடலாம் என்று கருதி வருகின்றோம். ஞானிகள் ஒருபோதும் இவ்வாறு எண்ணுவதில்லை. எமக்கு ஒருசெயலும் இல்லை, எல்லாம் உன்செயலே, நீயே எமக்குப் புகல் என்று தெளிந்து, தன்னை சரண் அடைபவர்களையே, இறைவன் காப்பாற்றி அருள் புரிகின்றான். இவ்வுண்மையினை உணர்த்த இராமகிருஷ்ணர் பின்வரும் ஒரு சிறு கதையினை இயம்பியருள்கின்றார்.

''ஒரு சமயம் திருமாலும் திருமகளும் வைகுந்தத்தில் இனிது கலந்து உரையாடி மகிழ்ந்து கொண்டிருந்தனர். அப்போது திருமால் திடீரென்று எழுந்து வெளியே சென்றார். திருமகள் அவர் எங்கு செல்கின்றார் என்று அறிய விரும்பினாள். அதற்குத் திருமால் 'என் பக்தன் ஒருவனைக் காப்பாற்றப் போகிறேன்' என்று சொல்லிச் சென்றார். ஆனால் அவர் ஒரு நொடிப்பொழுதிலேயே திரும்பி வந்துவிட்டார். அதுகண்ட திருமகள் 'இவ்வளவு விரைவில் திரும்பி விட்டீர்களே, ஏன்?' என்று கேட்டாள். அதற்குத் திருமால், வண்ணான் ஒருவன் புல்தரையில் விரித்திருந்த வெளுப்புத் துணிகளின்மீது, தன்னை மறந்திருந்து மகிழ்ந்த நிலையில் என் பக்தன் ஒருவன் கால்வைத்து மிதித்துவிட்டான். வண்ணான் அப்பக்தனை அடிக்க ஓடினான். அப்பக்தனைக் காப்பாற்றுவது கடமை என்று கருதி நான் புறப்பட்டேன். ஆனால் அப்பக்தனே வண்ணானைத் திருப்பி அடிக்கக் கல் ஒன்றை எடுத்தான். உடனே நான் இனி நமக்கு அங்கு வேலை இல்லை என்று திரும்பிவிட்டேன் என்று திருமால் கூறினார்''. இது இராமகிருஷ்ணர் கூறிய ஓர் இனிய சிறு கதை. யான் எனது என்னும் செருக்கும், என் செயல் என்னும் முனைப்பும் அற்றொழிந்தால்தான், நமக்கு இறையருளும் ஞானமும் கைகூடும் என்பது இதன் கருத்து.

இங்ஙனம் எத்தனையோ பல இனிய அருளுபதேசங்கள் இராமகிருஷ்ண மாமுனிவரால் திருவாய் மலர்ந்தருளப் பெற்றுள்ளன. அவைகளுள் ஒவ்வொன்றும் நம் அறிவுக்கு விருந்தாய் ஆருயிர் நலத்திற்கு அமிழ்தமாய்ச் சிறந்து விளங்குகின்றன. அருளாளர்களின் அமிழ்த மொழிகள், வாழ்க்கையாகிய வழுக்கு நிலத்தில் வீழ்ந்து தடுமாறும் நம்மனோர்க்கு வழுக்காமல் நடந்து செல்ல உதவும் ஊன்றுகோல் போலப் பயன்படுவனவாகும். ''இழுக்கல் உடையுழி ஊற்றுக்கோல் அற்றே ஒழுக்கமுடையார் வாய்ச்சொல்'' எனத் திருவள்ளுவர் பெருமான் அருளிச் செய்திருத்தலும் இவ்வுண்மையைத் தெளிவுறுத்தும். ஆதலின், நாம் நம் இராமகிருஷ்ணரின் தெய்விக வாழ்க்கையினையும், சிறந்த போதனைகளையும் பின்பற்றிக் கடைப்பிடித்தொழுகி, வையத்து வாழ்வாங்கு வாழ்ந்து தெய்வத் திருவருள் பெற்று உய்ய முற்படுவோமாக!

---

*சென்னை அனைத்திந்திய வானொலியில், **''சான்றோர் வாக்கு''** என்னும் நிகழ்ச்சியில், *21.1.'78-22.1.'78-23.1.'78* ஆகிய தேதிகளில், நமது **அறநிலைய ஆணையர்** அவர்கள் நிகழ்த்திய உரைகள், இங்குத் தொகுத்து வெளியிடப் பெறுகின்றன.

—ஆசிரியர்.

தொடர்பு கொள்க

சிங்கப்பூரில் (Singapore) நமது ''திருக்கோயில்'' இதழ்களைப் பெற விரும்பும் அன்பர்கள்,

''திரு. டி. சிவசுப்பிரமணியம் அவர்கள்,
உரிமையாளர்,
கலைமகள் புத்தக நிலையம்,
113, செராங்கூன் ரோடு,
சிங்கப்பூர்–8''

என்னும் முகவரிக்கும்; இலங்கையில் (Sri Lanka) நமது ''திருக்கோயில்'' இதழ்களைப் பெறவிரும்பும் அன்பர்கள்,

''திரு. கே. எஸ். ஜி. நாதன் அவர்கள்,
சைன்மேப் இன்டர்நேஷனல்,
7, அகலவத்தை ரோடு,
மாத்தளை, ஸ்ரீலங்கா''

என்னும் முகவரிக்கும், தொடர்பு கொள்ளுமாறு வேண்டப்பெறுகின்றனர்.

—ஆசிரியர்

தெய்வப்புலவர் திருவள்ளுவர்

(சிவநேசன்)

முன்னுரை :

உலகப் பெருங்கவிஞர்களுள் ஒருவராக யும், ஒப்புயர்வு அற்றவராகவும் உணர்ந்து போற்றத் தகுந்தவர், தெய்வப்புலவர் திருவள்ளுவர். திருவள்ளுவரை எல்லா நாட்டவரும், எல்லா மொழியாளரும், எல்லாச் சமயத்தவரும் பெரிதும் புகழ்ந்து போற்றத்தலைப் பட்டுள்ளனர். திருவள்ளுவரின் சிறப்பு, இற்றை ஞான்று உலகெங்கணும் உள்ள அறிஞர்களிடையே ஓரளவு பரவிப் பெருகி வருகின்றது.

உலகப் புகழ்பெற்ற பெருஞ்சான்றோராகிய ஆல்பெர்ட் ஷுவைட்சர் என்னும் மேலைநாட்டுப் பேரறிஞர், ''இத்துணைச் சிறந்துயர்ந்த மெய்யுணர்வு நிரம்பிய ஒரு நீதியுரைத் தொகுப்பு, உலக இலக்கியங்களில் யாண்டுமே இல்லை'' * எனத் திருவள்ளுவர் இயற்றியருளிய திருக்குறளைச் சிறப்பித்து வியந்து மகிழ்ந்து புகழ்கின்றார்!

பேரறிஞர் திரு. ஜி. யூ. போப் பாதிரியார் அவர்கள், ''இந்தியமக்கள் எல்லோருள்ளும் தமிழ் மக்களே சிறப்பு மிக்கவர்களாக முன்னணியில் நிற்கின்றனர். திருக்குறளும் நாலடியாரும், இங்ஙனம் விளங்குமாறு அவர்களுக்கு உதவி புரிந்துள்ளன.'' ** எனக் குறிப்பிட்டுப் பாராட்டியுள்ளார். இங்ஙனமே பேரறிஞர்கள் பலர் திருவள்ளுவரையும், திருக்குறளையும் பற்றி வியந்து மொழிந்து, மிகவும் புகழ்ந்து போற்றியுள்ளனர்.

சிவப்பிரகாசர் :

பிற்காலத்தில் விளங்கிய பெருங்கவிஞர்களுள், துறைமங்கலம் சிவப்பிரகாசர் சிறப்பு மிக்கவர். அவர் ஏனைய எத்துணையோ பல புலவர்களைப் போலவே திருக்குறளின்பாற் பெரிதும் ஈடுபாடு மிக்கவர். திருக்குறட் பாக்களின் கருத்துக்களைத் தமது நூல்களில் ஆங்காங்கே அழகுற அமைத்து, அவர் சுவை துளும்பப் பாடல்கள் பல பாடியுள்ளார். இங்ஙனம் திருக்குறள் நூலிற் பெரிதும் ஈடுபாடு வாய்ந்த அவர், அதன் சிறப்பினை நயமுற எடுத்து நன்கினிது விளக்குவதற்குச் சிவபிரானின் சிறப்பினையே நினைவு கூர்கின்றார்.

திருக்குறள் தனக்கு இணையொன்றும் இல்லாத தனிப் பெருஞ் சிறப்புடையது; சிவபிரானும் தனக்கு உவமை இல்லாத தனிப் பெரும் சிறப்பு மிக்கவர். திருக்குறள் இரண்டு அடிகளை யுடையது; இரண்டுமே இணையற்றவை. ஆனால் அவற்றுள் ஒன்று நாற்சீர்த்தாய்ச் சற்றுப் பெரிதாகவும், மற்றொன்று முச்சீர்த்தாய்ச் சற்றுச் சிறிதாகவும் இருக்கும். திருக்குறளின் இவ்வியல்பு, 'அர்த்த நாரீசுவரர்' வடிவத்தின் இணையற்ற திருவடிகள் இரண்டனுள், ஆண் பகுதியின்கால் நீண்டும், பெண் பகுதியின் கால் சிறியதாய்க் குறுகியும் இருத்தல் போன்றுள்ளது' எனச் சிவப்பிரகாசர் திருக்குறளைச் சிவபெருமானோடு ஒப்பிட்டுக் குறிப்பிடுகின்றார்.

இங்ஙனம் சிவப்பிரகாசர் 'மகட் போக்கிய செவிலித்தாய் சுவடுகண்டு இரங்கிக் கூறல்' என்னும் துறையாக வரும் செய்யுளில், திருவெங்கைக் கலம்பகம் என்னும் நூலிற் குறிப்பிட்டிருத்தல், திருவள்ளுவரின் சிறப்பினையும், திருக்குறளின் பெருமையினையும் தெளிவுற உணர்த்துவதாகும்.

பழமையும் புதுமையும் :

திருவள்ளுவர் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் வாழ்ந்திருந்தவர். ஆயினும் அவர்தம் திருக்குறள் இன்றும் அழியாச் சிறப்பினதாக அமைந்து விளங்குகின்றது. காலத்தாற் பெரிதும் பழமை யுடையதெனினும், கருத்துக்களால் மிகவும் புதுமை பெற்றுத் திருக்குறள் பொலிகின்றது. இவ்வாற்றால் 'முன்னைப் பழம் பொருட்கும் முன்னைப் பழம் பொருளாய்ப் பின்னைப் புதுமைக்கும் பேர்த்தும் அப்பெற்றியன்' என விளங்கும் சிவபெருமானைப் போலவே, திருக்குறள் திகழ்கின்றது.

ஏறத்தாழ நானூறு ஐந்நூறு ஆண்டுகட்கு முன்னர் ஷேக்ஸ்பியர், சாசர் போன்ற ஆங்கில நாட்டுப் புலவர்கள் எழுதிய அண்மைக்கால

---

* " There hardly exists in the literatures of the world a collection of maxims in which we find so much lofty wisdom."

—DR. ALBERT SCHWEITZER
—*Indian Thought & Its Development.*

** " The Tamils are the foremost among the peoples of India. The Kural and the Naladi have helped to make them so."

—THE REV. DR. G. U. POPE.

நூல்களின் மொழி நடையே பலவகைகளில் எவ்வளவோ மாறுபட்டும் வழக்கிழந்தும் சிதைந்து இருக்கக் காண்கின்றோம். *

ஆனால் நம் அருமைத் திருக்குறளோ, இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே இயற்றப்பட்டதாயினும், இன்று இயற்றப் பெற்றது போலவே யாவருக்கும் தெளிவுறப் புரியும்வண்ணம், மாறுதல் சிறிதும் அடையாமல், எளிய இனிய நடையில், ஓரசை ஈரசைச் சொற்களாலேயே பெரிதும் இயன்று, பளிங் கென விளங்க வல்லதாகச் சுடர்விட்டு ஒளிர் கின்றது! உலகில் வேறு எந்நாட்டிலும், வேறு எம்மொழியிலும், இங்ஙனம் இரண்டாயிரம் ஆண்டுகளாகியும், எத்தகைய சிறிய மொழி நடை மாறுதலையும் எய்தாமல், மக்களிடையே பெருகப் பரவி வழங்கி வரும் நூல் ஒன்றினைக் காண்டல் அரிது. இஃதொன்றுதானே திருவள்ளுவரின் பெருமையினையும், திருக்குறளின் சிறப்பினையும் உணர்த்தப் போதிய சான்று ஆகும்.

காழில் கனி :

அது மட்டுமோ! உலகப் பேரறிஞர்கள் மிகப் பழங்காலத்தில் எழுதிய எத்துணையோ கருத்துக்கள், இன்று நடைமுறைக்கு ஒவ்வாமலும், அறிவுக்குப் பொருந்தாமலும், எள்ளி நகையாடும் வகையிலும், இருக்கக் காண்கிறோம். உதாரணமாக மேல்நாடுகளிலெல்லாம் மிகப் பெரிய வித்தகர் எனப் போற்றப்பெறும் அரிஸ்டாட்டில் என்னும் பேரறிஞர் எழுதிய நூல்களிற் காணப்படும் கருத்துக்கள் பலவற்றை 'அறிவுத்துறைக் குப்பைகள்' எனக் குறிப்பிட்டு, இன்று பெர்ட்ரண்ட் ரஸ்ஸல் என்னும் பேரறிஞர் அருவருத்து ஒதுக்கி எள்ளி நகையாடுவதைக் காண்கின்றோம்.** அவ்வாறே ஏனைய பல பழங்காலப் பேரறிஞர்கள் பிறரின் நூல்களிலும்கூட, இந்நாளைய உலகத்துக்கு ஒவ்வாத எத்துணையோ பல பிழைபட்ட கருத்துக்கள் இடம் பெற்றிருத்தலை அறிஞர்கள் அறிவர்.

அங்ஙனமெல்லாம் இன்றி, நூற்றுக்கு நூறு விழுமிய கருத்துக்களே பொருந்தி, ஒதுக்கித் தள்ளத் தக்கது எதுவும் இன்றி, 'காழில் கனி' எனக் கட்டுரைக்கத் தக்கவாறு கவின்மிகச் சிறந்து, காலம் இடம் இனம் நாடு மொழி முதலிய எல்லைகளையெல்லாம் கடந்து, அறிவுக்கும் இயற்கைக்கும் நடைமுறைக்கும் உண்மைக்கும் அணுத்துணையும் பிறழாமல், தன்னிலையிற் றிரியாமலும் மாறாமலும் நிலைபேறுற்று நிகரின்றித் திகழ்கின்றது, நம் திருக்குறள்! இஃது, எண்ணுந்தோறும் நமக்கு மிகவும் இறும்பூது பயப்பதன்றோ?

திட்ப நுட்பம் :

ஓவியப் புலவன் தூரிகை கொண்டு பல் வேறு காட்சிகளைத் தீட்டிக் காட்டுகின்றான். அதுபோலவே காவியப் புலவன் தன் கற்பனைத் திறனால், பல்வேறு உணர்ச்சி நிலைகளைச் செவ்விதின் வெளிப்படுத்தி விளக்குகின்றான். ஓவியப் புலவனுக்குப் பலதிற வண்ணங்களும் கோடுகளும் பயன்படுமாறு போன்று, காவியப் புலவனுக்குச் சொற்களும் இலக்கண முறைகளும் உதவி புரிகின்றன. உலகப் பெருங்கவிஞர் களின் தலைவர் ஆகிய திருவள்ளுவர், தம்முடைய திருக்குறளின் ஒவ்வொரு சொல்லும் எழுத்தும் அசையுங்கூட, மிகவும் பொருள் பொதிந்து விளங்கும் வண்ணம் அழகுற அமைத்திருக்கின்றார்!

திருக்குறளில் ஒரு சிறு சொல்கூட வறிதாகப் பொருளின்றி அமைக்கப்படவில்லை. ஒவ்வொரு சிறிய அசையும்கூடப் பொருள் சிறந்து பொலிந்து நிற்கின்றது. திருவள்ளுவர் தம் கருத்துக்களையும், அகவுணர்ச்சிகளையும், அறிவுரைகளையும், எத்துணையோ பலப்பல நுட்ப முறைகளைக் கடைப்பிடித்துத் திட்பமுற உணர்த்துகின்றார். நவில்தொறும் நயம் பயக்கும் நலமிக்கதாகத் திருக்குறள் திகழ்கின்றது. தொட்டனைத் தூறும் மணற்கேணிபோல, ஆராய ஆராய அதன் கருத்துக்கள் ஆழ்ந்து விரிவடைந்துகொண்டு செல்கின்றன. அறிதோறு அறியாமை கண்டற்றால் என்றதற்கு ஏற்ப, நாம் திருக்குறளை ஆராய்ந்து அறியுந் தோறும் நம்முடைய அறியாமையே புலப்படுகின்றது. திருக்குறளின் கருத்துவளம் சிந்தனைக்குப் பெருவிருந்தாகும். திருவள்ளுவர் தம் நுண்மாண் நுழை புலனால் ஒவ்வொரு சிறு சொல்லும் அசையும்கூடச் சிறந்த பல நுட்பக் குறிப்புகளை உட்கொண்டு ஒளிரும் வண்ணம், தம்முடைய நூலை இயற்றியருளியிருக் கின்றார். அதனை விளக்கும் ஒரு சில உதாரணங்களை மட்டும் ஈண்டுக் காண்போம்.

நற்றாள் தொழாஅர் :

(1) 'கற்றதனால் ஆயபயன் கடவுளைத் தொழுதல்', என்பதே தாம்கூற விழையும் கருத்தாயினும், திருவள்ளுவர் அங்ஙனம்

---

* "Just compare the language of Caedmon, of Langland, of Chaucer, of Shakespeare, of Milton, and of Tennyson, one with the other, and see to what great an extent the language of one poet differs from that of another."

—DR. MEIKLEJOHN.

** "Aristotle, in spite of his reputation, is full of absurdities. He says that children should be conceived in the winter, when the wind is in the North, and that if people marry too young the children will be female.

He tells us that the blood of females is blacker than that of males ; that the pig is the only animal liable to measles ; that an elephant suffering from insomnia should have its shoulders rubbed with salt, olive oil and warm-water ; that women have fewer teeth than men, and so on.

Nevertheless, he is considered by the great majority of philosophers a paragon of wisdom."

—DR. BERTRAND RUSSEL, on "*Intellectual Rubbish*"

அதனை நேரே கூறி முடித்து விடாமல், 'கற்றதனால் ஆய பயன் என்கொல்?' என வினவி நம்மையே சிந்திக்க வைக்கின்றார். 'கல்வியின் பயன்' என்னாமல் 'கற்றதனால் ஆய பயன்' என்றதனால் கலை கலைக்காகவே என்பாரையும், பொருளீட்டல் தொழிலியற்றல் போன்ற செயல்களே பயனென்பாரையும் மறுத்து, இவற்றுக்கெல்லாம் வேறான முடிந்த முடிவான மிகமேலான பயன் ஒன்று உண்டு என்று சுட்டினார். இறைவனை வாலறிவன் என்றும், அவனது திருவடிகளை நற்றாள் என்றும் சுட்டிப், பயன் வகைகளைப் பண்புற விளக்கியருளினார். இறைவனைத் தொழுதல் ஓராண்டிற்கோ ஒரு திங்களுக்கோ ஒரு முறையோ அமையும்போலும் என நாம் எண்ணாமல், இறைவனை நாம் இடையறாது எப்பொழுதும் தொழுதல் வேண்டும் என்னும் குறிப்பினைத் 'தொழாஅர்' என்னும் அளபெடையின் குறிப்பினாற் புலப்படுத்தினார். இங்கே அளபெடை இசை நிறைப்பதற்கு மட்டுமேயன்றி, இடைவிடாமை ஆகிய குறிப்புப் பொருளையும் உணர்த்தி வந்தது.

'மலர்மிசை ஏகினான்' :

(2) இறைவன் அன்பால் நினைவாரது உள்ளக் கமலத்தின்கண் அவர் நினைந்த வடிவோடு விரைந்து சென்று அருள்புரியும் இயல்பினன் என்பதனைக்கூற முற்படும் திருவள்ளுவர், அங்ஙனம் இறைவன் அருள்புரிவது அன்பர்கள் நினைந்து வழிபட்டு நெடுங்காலம் கழித்த பின்னரன்றி, நினைத்த அப்பொழுதே யாகும் என்னும் விரைவுக் குறிப்பை, 'ஏகுவான்' 'ஏகுகின்றான்' என்னும் சொற்களாற் கூறாமல், ஏகினான் என்னும் இறந்தகால வழுவமைதிச் சொல்லால் விளக்கியருளியுள்ள திறம் வியக்கற்பாலது.

'தினைத்துணையும் தேறான்' :

(3) பிறர்மனை விழைதலின் தீங்கினையுணர்த்தத் தலைப்படும் திருவள்ளுவர், 'எனைத்துணையர் ஆயினும் என்னாம்?' என முதற்கண் மிகவும் உயர்த்திப் பலர்பாலாற் கூறி, அத்தீங்கு செய்வாரைப் பின்னர் 'தினைத்துணையும் தேறான் பிறனில் புகல்' என ஒருமைப் பாலில் வைத்து இழிவுபடுத்தி, அவர்கள் மாட்டுத் தமக்குள்ள அருவருப்புணர்ச்சியினையும் சினத்தினையும் அறிவிக்கின்றார். 'பன்மை ஒருமை மயக்கம்' என்னும் இலக்கணக் குற்றமும், ஓர் இலக்கியச் சிறப்பாக அமையும் வண்ணம், அழகுபடக் கையாண்டுள்ள திருவள்ளுவரின் திறம் பெரிதும் போற்றற் பாலது.

'போஒம் அளவும் ஓர் நோய்' :

(4) பிறர் சொல்லியும் கேளாமல், தாமும் சிந்தித்து உணராமல், தம் மனம் சென்றவாறு நடக்கும் புல்லறிவாளர்களின் புன்மையையும், அவர்கள்பால் தமக்குள்ள வெறுப்பினையும், சீற்றத்தினையும் ஆசிரியர் திருவள்ளுவர், 'ஏவவும் செய்கலான் தான் தேறான்' என முதற்கண் னகர ஒற்றீற்றுச் சொல்லாற் குறிப்பிட்டு, பின்னர் அதற்கேற்ப 'அம் மனிதன்' என உயர்திணை ஆண்பாலாற் குறியாமல். 'அவ்வுயிர்' என அஃறிணையாகச் சுட்டுதலாலும்; அவ்வளவில் அமையாது நோய் என உருவகம் செய்தலாலும்; நோய் போலச் சமுதாயத்தைப் பற்றிப் பீழிக்கும் அப் புல்லறிவாளர்கள் 'வாழும் அளவும்' எனற் பாலதனைப் 'போம் அளவும்' என்று மாற்றி யுரைத்தலாலும்; நல்லவர்களெல்லாரும் மிக விரைவில் மறைந்துவிட இத்தகைய புல்லறிவாளர்கள் நெடுங்காலம் உலகில் உழன்றுகொண்டிருக்கும் கொடுமையினைப் 'போஒம் அளவும்' என்று அளபெடைக் குறியாற் புலப்படுத்துதலாலும், உணர்த்துகின்றார்.

முடிவுரை :

இத்தகைய சிறந்த நூலை இயற்றி நமக்கு அளித்துச் சென்ற, தெய்வப்புலவர் திருவள்ளுவர்க்கு நாம் செய்யும் நன்றியும் வழிபாடும், அவர்தம் திருக்குறள் நூலினைக் கசடறக் கற்றலும், அதன்வழி நிற்றலுமே யாகும். 'தேவர்கள் கடன் வேள்வியானும், முனிவர்கள் கடன் கேள்வியானும், தென்புலத்தார் கடன் புத்திரப் பேற்றானும் இறுக்கப்படும்' எனப் பரிமேலழகர் குறிப்பிடுதல் ஈண்டு நினைவு கூர்தற்குரியது.

''ஞானநூல் தனையோதல் ஓது வித்தல்
நற்பொருளைக் கேட்பித்தல் தான்கேட்டல் நன்றா
ஈனமிலாப் பொருளதனைச் சிந்தித்தல் ஐந்தும்
இறைவனடி அடைவிக்கும் எழில் ஞானபூசை''

எனச் சிவஞான சித்தியார் கூறுதற்கு இயையத் திருக்குறளை நாம் ஓதுதலும், பிறரை ஓதுவித்தலும், அதன் நற்பொருளை அறிஞர்கள் வாயிலாகக் கேட்டுணர்தலும், பிறரைக் கேட்பித்து உணர்த்துதலும், அதன் பொருள் நலங்களை இடைவிடாமற் சிந்தித்துத் தெளிந்து கடைப்பிடித்து ஒழுகுதலுமே, திருவள்ளுவர்க்கு நாம் இயற்றும் சிறந்த வழிபாடாகும்.

தமிழகத்தில் திருத்தலங்கள்

நீ. ரா. முருகவேள், M.A., M.O.L.

முன்னுரை :

நமது தமிழகம், பலவகைச் சிறப்புகளை உடையது. நமது தமிழகத்திற்போல எண்ணில்லாத திருத்தலங்கள் அமைந்திருக்கும் நாடு, வேறு பிறிதெதுவும் இல்லை எனலாம். ஆழ்வார்களும் நாயன்மார்களும் போன்ற அருட்பெருஞ் சான்றோர்கள் பற்பலர் தோன்றி, தத்தம் பாடல்களில் போற்றிப் புகழ்ந்து துதித்து மகிழ்ந்த பழம்பெரும் தலங்கள், நூற்றுக் கணக்கில் அமைந்து, நம் தமிழகத்தை ஒப்புயர்வற்ற புண்ணிய பூமியாகச் செய்து புனிதப்படுத்தி வருகின்றன.

இப்புண்ணிய பூமியில் வந்து பிறப்பதற்குத் தேவர்களும்கூட, மிகவும் விரும்புகின்றனராம். ''நாம் மண்ணுலகில்-பாரத தேசத்தில்-தெய்வத் தமிழ்நாட்டில் சென்று பிறக்கும்பேறு பெறவில்லையே! இங்கே விண்ணுலகில் இருந்து கொண்டு நாம் நம் வாணாளை வீணாட்களாக்கிக் கொண்டிருக்கின்றோமே! சிவபெருமானால் ஆட்கொள்ளப்படும் சிறப்பு, நிலவுலகில் சென்று பிறப்பவர்களுக்கன்றோ? உரியதாக இருக்கின்றது'' என்று எண்ணித், திருமால் முதலிய தேவர்களெல்லாம் ஏக்கற்று நிற்கின்றனராம்.

இச்செய்தியை மாணிக்கவாசகர் தம்முடைய திருவாசகத்தில், திருப்பள்ளியெழுச்சி என்னும் திருப்பதிகத்தின் இறுதிப்பாடலில், அறுதியிட்டு, உறுதியாகச் சொல்லுகின்றார்.

புவனியிற் போய்ப்பிற வாமையில், நாள்நாம்
 போக்குகின்றோம் அவமே; இந்தப் பூமி
சிவன்உய்யக் கொள்கின்ற வாறுஎன்று நோக்கித்
 திருப்பெருந் துறையுறை வாய்! திரு மாலாம்
அவன் விருப்பு எய்தவும், மலரவன் ஆசைப்படவும்,
 நின் அலர்ந்த மெய்க் கருணையும் நீயும்
அவனியிற் புகுந்தெமை ஆட்கொள வல்லாய்!
 ஆரமுதே! பள்ளி எழுந்தருளாயே!

மாணிக்கவாசகர் கூற்றின்படி, தேவர்களும் புண்ணிய பூமியாகிய இம் மண்ணுலகில் மனிதராகப் பிறந்தால்தான், இறைவனை வழிபடும் பெறலரும் வாய்ப்பு இனிது கைகூடுகின்றது (1). எனவே, தேவர்களும் இப் புண்ணிய பூமியில் வந்து இறைவனை வழிபடுகின்றனர். அங்ஙனம் விண்ணுலகத் தேவர்களும் மண்ணுலகில் போந்து வழிபட்டுள்ள தலங்கள், எண்ணில்லாதன பல, நம் பாரத தேசத்திலும், தமிழ்நாட்டிலும் ஏராளமாக உள்ளன. அத் தெய்வத் திருத்தலங்களின் பெருமையை அறிந்து கொள்ளவும், அங்கெல்லாம் சென்று கண்டு தரிசித்து இறைவனை வழிபட்டு உய்யவும், மக்கள் முயல்கின்றனர் இல்லையே என்று, தாம் இயற்றிய சிவஞான சித்தியார் நூலில், சிந்தை நொந்து வருந்துகின்றார், அருள்நந்தி சிவாசாரியார்.

மானிடப் பிறவி தானும்
 வகுத்தது மனவாக் காயம்
ஆனிடத் தைந்தும் ஆடும்
 அரன்பணிக் காக அன்றோ?
வானிடத் தவரும் மண்மேல்
 வந்தரன் தனைஅர்ச் சிப்பர்!
ஊனெடுத் துழலும் ஊமர்
 ஒன்றையும் உணரார் அந்தோ!

திருத்தலங்கள் :

இவ்வாற்றால் தெய்வத் திருத்தலங்களின் சிறப்பும், தலவழிபாட்டின் மேன்மையும் இத்தகையன என்று யாவரும் உணரலாம்.

(1) "Today I stand here and say with the conviction of truth, that this is the Punya Bhumi, the land of karma. If there is any land on earth that can lay claim to be the blessed **Punya Bhumi**, to be the land to which all souls on this earth must come to account for karma, the land to which every soul that is wending its way Godward must come to attain its last home, the land where humanity has attained its highest towards gentleness, towards generosity, towards purity, towards calmness, above all, the land of introspection and of spirituality — it is India."

—SWAMI VIVEKANANDA.

* சென்னை அய்யனாபுரத்தில், சங்கர விகார் நிலையத்தில், உலக இந்துப் பேரவையின் சார்பில், மலேசிய நாட்டில் இருந்து வருகை புரிந்த, இந்து சங்க அன்பர்களின் பொருட்டு 21-11-77 முதல் 30-11-77 வரையில் நடத்தப்பெற்ற ''இந்துமதச் சிறப்புப் பயிற்சி'' (Advanced Course in Hinduism) வகுப்பில், வேதாந்த வித்தகர் டாக்டர் திரு. டி. எம். பி. மகாதேவன் அவர்கள் விரும்பியபடி நிகழ்த்திய சொற்பொழிவைத் தழுவியது. —ஆசிரியர்.

அருளாளர்கள் வாழ்கின்ற இடங்கள் புனிதம் அடைகின்றன; அவ்விடங்களில் அருளாற்றல் பதிகின்றது; அவ்விடங்களிலிருந்து அருள் அலைகளும், அருட் கதிர்களும் வீசுகின்றன. அவைகளின் மூலம் அவ்விடங்களில் அமைதி தரும் சூழ்நிலை ஏற்படுகின்றது. அது மட்டுமன்றி அவ்விடங்களுக்கு மேலுலகில் வாழும் அருளாளர்கள் வந்து செல்கின்றனர். அதனால் அவ்விடங்களில் அவர்களின் தெய்விக நலங்களும் ஆற்றல்களும் பதிந்து பரவிப் பெருகுகின்றன. இவற்றால் அவ்விடங்கள் புனிதம் மிக்க புண்ணியத் தலங்களாக மாறுகின்றன (2).

நாம் நம் வாழ்க்கையில் கூர்ந்து நோக்கி ஆராய்ந்து நினைந்து காண்போமாயின், ஒருசில இடங்கள் வேறு பிறசில இடங்களைவிட மனத்திற்கு அமைதியையும், மகிழ்ச்சியையும் விளைவிப்பதைக் காணலாம். சில இடங்கள் மனம் குவிந்து தியானம் செய்வதற்கு ஏற்றதாக இருக்கும். அவ் இடங்களில் தெய்வ சிந்தனைகளும், நல்ல சமய உணர்வுகளும், பக்திநெறிப் பாவனைகளும் இயல்பாக உண்டாகும். ஆனால் வெறும் உலகியற் சிந்தனைகளும் செயல்களுமே நிகழ்கின்ற இடங்களிலும், வீண்பேச்சுக்கள், பயனற்ற பொழுதுபோக்குச் செயல்கள், வறுமொழியாளர் வம்பப் பரத்தர் போன்ற தீயவர்கள் நடமாட்டம் ஆகியன நிகழும் இடங்களில், மேற்குறித்தவற்றிற்கு நேர் மாறான இயல்புகளும் செயல்களும் அநுபவங்களுமே, நம்மிடம் நிகழ்தலை நாம் நம் வாழ்க்கையில் கண்டுணரலாம்.(3)

இத்தகைய தீய இடங்களின் வேறாக, அருள்நிறைந்து விளங்கும் அருமை பெருமை மிக்க தூய புனிதப் புண்ணிய இடங்களையே திருத்தலங்கள் என்று, நம் முன்னோர்களும் பெரியோர்களும் புகழ்ந்து போற்றி மகிழ்ந்து வந்துள்ளனர்.

---

(2) "Places may similarly be made sacred, by the living in them of saints, whose pure magnetism, radiating from them, attunes the whole atmosphere to peace-giving vibrations. Sometimes holy men, or beings from the higher worlds, will directly magnetize a certain place, as in the case mentioned in the Fourth Gospel, where an angel came at a certain season and touched the water, giving it healing qualities . . . "

—DR. ANNIE BESANT.

(3) "Anyone who observes himelf will find that some places are more conducive to calm, to meditation, to religious thought, to worship, than others. In a room, a building, frivolous conversation, of mere rush of ordinary wordly life, it is far harder to quiet the mind and to concentrate the thought, than in a place where religious thought has been carried on year after year, century after century ; there the mind becomes calm and tranquil and that which would have demanded serious effort in the first place is done without effort in the second. This is the rationale of places of pilgrimage . . ."

—DR. ANNIE BESANT,

—Esoteric Christianity, p. 260.

வையம்தோறும் தெய்வம் தொழு :

எனவே தலவழிபாட்டின் சால்பினையும் இன்றியமையாமையினையும் நாம் பெரிதும் உணர்தல் வேண்டும். ''வையம்தோறும் தெய்வம் தொழு'' என்பது ஒளவைப் பிராட்டியாரின் அருளுரை. தலங்கள் தோறும் சென்று, அங்கங்கேயுள்ள தெய்வத் திருவுருவங்களை வணங்குக என்பது அதன் பொருள்

நாடும் நகரமும் நற்றிருக் கோயிலும்
தேடித் திரிந்து சிவபெருமான் என்று
பாடுமின் ! பாடிப் பணிமின் ! பணிந்தபின்
கூடிய நெஞ்சத்துக் கோயிலாய்க் கொள்வானே.

—திருமந்திரம், 1445.

எனத் திருமூலரும் தல வழிபாட்டின் சால்பினை வற்புறுத்துகின்றார். இவ்வாறே இராமலிங்க அடிகளாரும், தலங்கள்தோறும் சென்று செய்யும் வழிபாட்டினை விரும்பி உவந்து வற்புறுத்துகின்றார்.

தலங்கள் தோறும் சென்று அவ்விடைஅமர்ந்த
தம்பிரான் திருத்தாளிணை வணங்கி
வலங் கொளும்படி என்னையும் கூட
வாஎன் கின்றனை வாழி என் நெஞ்சே !

—திருவருட்பா.

ஆழ்வார்களும் நாயன்மார்களும் எல்லாம், தல யாத்திரை செய்து, தலங்கள் தோறும் சென்று இறைவனைப் பாடிப் பரவி வழிபட்டு மகிழ்ந்திருக்கின்றனர். அத்தகைய அருளாளர்களும் ஞானிகளுமே, தல யாத்திரையையும் வழிபாட்டையும் இன்றியமையாப் பெருஞ் சிறப்பியற் கடமையாகக் கருதிக் கடைப்பிடித்திருக்கின்றனர் என்றால், நம்மனோர்க்கெல்லாம் தல வழிபாடு எவ்வளவு முதன்மை வாய்ந்தது என்பதனைச் சொல்ல வேண்டுவதில்லை.

தலவழிபாட்டின் பயன் :

தல யாத்திரையும் வழிபாடும் மேற்கொள்ளுவதனால், நாம் எய்தும் நலங்களுக்கு அளவேயில்லை. துன்பமும் துயரமும் நிறைந்த இவ்வுலகத்தில், நம்முடைய குறுகிய வாழ்நாளில், நாம் அடையக்கூடிய ஏதோ ஒருசில இன்பங்களில், உண்மையானதும் உயர்ந்ததும் ஒப்புயர்வற்றதும், தல யாத்திரைகளால் பெறும் இன்பமே எனலாம். தல யாத்திரையால் நாம் நம் கவலைகளை மறக்கின்றோம். நம் மாசுகள் அகன்று, நாம் ஓரளவேனும் புனிதம் அடைகின்றோம். காணாத இடங்களையும் காட்சிகளையும் கண்டு களிக்கின்றோம். கேளாத செய்திகள் பலவும் கேட்டுக் கிளர்ச்சியும் வளர்ச்சியும் பெறுகின்றோம்.

நாட்டின் பல பகுதிகளிலுள்ள பல மக்களைக் கண்டு பழகி, நாட்டு வளப்பங்களை அறிந்து கொள்ளுகின்றோம். தல வழிபாட்டால் நம் உள்ளமும் உணர்வும் புத்துணர்ச்சியும் எழுச்சியும் பெறுகின்றன. உள்ளம் விரிவடைகின்றது. உணர்வு பண்படுகின்றது. இறையருளும் பக்தியும் படிமுறையே நம்மிடம்

வளர்ந்து ஓங்குகின்றன. நாம் நம்முன்னோர்களுடைய அருமை பெருமைகளையும், அழகிய வரலாறுகளையும், அரும்பெரும் செயல்களையும் கண்டும் உணர்த்தும் களிப்புறுகின்றோம். ஆழ்வார்களும் நாயன்மார்களும் பாடிய சிறந்த திருத்தலங்களுக்குச் சென்று தரிசிக்குங்கால், நமக்கும் அவர்களின் அருள் ஆற்றல் ஓரளவு பதிகின்றது. காலமும் இடமும் வேறுபட்டுக் கடந்திருப்பினும், நாம் அவர்களோடு மானதத் தொடர்பு கொள்ளுகின்றோம். அவர்களை நாம் நேரே காண இயலாவிட்டாலும், அவர்களின் தொர்டர்புபெற்ற தலங்களையும் கோயில்களையும் காணுகின்றபோது, ஒருவகையில் அவர்களை நேரே காண்பது போன்ற உணர்ச்சியும் மகிழ்ச்சியும் நமக்கு ஏற்படுகின்றன. (4)

பல்லவரும் சோழரும், பாண்டியரும் பிறரும் வானளாவக் கட்டிய உயர்ந்த கோபுரங்களையும் கோயில்களையும், அவற்றின் எழில் மிக்க அற்புதச் சிற்பத் திருவுருவங்களையும், பிறவற்றையுமெல்லாம் நேருக்கு நேராக நாம் நம் கட்புலனாற் காணுங்கால், நாம் எய்தும் வியப்பிற்கும் விம்மிதத்திற்கும் எல்லையுண்டோ? நம் மனித வாழ்விலேயே நாம் பெறக்கூடிய மிக மேலான சிறந்த தெய்விக இன்பம் இதனிலும் வேறு பிறிதொன்று இல்லை; இருத்தல் இயலாது என்பது தேற்றம்.

சைவ வைணவத் தலங்கள்:

நம்முடைய தமிழகத்தில், நூற்றுக்கணக்கான சைவ வைணவத் தலங்கள் நிறைந்து விளங்குகின்றன. ஆழ்வார்களால் மங்களாசாசனம் செய்யப்பெற்ற வைணவத் திவ்விய தேசங்கள் நூற்றெட்டனுள், வடநாட்டில் 12, திருநாட்டில் 1 நீங்கலாகத், தமிழகத்தில் மட்டும், சோழநாட்டில் 40, பாண்டியநாட்டில் 18, சேர நாட்டில்13, நடு நாட்டில்2, தொண்டை நாட்டில் 22, ஆக மொத்தம் 95 திவ்விய தேசங்கள் உள்ளன. இவ்வாறே சைவநாயன்மார்களால் அருளிச் செய்யப்பெற்ற திருப்பதிகங்கள் கிடைத்துள்ள 275 சிவத்தலங்களில், ஈழநாடு 1, துளுவநாடு 2, வடநாடு 5 நீங்கலாக, சோழநாட்டுத் தலங்கள் 191, பாண்டிய நாட்டுத் தலங்கள் 14, சேரநாட்டுத்தலம் 1, கொங்குநாட்டுத்தலங்கள் 7, நடுநாட்டுத் தலங்கள் 22, தொண்டைநாட்டுத் தலங்கள் 32 ஆக மொத்தம் 267 சிவத்தலங்கள், தமிழகத்தில் விளங்கி வருகின்றன.

---

(4) "We travel that we may see other nations at home — their cities of men and manners, climates, councils, governments : and this we rightly conceive as an important agency in humane culture. The study of literature is also a form of travel ; it enables us to move about freely among the minds of other races : with this advantage that, as Professor Barret Wendell has happily said, it gives us the power of travelling also in Time. We become familiar not only with the minds of other races, but with the minds of other epochs as well."

—William Henry Hudson.

இத் திருத்தலங்கள் அனைத்துமே, சுமார் 1,000 ஆண்டுகளுக்கும் மிக முற்பட்டவை. அதனால் மிக்க பழமையும், பெருமையும், வரலாற்றுச் சிறப்பும் வாய்ந்தவை. இத் திருத்தலங்களில் அமைந்துள்ள கோயில்கள் ஒவ்வொன்றும், அழகும் சிறப்பும் தனித்தனி அமைப்பும் உடையவை. அவற்றின் சுற்றுச் சூழலும், இயற்கையமைப்பும், எவருள்ளத்தையும் கொள்ளை கொள்ள வல்லவை. இவற்றின் அருமை பெருமைகளுக்கு எல்லையே இல்லை. இத்தலங்களும் கோயில்களும் எல்லாம், இயற்கையழகு மிக்க மலைப்பகுதிகளாகிய குறிஞ்சி நிலங்களிலும்—எழில்மிகுந்த கடற்கரை ஓரங்கள் ஆகிய நெய்தற் பகுதிகளிலும்—குளிர்ந்த சோலைகள், அடர்ந்தகாடுகள், நல்ல பூம்பொழில்கள் நிறைந்துள்ள முல்லைத் திணைப் பகுதிகளிலும்—நீர்வளம் நிலவளம் மிக்க ஆற்றோரங்கள், நிலவளம் நிறைந்து பசுமை மிக்க வயல்கள் பரவியுள்ள அழகிய இடங்கள் ஆகிய மருதநிலப் பகுதிகளிலும் — தெய்விகநலம் செறிந்தனவாக அமைந்து விளங்கும் சிறப்பு, அவைகளுக்கு நேராகத் தாமே சென்று பலகால் தரிசித்து மகிழ்பவர்களுக்கே பெரிதும் புலனாகும். இத்திருத்தலங்களின் அருமை பெருமைகளை வெறும் சொல்லலளவில் கூறுவதனாலோ, கேட்பதனாலோ, பெரும் பயன் இல்லை. அவைகளுக்கெல்லாம் நாம் நம் வாழ்நாளில் எத்தனை முறை இயலுமோ, அத்தனை முறைகளும் சென்று நேரிற் கண்டு தரிசித்து வணங்கி மகிழ்ந்து இன்புறுதல் வேண்டும்.

"ஊனடைந்த உடம்பின் பிறவியே
தானடைந்த உறுதியைச் சாருமால்;
தேனடைந்த மலர்ப்பொழில் தில்லையுள்
மாநடம்செய் வரதர்பொற் றாள்தொழ"

என்று சேக்கிழார் பெருமான் அருளிச் செய்திருத்தல் போல, நாம் ஊனடைந்த உடம்பின் பிறவியின் உறுதியைச் சார்தல் வேண்டுமாயின், இத் திருத்தலங்களுக்குச் சென்று தரிசித்தல் மிகமிக இன்றியமையாததாகும்.

காஞ்சிபுரம்:

நம் தமிழகத்தில் அமைந்துள்ள ஏராளமான கோயில்களின் சிறப்பை விளக்குவதற்குக் காஞ்சிபுரம் ஒன்றுமட்டுமே சான்றாதற்குப் போதியதாகும். காஞ்சிபுரம் தொன்னெடுங்காலம் முதலே நம் இந்திய தேசம் முழுவதும் புகழ்பெற்று விளங்கிவரும் சிறந்த நகரங்களில் ஒன்றாகத் திகழ்ந்து வருகிறது. "கல்வியிற் கரையிலாத காஞ்சிமாநகர்" என்றும்; "தேசமெல்லாம் புகழ்ந்தாடும் கச்சி" என்றும் "முத்தி தரும் நகரேழில் முதன்மையதாம் காஞ்சி" என்றும் பெரியோர்கள் இதனைப் போற்றியுள்ளனர். இத்தகைய காஞ்சிமா நகரில் பெருமாள் கோயில்கள் பலப்பல இருக்கின்றன.

1. திருக்கச்சி அத்திகிரி — வரதராஜ சுவாமி (தேவராஜ சுவாமி) கோயில்.
2. திருவெஃகா— யதோக்தகாரி சந்நிதி என்னும் சொன்னவண்ணம் செய்த பெருமாள் கோயில்.

3. அஷ்டபுயகரம்.
4. வேளுக்கை—ஆளழகிய சிங்கர் கோயில்.
5. திருத்தண்கா — ஸ்ரீ விளக்கொளி கோயில்
6. ஊரகம்
7. நீரகம்
8. காரகம் } உலகளந்த பெருமாள் கோயிலில் உள்ளவை.
9. கார்வானம்
10. பரமேசுர விண்ணகரம் — வைகுண்டப் பெருமாள் கோயில்.
11. பவளவண்ணம்
12. நிலாத் திங்கள் துண்டம் — திருவேகம்ப நாதர் கோயிலிலுள்ளது
13. கள்வனூர் — காமாட்சியம்மை கோயிலில் உள்ளது.
14. திருப்பாடகம் — பாண்டவ தூதர் சந்நிதி.
15. நரசிங்கப் பெருமாள் கோயில்.
16. முகுந்தப் பெருமாள் கோயில்.
17. உள்ளுவார் உள்ளத்தான் கோயில்.
18. பச்சை வண்ணர் கோயில்.

இவைகளுள் முதற்கண் உள்ள பதினன்கும் ஆழ்வார்களின் பாடல்களில் குறிப்பிடப்பெற்று, மங்களாசாசனம் செய்யப்பெற்றவை; பின்னுள்ள நான்கும் தலபுராணங்களில் குறிப்பிபிடப்பெற்றுள்ள சிறப்பு வாய்ந்தவை. இவைகளேயன்றிக் கச்சிஏகம்பம், கச்சிநெறிக்காரைக்காடு, கச்சிமேற்றளி, கச்சிஅனேகதங்காவதம், கச்சிமயானம் என்னும் பாடல்பெற்ற சிவத்தலங்களும், கச்சபேசுவரர்கோயில், கயிலாசநாதர் கோயில், காமகோட்டம், குமரகோட்டம் முதலிய மற்றும் எத்தனையோ பல சிவாலயங்களும், காஞ்சிபுரத்தில் மிகுதியாக அமைந்து விளங்குகின்றன.

கும்பகோணம்:

இவ்வாறே, 12 ஆண்டுகளுக்கு ஒருமுறை நிகழும் மகாமகப் பெருவிழாவினுல் அனைத்திந்தியப் புகழ்பெற்று விளங்கும் கும்பகோணத்தின்கண், கும்பேசுவரர்கோயில், நாகேசுவரர் கோயில், மடந்தைபாகர்கோயில், காரோணேசுவரர் கோயில், சோமேசுவரர் கோயில், நாளிகேரேசர்கோயில், மாலதிவனேசரர்கோயில், கைலாசநாதர்கோயில் என்னும் சிவபிரான் கோயில்களும், சாரங்கபாணி கோயில், சக்கரபாணிகோயில், வரதராஜப் பெருமாள்கோயில், இராமசாமி கோயில் முதலிய பல திருமால்கோயில்களும் அமைந்துள்ளன. இங்ஙனம் தமிழகத்தில் உள்ள நகரங்கள் பலவற்றில் அமைந்துள்ள கோயில்களுக்கு அளவில்லை. அவைகளையெல்லாம் நேரிற் சென்று கண்டே, நாம் மகிழ்தல்வேண்டும்.

பஞ்சபூதத் தலங்கள் :

இனிப் பொதுவாகத் தமிழகத்தில் உள்ள கோயில்களில் பஞ்சபூதத்தலங்கள், அட்டவீரட்டத்தலங்கள், சப்தவிடங்கத் தலங்கள், ஆறுபடைவீடுகள், நவக்கிரகத் தலங்கள், சப்தஸ்தானம் என்னும் ஏழூர்க்கோயில்கள் எனப் பலவகைகளில் தனித்தனியாகத் தொகுத்துச் சிறப்பித்துக் குறிப்பிடுவதுண்டு.

பஞ்சபூதத் தலங்களுள், காஞ்சிபுரமும், திருவாரூரும் பிருதிவித்தலம்; திருவானைக்கா அப்புத்தலம்; திருவண்ணுமலைத் தேயுத்தலம்; திருக்காளத்தி வாயுத் தலம்; சிதம்பரம் ஆகாசத்தலம் எனப்படும்.

அட்டவீரட்டத் தலங்கள் :

அட்டவீரட்டத் தலங்கள் என்பன, சிவபெருமானுல் எட்டுவகையான வீரச் செயல்கள் நிகழ்த்தப் பெற்ற இடமாகும். இவற்றைத் திருநாவுக்கரசர், ''அட்டானம் என்று ஓதிய நாலிரண்டும்'' என்று குறிப்பிட்டுள்ளார். பிரமனின் தலை கொய்த தலம் திருக்கண்டி. அந்தகாசுரனை அழித்த தலம், திருக்கோவலூர். திரிபுரத்தை எரித்த தலம், திருவதிகை. தக்கனின் தலை பறித்த தலம், திருப்பறியலூர். சலந்தராசுரனை அழித்த தலம் திருவிற்குடி. கஜாசுரன் என்னும் யானையின் தோலுரித்து அழித்த தலம் வழுவூர். காமதகனம் செய்த தலம் திருக்குறுக்கை. காலசம்மாரம் புரிந்த தலம் திருக்கடவூர்.

''பூமன் சிரம்கண்டி; அந்தகன்
கோவல்; புரம்அதிகை;
மாமன் பறியல்; சலந்தரன்
விற்குடி; மா வழுவூர்;
காமன் குறுக்கை; எமன் கடவூர்;
இந்தக் காசினியில்
தேமன்னு கொன்றையும் திங்களும்
சூடிதன் சேவகமே''

சப்தவிடங்கத் தலங்கள் :

திருவாரூர், திருநள்ளாறு, திருநாகைக்காரோணம், திருக்காறாயில், திருக்கோளிலி, திருவாய்மூர், திருமறைக்காடு என்னும் ஏழு தலங்களும், சப்தவிடங்கத் தலங்கள் என்று கூறப்படும். இவைகளில் எழுந்தருளியுள்ள இறைவனுக்கு முறையே தனித்தனிப் பெயரும் நடனமும் உண்டு. திருவாரூரில் வீதிவிடங்கர், அசபாநடனம். திருநள்ளாற்றில் நகவிடங்கர், உன்மத்தநடனம். திருநாகைக்காரோணத்தில் சுந்தரவிடங்கர், பாராவாரதரங்க நடனம், திருக்காறாயிலில் ஆதிவிடங்கர், குக்குட நடனம் திருக்கோளிலியில் அவனி விடங்கர், பிருங்க நடனம். திருவாய்மூரில் நீலவிடங்கர், கமல நடனம். திருமறைக்காட்டில் புவனி விடங்கர், அம்சபாத நடனம் என்று, தனித்தனிப் பெயர்களும், நடன வகைகளும் சிறப்பியல்பாக அமைந்துள்ளன. 'வகைப்பாடு வாழ்க்கையின் வளம்' (Variety is the Spice of Life) என்னும் அடிப்படையில், இறைவன் ஒருவனுக்கே இவ்வாறு வெவ்வேறு தலங்களில், வெவ்வேறு பெயர்களை வழங்கி, வெவ்வேறு நடனத்திறங்களையும் உரிமைப்படுத்தித் தொன்றுதொட்டுப் போற்றி மகிழ்ந்து ஈடுபட்டு வரும் தமிழ் மக்களின் தலைசிறந்த கடவுள் உணர்வும், கலைத்திறனும், நினைத்தொறும் இன்பமும் பெருமிதமும் பயப்பனவாகும். இந்தச் சப்த விடங்கத் தலங்களுள் நிகழும் எழுவகை நடனங்களும் நேராகவே கண்டு களிக்கத் தக்கவை.

முருகன் தலங்கள் :

தமிழகத்தில் எத்தனையோ பல முருகனின் திருத்தலங்கள், மிகவும் புகழ் பெற்றனவாக விளங்குகின்றன. அருணகிரிநாதர் அருளிய திருப்புகழ்ப் பாடல்களைப் பெற்றுள்ள திருத் தலங்கள் அனைத்தும், முருகனின் தலங்களாகப் புகழ்மிக்கு விளங்கி வருகின்றன. எனினும், திருப்பரங்குன்றம், திருச்சீரலைவாய் (திருச் செந்தூர்), திருவாவினன்குடி (பழநி), திருவே ரகம் (சுவாமிமலை), குன்றுதோறாடல் (திருத் தணிகை), பழமுதிர்சோலை (அழகர்கோயில்) என்னும் ஆறு திருத்தலங்களும், திருமுருகாற் றுப்படை பாடிய நக்கீரர் காலத்திலிருந்தே சுமார் 2,000 ஆண்டுகளுக்கும் மேலாக, முருக னின் புகழ் மிக்க தலங்களாகப் போற்றப் பெற்று விளங்கி வருகின்றன.

அம்பிகையின் தலங்கள்:

இவ்வாறே திருவொற்றியூரிலே வடி வுடையம்மை, திருமயிலையில் கற்பகாம்பாள், காஞ்சிபுரத்தில் காமாட்சியம்மை, திருவண்ணு மலையில் உண்ணுமுலையம்மை, சிதம்பரத்தில் சிவகாமியம்மை, திருவானைக்காவில் அகிலாண் டேசுவரி, திருக்கழுக்குன்றத்தில் திரிபுரசுந்தரி, திருக்காளத்தியில் ஞானப்பூங்கோதை, திருவை யாற்றில் அறப்பெருஞ் செல்வியம்மை, திரு வாரூரில் கமலாம்பிகை, கும்பகோணத்தில் மங்களநாயகி, நாகையில் நீலாயதாட்சி யம்மை, திருக்குற்றாலத்தில் குழல்வாய்மொழி யம்மை, திருநள்ளாற்றில் போகமார்த்த பூண் முலையம்மை, திருநெல்வேலியில் காந்திமதி யம்மை, வைத்தீசுவரன்கோயிலில் தையல் நாயகி, திருக்கடவூரில் அபிராமியம்மை, மதுரையில் மீனாட்சியம்மை, இராமேசுவரத் தில் பர்வதவர்த்தினி, கன்னியாகுமரியில் பக வதியம்மை, திருவேற்காட்டில் தேவிகருமாரி யம்மை ஆகிய அம்பாள் திருக்கோயில்களா கிய சக்திபீடங்கள் பெரும் புகழ் வாய்ந்து திகழ்ந்து வருகின்றன. இவற்றின் அருமை பெருமைகளும் தனித்தனியான சிறப்பியல்பு களும், நேரில் சென்று கண்டுணர இயலுமே யன்றி, வெறும் சொற்களால் விவரித்துரைக்க இயலாதனவாகும்.

சித்தர்கள் வாழும் தலங்கள் :

தமிழகத்தில் உள்ள தலங்கள் பலவற்றில், சித்தர்கள் பற்பலர், பண்டும் இன்றும் என்றும் வாழ்ந்து வருகின்றனர் எனப் பெரியோர்கள் கூறுவர். பல தலங்கள் தெய்விகச் சிறப்பும் ஆற்றலும் பெற்றுத் திகழ்ந்தோங்கி விளங்கு தற்குக் காரணம், அவ்விடங்களில், சித்தர்கள் பலர் சமாதிகூடித் தவம் புரிந்து வருகின்றனர் என்பர். அதன்படி திருமூலர் சிதம்பரத்தி லும், திருநந்திதேவர் சீர்காழியிலும், தன் வந்திரி வைத்தீசுவரன்கோயிலிலும், கமல முனி திருவாரூரிலும், சட்டைமுனி திருவரங் கத்திலும், கருவூர்த்தேவர் கருவூரிலும், போகர் பழநியிலும், சுந்தரானந்தர் மதுரை யிலும், மச்சமுனி திருப்பரங்குன்றத்திலும், கும்பமுனி திருவனந்தபுரத்திலும், கோரக்கர் திருப்பருப்பதத்திலும், குதம்பைச் சித்தர் திருக்கழுக்குன்றத்திலும், அகப்பேய்ச்சித்தர் திருமுதுகுன்றத்திலும், பாம்பாட்டிச் சித்தர் திருக்கடவூரிலும், கவரிமான்முனிவர் திருக் காளத்தியிலும், பதஞ்சலிமுனிவர் இராமேசு வரத்திலும், இடைக்காட்டுச் சித்தர் திரு வண்ணுமலையிலும், இராமதேவர் அழகர் மலையிலும், வால்மீகி முனிவர் எட்டிகுடியிலும் சமாதிகொண்டு வாழ்ந்து வருகின்றனர் என்று, அத்தலங்களின் பெருமையைப் பெரியோர்கள் புகழ்ந்து கூறுவர்.

முடிவுரை:

''கடல்கண்டோம் என்பார் யாவரே முடி வுறக் கண்டார்'' என்று, கவிச்சக்கரவர்த்தி கம்பர் பாடுதல்போல, எல்லையற்ற பெருமை மிக்க தமிழகத்துத் திருத்தலங்களின் பெருமை களையெல்லாம், முற்றமுடி எடுத்துச் சொல்லு வது, எவருக்கும் இயல்வது ஒன்றன்று. எனவே, நாம் அனைவரும் நம்முடைய குறுகிய சிறிய வாழ்நாளில், பொன்னும் பொருளும் போகமும் பிறவுமே தேடி அலைந்துழலாமல், அவற்றிற்கு இடையிடையிலேனும் இயன்ற பொழுதெல்லாம் தலயாத்திரையும் வழிபாடும் செய்வதற்குரிய வாய்ப்பு வசதிகளை, எவ்வாற்று லேனும் தேடி முயன்று அமைத்துக்கொண்டு இறைவனை வழிபடல் வேண்டும்.

. ''மூர்த்தி தலம் தீர்த்தம்
முறையாய்த் தொடங்கினர்க்கு ஓர்
வார்த்தை சொலச் சற்குருவும்
வாய்க்கும் பராபரமே''

எனத் தாயுமான சுவாமிகள் அருளிச் செய்தி ருத்தலால், தலயாத்திரையின் பயனும் இன்றி யமையாமையும் இனையவென உணரலாம். எனினும் ''தவமும் தவமுடையார்க்கு ஆகும்'' எனத் திருவள்ளுவர் குறிப்பிடுவதற்கு ஏற்ப, இத்தகைய ஒரு சிறந்த நல்ல பேறும்வாய்ப்பும் வசதியும், செல்வவளம் பெற்றிருப்பினும் எல் லோருக்குமே கிடைப்பதில்லை. எத்தனையோ பலர் மிக்க பெருஞ் செல்வர்களாக இருப் பினும், தக்க ஓய்வும் வாய்ப்பும் பண்பட்ட நல்ல மனப்பக்குவமும் அமையப் பெறுமை யால், தலயாத்திரையும் வழிபாடும் செய்ய முடியாமல், உலகியற் சகதிகளிலேயே வறிதே கிடந்து உழன்று அலைந்து திரிந்து இறந்து போகின்றனர். அவர்களின் நிலை மிகப் பெரி தும் இரங்கத்தக்கது.

பெறுதற் கரிய பிறவியைப் பெற்றும்
பெறுதற் கரிய பிரான்அடி பேணர்
பெறுதற் கரிய பிராணிகள் எல்லாம்
பெறுதற் கரியதோர் பேறுஇழந் தாரே''

எனத் திருமூலர் பாடுதல்போல, நாம் பெ தற்கரிய பிறவியைப் பெற்றும், அதன் பய இழந்து போகாதபடி, 'காலம் உண்டாகவே காதல் செய்து உய்மின்' என்று மணிவாசகர் பணித்தருளியதற்கு ஏற்ப, நம் தமிழகத்தில் உள்ள, சைவ வைணவத் திருத்தலங்களையேனும் சென்று கண்டு வணங்கி, இறையருள் பெற்று இன்புற்று வாழ முயலுவோமாக!

**

குலசைச் சான்றோர்

''அருண்மொழியரசு'

திருமுருக. கிருபானந்த வாரியார் சுவாமிகள்

புண்ணியம் மிகுந்த நம் நாட்டில் பற்பல ஆன்றோர்கள் வாழ்ந்தார்கள். அவர்கள் பிறர் அறியாதவண்ணம் ஒதுங்கியும் ஆடம்பரமின்றியும் நீறுபூத்த நெருப்புபோல் வாழ்ந்தார்கள். அப்படி வாழ்ந்தவர்களை நம்மால் நன்கு அறிய முடிவதில்லை. வானத்தில் பறவை சென்ற வழியையும் தண்ணீரில் மீன் சென்ற வழியையும் எப்படிக் காண முடிவதில்லையோ அதுபோல் ஞானிகள் வாழ்ந்து சென்ற வழியையும் அறிய முடிவதில்லை. இந்த வகையில் நின்றவர்களில் ஒருவர் குலசை ஞானியார். அவருடைய இனிய வரலாற்றை ஒருவாறு இங்குக் குறிப்பிடுகின்றேன்.

ஆறுபடை வீடுகளில் ஒன்றாகியதும், கடற்கரையில் இயற்கை வனப்புடன் விளங்குவதும் ஆகிய திருச்செந்தூருக்குத் தென் திசையில் எட்டுகல் தொலைவில் உள்ளது குலசேகரன்பட்டினம் என்ற நகரம். அந்நகரம் மூவேந்தர்களும், கோடைக் காலத்தில் வந்து தங்கி மகிழும் பெருமையுடையது. குலசேகர பாண்டியன் இந்நகரை உயர்வுறச் செய்தபடியால், அவன் திருப்பேரால் இது வழங்கப்பெறுகின்றது. கடற்கரையில் மிக்க இனிமையாக விளங்குவது. பழைய காலத்தில் இது துறைமுகப்பட்டினமாக இருந்தது. காலச்சுழலால் பின்னர் துறைமுகமாகத் தூத்துக்குடி பெருமைபெற்றது.

காரைக்காலம்மையாருடைய கணவன் பரமதத்தன் இத்துறைமுகமாகிய குலசேகரன் பட்டினத்தில் வந்து தங்கிப் பெருவாணிபம் புரிந்தான் என்றும், மறுமணம் இங்கு தான் புரிந்து கொண்டான் என்றும் ஆன்றோர் கூறுவர்.

பாண்டிய மன்னர்களின் ஆட்சி நிலை குலைந்தபின் பற்பல குறுநில மன்னர்கள் பாண்டி நாட்டைத் துண்டு துண்டாக ஆட்சி செய்யத் தலைப்பட்டார்கள். அவர்களுள் ஒருவர் ''செந்தில் காத்த மூப்பனார்''. இவருடைய சந்ததியார்கள் இன்னும் இருக்கின்றார்கள். திருச்செந்தூரில் நாலாந் திருவிழா இவர்கள்தான் இன்றும் புரிகின்றார்கள்.

செந்தில் காத்த மூப்பனாரிடம் அமைச்சராக இருந்தவர் முத்தண்ணந்த பெருமாள்பிள்ளை என்பவர். இவர் கல்வி கேள்விகளில் தலைசிறந்தவர். பண்பு மிக்கவர். இவருடைய ஒப்பற்ற உயர்வைக் கண்டு, இவரை யாவரும் ஞானியார் என்றே அழைத்தனர்.

இவர் நாள்தோறும் பகலில் அரசகாரியங்கள் அனைத்தும் புரிந்துவிட்டு, இரவில் கடற்கரை வழியே திருச்செந்தூர் சென்று அர்த்தயாம பூஜையைக் கண்டு களித்துவரும் நியதியினை வழுவாது கொண்டிருந்தார். மலையாளத்தில் பத்மநாபப்பிள்ளையன் என்பவர் பூதப்பாண்டி முதலிய பகுதிகளை அப்போது ஆண்டு வந்தார். அக்காலத்தில் மந்திரவாதிகள் பலர் அங்கு இருந்தார்கள். அவர்கள் சிறு தேவதைகளை மந்திரத்தால் வசியஞ்செய்து பற்பல கருமங்களைப் புரிந்து வந்தார்கள். இத்தகைய மாந்திரீகர்களில் மிகவும் பெயர்பெற்றவர் பொல்லாப்பிள்ளை ஆசான் என்பவர். உள்ளபடியே பொல்லாதவர்தான் இவர். மலையாள மன்னர் இவரை அழைத்து ''இலங்கையிலே கண்டி மன்னவருடைய புதல்வியைக் கொணர்ந்து தரவேண்டும்'' என்று வேண்டினார். மந்திரவாதி அதற்கு இசைந்து சில தேவதைகளைக் கண்டிக்கு ஏவினார். அத்தேவதைகள் கண்டி சென்று கன்னிமாடத்தில் துயின்று கொண்டிருந்த அரசகுமாரியைக் கட்டிலுடன் தூக்கிக்கொண்டு விண்வழியே சென்று கொண்டிருந்தன.

ஞானியார், குலசேகரன்பட்டினத்தில், மூப்பனார் குளத்தில், கைகால்கள் கழுவிக் கொண்டிருந்தார். நல்ல நிலவு, வானத்தில் போகும் கட்டிலின்நிழல், நீரில் தெரிந்தது. ஞானியார் திருந்செந்தூர் சென்று இரவு பூசையைத் தெரிசித்து வந்து, அங்குள்ள பிள்ளையாரையும் வணங்குவது வழக்கம். குளத்தின் படியில் நின்றுகொண்டிருந்த அவர், இது சிறு தேவதைகளின் செயல் என்று அறிந்தார். தமது திருக்கரத்தினால் கட்டிலை இறக்குமாறு காட்டினார். தேவதைகள் அவருக்குமுன் கட்டிலுடன் அம்மாதரசியை இறக்கி வைத்தன.

ஞானியார் சிறிது ஜெபஞ் செய்தபின் கட்டிலில் துயிலும் அரசகுமாரியைக் கண்டு இரக்கமுற்றார். நடந்த செயலைத் தமது திருவுள்ளத்தில் அறிந்துகொண்டார். இவளை மீண்டுங் கொண்டுபோய்க் கண்டியில் அரண்மனையில் விட்டுவிடுமாறு அத் தேவதைகளுக்குக்

கட்டளையிட்டார். இவருடைய அருட்டிறத்திற்கு அஞ்சிய அத்தேவதைகள் அவ்வாறே அம் மாதரசியை உரிய இடத்தில் சேர்த்துவிட்டு அஞ்சியகன்றன.

மந்திர சத்தியால் இதைப் பொல்லாப் பிள்ளை ஆசான் அறிந்தார். பலப்பல துர்த்தேவதைகளை இவரைக் கொல்லும் பொருட்டு ஏவினார்; அக் கொடிய தேவதைகள் இவரிடம் வந்து இவருடைய தவ வலிமையையும், முருகன் கருணைத் திறத்தையும் பார்த்துவிட்டு, நடுங்கி ஒடுங்கி வறிதே மீண்டு சென்றன.

மந்திரவாதி முடிவில் வயிரவரை ஏவினார். வயிரவர் உக்கிர வடிவுடன் வந்தனர். ஞானியார் வயிரவரை நோக்கி ''இனி நீர் அம் மந்திரவாதியிடம் போகக்கூடாது. இங்கேயே இரும்'' என்று தனது வீட்டுக்கு முன் ஒரு பீடம் இட்டு அவரை அங்கேயே இருத்திவிட்டார். செந்திலாண்டவன் கருணை பெற்ற அவருடைய விருப்பப்படி வயிரவர் அங்கேயே தங்கிவிட்டார். இன்றும் இவருடைய குடும்பத்தார் இந்த வயிரவருக்கு வழிபாடு புரிந்து வருகின்றார்கள்.

ஞானியாரைக் கொல்ல அனுப்பிய தேவதைகள் ஒன்றேனும் திரும்பி வராததைக் கண்ட பொல்லாப்பிள்ளை ஆசான் மருண்டார். மனங் கலங்கினார். அவரும், பத்மநாபப்பிள்ளையன் என்ற மலையாள மன்னவனும் குலசை வந்து ஞானியாரைக் கண்டார்கள். ஞானியார் அவர்களை வரவேற்று இன்னுரை கூறி இனிய உணவுகளை வழங்கினார். சிறிது நேரத்திற்குப்பின் மந்திரவாதியை அழைத்து, தமது வீட்டின் ஒரு அறையின் கதவைத் திறந்து பார்க்குமாறு கூறினார். அவர் திறந்து பார்த்தார். அந்த அறையில் அவருடைய மனைவி மக்களைக் கண்டார், கலங்கினார், அந்தோ என்று அலறினார். ஞானியார் கதவை மூடி மறுபடியும் திறக்கச் சொன்னார். அவர்கள் அப்போது அங்கு காணப் பெறவில்லை.

பொல்லாப் பிள்ளையாசானுக்கு ஞானியார் அறவுரை கூறி, ''உனது மனைவி மக்களை யான் மந்திரத்தால் இங்கு அழைத்ததைக் கண்டு நீ வாடி வருந்தியது போல்தானே, கண்டி மன்னவன் மகளை அழைத்தால், அம்மன்னவன் வருந்துவான். ஆதலால் மந்திர சக்தியைத் தீயவழியில் செலுத்துவது முறையன்று. இனி அவ்வண்ணம் செய்யாதே. நல்வழியில் நடந்து நலம் பெறுவாயாக'' என்று கூறிப் போய்வருமாறு கட்டளையிட்டார். வணங்கிய மன்னவனும் மந்திரவாதியும் திரும்பிச் சென்றார்கள்.

ஞானியாருடைய பெருமை எங்கும் பரவியது. இவருடைய தளர்ந்த வயதைக் கண்ட செந்தில்காத்த மூப்பனார், இனி இவரை அரச காரியத்தில் ஈடுபடுத்தி வருத்துவது பிழையென்று கருதி, பொன்னும் பொருளும் வழங்கி அவரை வீட்டிலேயே இருந்து இளைப்பாறுமாறு செய்தான்.

ஞானியார் வயது முதிர்ந்து தளர்ச்சியுற்றிருந்த நாளிலும் நாள்தோறும் கடற்கரை வழியே செந்திலுக்குச் சென்று கந்தவேளை வழிபட்டு வருவதை நிறுத்தவில்லை.

ஒரு நாள் இரவில் செந்திலுக்குச் சென்று கொண்டிருந்தார். மழைக்காலம். நல்ல இருட்டு. ஞானியார் சற்று வழிதவறித் திகைப்புற்றார். அவருக்கு முன்னே ஒருவர் விளக்கும் செயகண்டியும் கொண்டு ''ஐயா! நான் திருச்செந்தூருக்குச் செல்லுகின்றேன்; என்னுடன் வாரும்'' என்று கூறி அவரை அழைத்துக் கொண்டு போய்க் கோயில் ஷண்முக விலாசத்திற்கு முன்னிட்டு மறைந்தார். முருகனே வந்து தனக்கு வழிகாட்டினார் என்று அறிந்த ஞானியார் உள்ளம் உருகினார். ''முருகா' உன் கருணையிருந்தவாறு என்னே! மூவருந் தேவரும் காணாத உனது திருவடி ஏழையேன் பொருட்டு நிலத்தில் நடந்து வந்ததே! ஆ! என்ன அதிசயம்! ஐயனே! இப்பாவியின் பொருட்டு நீ நடந்தனையே! செயகண்டி தட்டிக்கொண்டு விளக்கேந்தி எட்டுகல் நடந்து வந்தாயே! கருணைக் கடலே! கலியுக வரதா! பக்தி இல்லாப் பாவியேனிடம் உனக்கு இத்துணைக் கருணையிருந்ததே'' என்று கூறியழுதார், அஞ்சலி செய்தார்.

கோயிலில், ஞானியார் வரவுக்காக அர்த்த யாம பூசையைச் செய்யாது காத்துக்கொண்டிருந்தனர். அவரைக் கண்டபின் அப்பூஜை நிகழ்ந்தது. ஆண்டவனை அன்புடன் வழிபட்டு அன்றிரவே ஞானியார் திரும்பிக் குலசேகர பட்டினஞ் சேர்ந்தார்.

ஒருநாள் திருச்செந்தூர்க் கோயிலில் ஞானியார் ஒரு புறம் நின்று எம்பெருமானைச் சேவித்துக் கொண்டிருந்தார். அந்த வட்டாரத்தை யாண்டுகொண்டிருந்த அரசியல் தலைவன் ஒருவன் கோயிலுக்கு வந்தார். அவனுடன் வந்த அதிகாரி ஒருவன் ஞானியாரைப் பார்த்து அவர் பெருமையை அறியாது ''ஓய்! அதிகாரி வருகின்றார், நீ ஏன் தூண்போல் நிற்கின்றாய்? விலகிப்போ, என்று கூறி அதட்டினான். ஞானியார் சற்று விலகி நின்றார். இதனை யறிந்த கோயிலில் உள்ளவர்கள் ''ஐயா! அவர் ஞானியார். மிகவும் பெரியவர். அவரை விரட்ட வேண்டாம்'' என்றார்கள். அதைக் கேட்ட அரச அதிகாரி, ''ஓ ஞானியாரா? மழையை வரவழைப்பாரோ?'' என்று கூறிப் பரிகசித்தான். சுவாமி தரிசனை முடிந்ததும் கோயிலை விட்டுப் புறப்பட்டான்; வெளியே வந்தான். வந்தன இடியும் மழையும். அவனை அன்றிரவு, முழுவதும் வீட்டிற்குப் போகாவண்ணம் தடுத்தது. அப்போது அவன் ஞானியார் பெருமையை யுணர்ந்து அவர் பாத கமலங்கள் மீது வீழ்ந்து மன்னிப்புக் கேட்டுக் கொண்டா

ஞானியாருக்கு நிரம்பவும் மூப்பு வந்துவிட்டது. செந்தில் மேய கந்தக் கடவுள் அவருடைய கனவில் சென்று ''அன்பனே! உனக்கு அதிக வயதாகிவிட்டது. நீ இனி தள்ளாடிக் கொண்டு செந்திலுக்கு வரவேண்டாம். இரவில்

அர்த்தயாம பூசை முடிந்தபின், நானே உன் வீட்டிற்கு வருவேன். என்னைத் தெரிசிப்பா யாக! என்று அருள்புரிந்தார். அதுமுதல் ஞானியார் இரவில் தமது பூசை வீட்டில் முருகனை வழிபட்டார். இவருடைய வீட்டிற்கு, முருகன் படுக்கை வீட்டுக்கோயில் என்ற பெயர் ஏற்பட்டது. இன்றும் இது குலசையில் இருக் கின்றது. இவருடைய சந்ததியார்கள் இங்கு வழிபாடு புரிந்து வருகின்றார்கள்.

ஒருநாள் ஞானியார் குலசையில் மிக்க தளர்ச்சியுடன் படுக்கையில் இருந்தார். உச்சிப் பொழுது. நல்லவெயில், அதே சமயத்தில் திருச்செந்தூர்க் கோயிலில் ஞானியார் கொடி மரத்தின் அருகில் வழக்கமாக நின்று சேவிப் பதுபோல் செந்தலாண்டவனைச் சேவித்துக் கொண்டு நின்றார். எல்லோருங் காண அவர் திடீர் என்று மூலத்தானத்திற்குள் நுழைந் தார். இது என்ன அநியாயம். இவர் மூலத் தானத்திற்குள் நுழைந்து போகின்றாரே? இது தகுமா? முறையா? என்று அர்ச்சகர்கள் திகைத்து அவர் பின் உள்ளே சென்றார்கள். ஞானியார் உருவம் உள்ளே முருகப்பெருமான் திருவுருவில் கலந்து மறைந்துவிட்டது.

இதே சமயம் குலசேகரப்பட்டினத்தில் ஞானியாருக்கு ஆவி பிரிந்தது. பின்னர் அங்கி ருந்து சிலர் அபிஷேக தீர்த்தங் கொண்டு போகக் கோயிலுக்கு வந்து, ஞானியார் ஆன்மா சாந்தி பெற்றதாகக் கூறினார்கள். தாங்கள் அவரைக் கோயிலில் முருகன் உருவில் கலந்த காட்சியைக் கண்டதாகக் கூறி அதிசயித்து அவரைப் போற்றினார்கள். கோயில் அபிஷேக தீர்த்தங்கொண்டுபோய் ஞானியார் திரு மேனிக்கு அபிஷேக ஆராதனை புரிந்து, எல் லோரும் மிக்க பயபக்தியுடன் குலசேகரன் பட்டினத்தில் ஒருபுறம் அடக்கம் புரிந்து, அங்கு சிறு சமாதிக் கோயிலும் புதுக்கினார்கள். அதற்கு இன்னும் வழிபாடு நடந்து வருகின்றது. கோயிலிலிருந்து, ஞானியார் சமாதிக் கோயி லுக்கு, முருகன்பேர் பொறித்த ஒரு குத்து விளக்கும், சில நிலங்களும் இனமாகக் கோயில் அதிகாரிகள் வழங்கினார்கள். அந்த விளக்கு இன்றும் அங்கு இருப்பதைக் காணலாம்.

இத்தகைய ஞானியார் அவர்கள் சமாதி யையும், அவர் வாழ்ந்த வீடு என்ற படுக்கைக் கோயிலையும், அன்பர்கள் தெரிசித்துத் திருச் செந்தூர் முருகன் கருணையைப் பெறுவார் களாக !

**

இந்து மதம்

நமது இந்தியப் பெருநாட்டில், பலதிற மக்களும், பல்வேறு மொழிகளும், பல்வேறு நடையுடை பாவனைகளும், பல்வேறு பழக்க வழக்கப் பண்பாடுகளும், ஆங்காங்கே அமைந்து விளங்கக் காண்கின்றோம். ஆயினும், இப் பலதிற வேறுபாடு களுக்கும் இடையே, ஒரு பெரும் பொதுத் தன்மையும் ஊடுருவி நின்று பொலிந்து திகழ்தல் காணப்படுகின்றது. இந்திய மக்களின் புறக்கோலங்களும் பிறவும் வேறுபட்டாலும், அவர்கள் அனைவருடைய உள்ளப் போக்கும் உணர்வும், பெரும் பாலும் ஒரே தன்மை உடையனவாக விளங்குகின்றன.

இமயம் முதல் குமரி வரையிலுள்ள எல்லா மக்களும், பற்பல துறைகளில், மிகவும் வியக்கத்தக்க நிலையில், ஒத்த மனப்பான்மையும் உணர்வும் உடையவராக இருக்கின்றனர். கடவுள் நம்பிக்கையிலும், விக்கிரக வழிபாடுகள் புரிவதிலும், பல்வேறு சடங்குகள் இயற்றுவதிலும், பாவம்—புண்ணியம் ஊழ்வினை, பிறப்பு—இறப்பு—மறுபிறப்பு ,சுவர்க்கம்—நரகம் என்பன பற்றிய கொள்கையிலும், இந்திய மக்கள் அனைவருக்குமிடையே ஒத்த கருத்தே நிலவி வருகின்றது. இவைகள் யாவும் இந்திய மக்களின் அடிப்படைப் பொதுக் கருத்துக்களாக அமைந் திருக்கக் காண்கின்றோம்.

சார்வாகம், சமணம், பௌத்தம், சைவம், வைணவம், சாக்தம், சீக்கியம் முதலிய சமயங்களும், கேவலாத்துவிதம், விசிட்டாத்துவிதம், துவிதம், சுத்தாத்துவிதம் முதலிய எத்துணையோ பற்பல தத்துவக் கொள்கைகளும், நமது இந்தியப் பெரு நாட்டில் விளங்கி வழங்கி வருகின்றது. ஆயினும், அவைகள் அனைத்தையும் தனக்குள் ஏற்றுத் தழுவிக்கொண்டு விளங்கிவரும் சிறந்த பொதுமைப் பெரு நெறியே, இந்து மதம் என்னும் பெயரில் வழங்கி விளங்கிக் கொண்டிருக்கின்றது என்று நாம் சுருக்கமாகக் கூறலாம். —ஆசிரியர்.

விளாஞ்சோலைப் பிள்ளை :

இந் நூல், விளாஞ்சோலைப் பிள்ளை என்னும் வைணவப் பெருஞ் சான்றோரால் அருளிச் செய்யப் பெற்றதாகும். காஞ்சிபுரம் தேவப் பெருமாளின் அபர அவதாரம் என்று புகழப் பெறுபவரும், வடக்குத் திருவீதிப் பிள்ளையின் தவப் புதல்வரும், முற்றுமுணர்ந்த முதிர்ந்த புலமை வாய்ந்து திகழ்ந்தவரும், வைணவ சமயத்தின் மறை நுண்பொருள்களை யெல்லாம் விளக்கி ''அஷ்டாதச ரகசியம்'' என்னும் பதினெட்டு நூல்களை அருளிச் செய்தவருமாகிய பிள்ளை லோகாசாரியரின் திருவடிகளில் தொழும்பு பூண்டு, அவரிடமிருந்து எல்லா நுண் பொருள்களையும் இனிது கேட்டு உய்தி பெற்றவர், விளாஞ்சோலைப் பிள்ளை என்னும் வைணவப் பெரியார்!

எம்பெருமானுர்க்குப் பிள்ளை யுறங்காவில்லிதாசர் போலவும்; நம்பிள்ளைக்கு ஏறுதிருவுடையதாசர் போலவும்; நடுவில் திருவீதிப் பிள்ளைப் பட்டர்க்கு வானமாமலைதாசர் போலவும்; பிள்ளை லோகாசாரியருக்கு விளாஞ்சோலைப் பிள்ளை, அணுக்கராகவும் அன்பராகவும் அந்தரங்கராகவும் இருந்து அரும்பணி புரிந்து, சிறப்பு எய்தியவர் ஆவர்.

பிள்ளை லோகாசாரியர் :

பிள்ளைலோகாசாரியர் திருவாய் மலர்ந்தருளிய நூல்கள் பதினெட்டு. அவைகளாவன: (1) ஸ்ரீவசனபூஷணம், (2) தத்துவத்திரயம், (3) அர்த்த பஞ்சகம், (4) அர்ச்சிராதி, (5) பிரமேய சேகரம், (6) பிரபந்ந பரித்திராணம், (7) சாரசங்கிரகம், (8) சம்சார சாம்ராஜ்யம், (9) நவரத்தினமாலை, (10) நவவித சம்பந்தம், (11) யாத்ருச்சிகப்படி, (12) பரந்தபடி, (13) ச்ரிய பதிப்படி, (14) தத்துவ சேகரம், (15) தனித் துவயம், (16) தனிச் சரமம், (17) தனிப் பிரணவம், (18) முமுட்சுப்படி என்பனவாம். இந்தப் பதினெட்டு நூல்களிலும், மிகவும் சிறப்பு வாய்ந்த ஸ்ரீ வசனபூஷணம் என்னும் தெய்விக நூலில், விளாஞ்சோலைப் பிள்ளை மிகவும் தோய்ந்து திளைத்து மகிழும் இயல்புடையவராக இருந்தார். பகவத் கீதையில் சரம சுலோகம் சிறந்து விளங்குதல் போல, ஸ்ரீ வசன பூஷண நூலில் சிறப்புற்று விளங்குவது, சரம பருவ நிஷ்டைப் பிரகரணம் என்னும் பகுதியாகும்.

சப்த காதை :

ஆதலின், அந்த சரம பருவ நிஷ்டைப் பிரகரணப் பகுதியில் அமைந்துள்ள அரும் பெரும் பொருள்களை ஒருங்கு தொகுத்து, அனைவருக்கும் பயன்படும்படி, எளிய இனிய ஒரு நூலாகச் செய்ய வேண்டும் என்னும் விருப்பம் கொண்டு, விளாஞ்சோலைப்பிள்ளை இந் நூலை அருளிச் செய்துள்ளார். நம்மாழ்வார் அருளிய திருவாசிரியம், ஏழு பாடல்களால் அமைந்து, சப்த காதை எனப் புகழும்படி திகழ்கின்றது. அது, பகவத் பக்தியாகிய பிரதம பருவத்திற்கு அமைந்தது. விளாஞ் சோலைப் பிள்ளை அருளிய ஏழு பாடல்களைக் கொண்ட சப்த காதை என்னும் இந்நூல், ஆசார்ய பக்தியாகிய சரம பருவத்திற்கு அமைந்தது. நம்மாழ்வாரின் சப்தகாதையாகிய திருவாசிரியம், ஆசிரியப் பாவால் அமைந்தது. விளாஞ்சோலைப் பிள்ளையின் சப்த காதை என்னும் இந்நூலோ, ஏழு வெண்பாக்களால் அமைந்தது. மதுரகவி யாழ்வார், வடுக நம்பி என்பவர்கள், குருபக்தியாகிய சரம பருவ நிட்டையைத் தம் வாக்காலும் வாழ்க்கையாலும் கடைப்பிடித்துக் காட்டியது போலவே, விளாஞ்சோலைப் பிள்ளையும், அதனை இந்நூலாலும் தம் வாழ்க்கையாலும் கடைப்பிடித்துக் காட்டி உலகுக்கு உணர்த்தியருளினர்.

நூலின் தொடக்கம் :

சப்த காதை என்னும் இந்நூலின் தொடக்கத்தில், விளாஞ்சோலைப் பிள்ளை, ஆசாரியன் யார்? அவ்வாசாரியன் நமக்கு விளக்கிக் காட்டுவன யாவை? என்பவற்றைத் தொகுத்துக் கூறுகின்றார். ஜீவாத்மாவாகிய உயிருக்கும், பரமாத்மாவாகிய இறைவனுக்கும் இடையே உள்ள சம்பந்தம் என்னும் உறவு, ஒன்பது வகைப் படும். அவை முறையே (1) தந்தை மைந்தன் (பிதா-புத்ர பாவம்) ; (2) காப்பவன் காக்கப் படுவது (இரட்சிய இரட்சக பாவம்) ; (3) ஆண்டான் அடிமை (சேஷ சேஷி பாவம்) (4) கணவன் மனைவி (பர்த்ரு பாரியா பாவ[illegible] (5) அறிபவன் அறியப்படுவது (ஞாத்ரு [illegible] பாவம்) ; (6) உடைமை உடையான் [illegible] சுவாமி பாவம்); (7) தாங்குவது தாங்கப்படுவ[illegible] (ஆதார ஆதேய பாவம்) ; (8) உடல் உயிர் (சரீர ஆத்ம பாவம்) ; (9) நுகர்வோன் நுகரப் படுவது (போக்த்ரு போக்ய. பாவம்) என்பனவாகும். இந்த ஒன்பது வகை உறவு முறைகளையும், நமக்கு உள்ளபடி விளக்கி உணர்த்தியருள்பவன் ஆசாரியன் ஆவன்.

இவ்வளவோடு மட்டும் இல்லாமல், சொரூப விரோதி, உபாய விரோதி, பிராப்பிய விரோதி என்று, மூவகைப்பட்ட விரோதிகளையும்கூட நமக்குத் தெளிவுற உணர்த்துபவன் ஆசாரியனே. இவ்வளவேயன்றி, நாம் அடைதற்குரிய உறுதிப் பொருளாகிய புருடார்த்தத்தையும்; அதனை அடைதற்குரிய நெறியாகிய உபாயத்தையும் நமக்கு நன்கினிது உணர்த்திக் காட்டியருளுபவன் ஆசாரியனே யாவன். இவ்வுண்மையினை இந்நூலின் தொடக்கமாகிய முதற்பாட்டில், விளாஞ்சோலைப்பிள்ளை அழகுற விளக்கியருள்கின்றார்.

அவன் அன்றோ ஆசாரியன்? :

அழகிய பொன்னரங்கத்தில் எழுந்தருளி வாழ்கின்ற பெரிய பெருமாளாகிய நாராயணனுக்கும், உலகிலுள்ள உயிர்த் திரள்களுக்கும் இடையே மிக உள்ளீடாக அமைந்துள்ள உறவு உரிமைகளை எடுத்துரைத்து, சொரூப விரோதி—உபாய விரோதி—பிராப்பிய விரோதி என்னும் தடைகளையும் உணரச் செய்து, நித்திய முத்தர்களின் இருப்பிடமாகிய பரம பதத்தில் சென்று நிலைபெற்றிருந்து, நித்திய கைங்கரியம் செய்து ஒழுகுதலாகிய வாழ்க்கைப் பேற்றினை நாம் அடைவதற்குரிய, பிரபத்தி நெறியின் இயல்பினை, நமக்குத் தனது அருளுபதேசத்தினால் உணர்த்தி உதவுபவன் எவனோ, அவனே ஆசாரியன் என்பதற்குரிய தகுதியும் சிறப்பும் உடையவனாவான்.

அம்பொன் அரங்கர்க்கும், ஆவிக்கும், அந்தரங்க
சம்பந்தம் காட்டித், தடைகாட்டி,—உம்பர்
திவம்மன்னும் வாழ்வுக்குச் சேர்ந்தநெறி காட்டும்
அவன், அன்றோ ஆசாரியன்!

['அம்பொன் அரங்கர்' என்பது திருவரங்க நாதனைக் குறிக்காமல், இங்குப் பொதுவாக நாராயணனாகிய திருமாலைக் குறித்து நின்றது. ஆவி—உலகிலுள்ள உயிர்க் கூட்டங்கள். அந்தரங்க சம்பந்தம்—உள்ளீடாக அமைந்துள்ள உறவுரிமை. தடை—சொரூப விரோதம் முதலிய மூவகை விரோதங்கள். உம்பர் திவம் — மேலேயுள்ள திவ்விய உலகமாகிய பரமபதம். ''சேர்ந்த நெறி'' என்பது இங்குப் பிரபத்தி நெறியை உணர்த்திற்று.](1)

நஞ்சில் மிகக் கொடியர் :

ஆசாரியன் என்பவன், தன்னை அடைந்த அன்புடையவர்களுக்கு, அர்த்த பஞ்சகம் என்னும் ஐந்து பொருள்களை உபதேசித் தருள்கின்றான். நம்மாழ்வார் அருளிய திருவாய்மொழி ஆயிரம் பாடல்களும், அர்த்த பஞ்சகம் என்னும் ஐந்து பொருள்களையே ஆராய்ந்தினிது விளக்குகின்றது. ''மிக்க இறை நிலையும், மெய்யாம் யிர்நிலையும், தக்க நெறியும், தடையாகித் ாக்கியலும் ஊழ்வினையும், வாழ்வினையும், ம் குருகையர்கோன் யாழின் இசை வேதத்து ல்'' என வரும் திருவாய்மொழித் தனியனால், இவ்வுண்மை செவ்விதின் விளங்கும்.

இத்தகைய சிறப்பு மிக்க அர்த்த பஞ்சகத்தை உபதேசித்தருளும் ஆசாரியனிடத்து, ஒவ்வொருவருக்கும் அன்பு நிறைந்த பக்தியிருத்தல் வேண்டும். அத்தகைய பக்தியில்லாதவர்கள், கொடிய நஞ்சினையும்விட மிக மிகக் கொடியவர்களாவர். இதனை நாம் உறுதியாகச் சொல்லுகின்றோம். நஞ்சானது அருந்துபவர்களின் உடல் வாழ்க்கையை மட்டுமே, முடிக்கக் கூடியதாக இருக்கும். ஆனால் ஆசாரிய பக்தியில்லாமையாகிய நஞ்சோ, உயிர் வாழ்க்கை அழிவு ஆகிய ஆத்ம நாசத்தையே உண்டாக்கி விடும். நஞ்சு உண்டால், மாற்று மருந்து அருந்தி, ஒரோவழி உடலைத் தேற்றிக்கொண்டு உய்ந்து விடவும் கூடும். ஆனால், ஆசாரிய பக்தியில்லாமையாகிய நஞ்சோ, ஐயத்திற்கிடமின்றி, நிச்சயமாகவும் முழுதாகவும் ஆத்ம நாசத்தை விளைவித்தேவிடும். இவ்வுண்மையை, ஒரு குறைவுமற்ற பெரியோர்கள் அனைவரும் ஒருமுகமாக, உலகமுணர்ந்து உய்வதற்காகத் தெளிவுற வற்புறுத்தி அருளிச் செய்துள்ளனர்.

அஞ்சு பொருளும் அளித்தவன்பால், அன்பிலார்
நஞ்சில் மிகக்கொடியர்; நாம்சொன்னோம்;—
நஞ்சுதான்
ஊனை முடிக்கும்; அது, உயிர் முடிக்கும்; என்று
ஈனமிலார் சொன்னார் இவை

[அஞ்சு பொருள்—அர்த்த பஞ்சகம், ஐந்து பொருள்கள். அஞ்சு பொருளும் அளித்தவன்—ஆசாரியன். ''ஆன் விடை ஏழ் அன்று அடர்த்தார்க்கு ஆளானார் அல்லாதார், மானிடவர் அல்லர் என்று என் மனத்தே வைத்தேனே'' என்று திருமங்கையாழ்வார் அருளிச் செய்தது போல, இவரும் 'உறுதியாகச் சொல்லுகின்றேன்' என்னும் கருத்தில், ''நாம் சொன்னோம்'' என்றார். ''அது'' என்பது, இங்கு ஆசாரியப் பிரேமம் ஆகிய குரு பக்தியின்மையைக் குறித்து நின்றது. ஈனம்—குறைவு. ஈனம் இலார் — ஒரு குறைவும் இல்லாத பெரியோர்கள் ஆகிய முன்னோர்கள். சொன்னார்—உலகம் அறிய வற்புறுத்தி விளக்கிக் கூறியருளினர். குருபக்தியில்லாதவர்களை நஞ்சினோடு ஒப்பிட்டுப், பின்னர் நஞ்சினும் மிகக் கொடியர் என்று, அவர்களின் கொடுமையை விளக்கி வேறுபடுத்திக் கூறியது, வேற்றுமை என்னும் அணியாகும். ''தீயினால் சுட்ட புண் உள்ளாறும், ஆறாதே நாவினால் சுட்ட வடு'' என வரும் வேற்றுமை அணி அமைந்த திருக்குறள், ஈண்டு நினைந்து உணரத்தகும்.]. (2)

நண்ணுமே கீழாம் நரகு :

ஒருவன் ஈடேறி உய்ந்து, இறைவனின் அருளைப் பெறுவதற்குக் குரு பக்தி மிக மிக இன்றியமையாததாகும். ஒரு சிலர் குரு பக்தி எதற்கு? நூல்களின் நுண்பொருள்களை ஆராய்ந்துணரும் அறிவுவல்லமையாகிய ஞானம் ஒன்றே அமையாதோ? ஞானம்தானே மோட்சத்திற்குக் காரணம்? என்று வினவுவர். ஒருவன் எவ்வளவுதான் நூலறிவும் புலமையும் வாய்ந்தவனாகிலும், அவனுக்குக் குரு பக்தி யில்லையேல் ஒரு சிறிதும் உய்தி இல்லை. குருவருள் இன்றேல் திருவருள் இல்லை. குருவருள் பெறாதவன். எவ்வளவு நூற்புலமை பெற்றிருந்தாலும், ஒருபோதும் ஞானத்தை அடைய மாட்டான். இதனைத் திருவள்ளுவரும், ''தெருளாதான் மெய்ப்பொருள் கண்டற்றால், தேரின் அருளாதான் செய்யும் அறம்'' என உவமையாக வைத்து உணர்த்தியருளியிருக்கின்றார்.

குரு பக்தியில்லாதவன், எவ்வளவுதான் நூல்களைக் கற்றாலும், குருவின் அருளுபதேசமாகிய ஒரு சொல்லால் கிடைக்கின்ற, சிறந்த பெரும் ஞான விளக்கத்தைச் சிறிதும் பெறமாட்டான். ''என்னை ஓர் வார்த்தை உட்படுத்துப் பற்றினாய்'' என்று மாணிக்கவாசகர் திருவாய் மலர்ந்தருளியிருப்பதும்; ''சாத்திரத்தை ஓதினர்க்குச் சற்குருவின் ஓர் வசன மாத்திரத்தை வாய்க்கும் நலம் வந்துறுமோ? ஆர்த்த கடல் தண்ணீர் குடித்தவர்க்குத் தாகம் தணிந்திடுமோ? தெண்ணீர்மையாய் இதனைச் செப்பு'' என்று, பிற பெருஞ் சான்றோர் ஒருவர் அருளிச் செய்திருப்பதும்; இங்கு நாம் இனிது சிந்தித்து உணர்தற்குரியன.

ஆதலின், நமக்கு நம் குருவினிடத்தில் மிகுந்த பக்தியிருத்தல் வேண்டும். அத்தகைய பக்தியின் மூலமாகவே, நாம் ஞானத்தையும், ஞானம் கனிந்த நலங்களையும் பெறுதல் இயலும். குரு பக்தி யில்லாதொழியின், நாம் இம்மையாகிய இவ்வுலக வாழ்க்கையில், பலவகைத் துன்பங்களை அடைந்து அழிவுறுவோம். அதோடு மட்டுமின்றி, மறுமையிலும் மீளா நரகம் எய்தி மிகவும் இடர்ப்பட்டு வருந்தி நிற்போம்.

பார்த்த குருவின் அளவிற் பரிவின்றிச்,
சீர்த்தமிகு ஞானம்எலாம் சேர்ந்தாலும்,—கார்த்த கடல்
மண்ணின்மேல் துன்புற்று மங்குமே, தேங்காமல்
நண்ணுமே கீழாம் நரகு.

[பார்த்த குரு—(1) கண்கண்ட தெய்வமாகிய குரு; (2) நமக்குக் கடைக்கண் நோக்கம் புரிந்து அருள் செய்த குரு; (3) நமக்கு உரியவனாக இறைவனே தேடிப் பார்த்து அமைத்து வைத்த குரு—என்று பலவகைப் பொருள்களைத் தரும். குருவானவர் பலவகைச் சிறப்புக்களை உடையவராதலின், அவரைக் குறிக்க வந்த இச் சொற்றொடரும், பலவகைப் பொருள்களை உட்கொண்டதாக விளங்குகின்றது. பரிவு—அன்பு, பக்தி. ''ஞான மெலாம் சேர்ந்தாலும்'' என்பதில் உள்ள உம்மை, ஒருபோதும் ஞானம் சேராது என்பதனை உணர்த்தி நின்றது. ''நல்லாறு எனினும், கொளல் தீது'' என்னும் திருக்குறளில் வரும் உம்மையைப் போன்ற இத்தகைய உம்மைகளை, இலக்கண நூலார் எதிர் மறை உம்மை என்பர்.

''சீர்த்த மிகு ஞானம்'' என்னும் தொடர், ஞானம்—மிகு ஞானம்—சீர்த்த மிகு ஞானம் என மூன்று வகையில் கொள்ளப் பெற்று, வடமொழி வேதாந்த ஞானம், தென் மொழி வேதாந்த ஞானம், சம்பிரதாய ரகசியார்த்த ஞானம் என்னும் மூவகை ஞானங்களையும் உணர்த்தி நிற்பதாகப் பெரியோர்கள் கூறுவர். இதற்கும் மேற்பட ''எல்லாம்'' என்றது, வேறு பிற ஞானங்கள் உளவாயின், அவைகளையும் தழுவி உட்கொண்டு உணர்த்தி நின்றது. எவ்வளவு ஞானங்கள் சேர்ந்தாலும், குரு பக்தியில்லாதவனுக்கு அவற்றால் யாதொரு நன்மையும் விளையாமையோடு, அவை அனைத்தும் தீங்காகவே முடியும் என்பது கருத்து.

அத்தகையவனுக்கு இம்மை மறுமையாகிய இரண்டுமே இல்லை யென்பார், ''மண்ணின் மேல் துன்புற்று மங்கும்'' என்றும்; ''தேங்காமல் நண்ணும் கீழாம் நரகு'' என்றும் கூறினார். ''மங்குமே'' ''நண்ணுமே'' என்பவற்றின் ஏகாரங்கள், ''ஐயோ பாவம்'' என்னும் பேரிரக்க உணர்ச்சியைப் புலப்படுத்திக் கொண்டு நிற்கின்றன.] (3)

நஞ்சிலும் கேடு :

ஆன்மாவாகிய தன்னுடைய இயல்பையும், இறைவனுடைய இயல்பையும், இறைவனை அடைவதற்குத் தடையாக உள்ளவற்றின் இயல்பையும், சரணாகதி நெறியின் இயல்பையும், கைங்கரியமாகிய பெருவாழ்வின் இயல்பையும் உள்ளபடி, ஐயம் திரிபு அறியாமை ஆகிய குற்றங்கள் நீங்கும்படி, திருவெட்டெழுத்து மந்திரத்தின் மூலமாகத் தம்முடைய பேரருட்டிறனால், ஐயம் திரிபு அறியாமை ஆகிய குற்றங்கள் நீங்கும்படி உபதேசித்தருளிய ஆசாரியனிடத்தில், அன்பு இல்லாதவர்கள், நஞ்சைக் காட்டிலும் மிகுந்த கேட்டை விளைவிப்பவர்கள் என்று, நான் உறுதி கொண்டுள்ளேன்.

தன்னை, இறையைத், தடையைச், சரண்நெறியை,
மன்னுபெரு வாழ்வை,ஒரு மந்திரத்தின்—இன்னருளால்,
அஞ்சிலும் கேடுஓட அளித்தவன்பால், அன்பிலார்
நஞ்சிலும்கேடு, என்றுஇருப்பன் நான்.

தன்னை-உயிரியல்பை. பெருவாழ்வு-கைங்கரியமாகிய புருஷார்த்தம். ஒரு மந்திரத்தின்-ஒப்பற்ற திருவெட்டெழுத்தாகிய மந்திரத்தின் மூலமாக. அஞ்சிலும்-மேற்கூறிய அர்த்த பஞ்சகம் என்னும் ஐந்து பொருள்களிலும். கேடுஓட-ஐயம் திரிபு அறியாமை ஆகிய குற்றங்கள் நீங்க. அளித்தவன்-அறிவுறுத்தியருளிய ஆசாரியன். செய்யுளாதலின், அர்த்தபஞ்சகங்கள் என்பன, இங்கு முறைமாறிக் குறிப்பிடப்பெற்றன. ''படை குடி கூழ் அமைச்சு நட்பு அரண் ஆறும் உடையான் அரசருள் ஏறு'' என்னும் திருக்குறள் உரையில், ''செய்யுளாகலின் முறைபிறழ வைத்தார்'' எனப் பரிமேலழகர் எழுதி யிருக்கும் குறிப்புப் போல்வன இங்கு கருதியுணர்தற்குரியன.

''ஒரு மந்திரத்தின் அளித்தல்'' ஆவது, திருவெட்டெழுத்தாகிய நாராயண மந்திரத்தின் மூலம் அர்த்த பஞ்சகங்களை உபதேசித்தர். ''அஞ்சிலும் கேடு ஓட அளித்தல்'' ஆவது, உலகியல் வாழ்வில் நமக்கு நேரும் பலவகை மயக்கங்களை, நாராயண மந்திரத்தின் மூலம் நீக்கியருளுதல். (4)

ஆவிக்கு நேரே அழுக்கு :

மேல்வந்த பாடல்களில் ஆசாரியனின் பெருமையும், ஆசாரியனை வழிபடாத சீடர்களுக்கு நேரும் தீங்குகளும் விளக்கப் பெற்றன. பின்வரும் பாடலில் ஆசாரியனுக்கு நேரக்கூடிய அழுக்கும் இழுக்கும் பற்றி விளக்கப்படுகின்றது. இவர்கள் என்னிடத்தில் நூல்

களை, ஓதியுணர்ந்து என்னை ஆசாரியனைக் கொண்டிருப்பவர்கள் என்னும் பெருமிதம் கொண்டிருப்பதும்; என்னிடத்தில் ஆசாரியத்துவ குணங்கள் நிறைந்து சிறந்து விளங்குகின்றன என்று எண்ணி அகந்தை கொண்டிருப்பதும்; திருமால் அடியார்களின் அடியார்களாகத் திகழ்கின்ற பெருமக்களிடத்தில் சாதி குலம் பிறப்பு ஆகியவற்றின் உயர்வு தாழ்வுகளை ஆராய்வதும் ஆகிய இவைகள்; ஆசாரியனின் ஆன்மாவுக்கு அழுக்கையும் அழிவையும் விளைவிக்கும்.

என்பக்கல் ஓதினர், இன்னர் எனும்இயல்வும்,
என்பக்கல் நன்மைஎனும் இயல்வும்,—மன்பக்கல்
சேவிப்பார்க்கு அன்புடையார் சென்ம நிரூபணமும்,
ஆவிக்கு நேரே அழுக்கு.

பிள்ளை லோகாசாரியர் அருளிச் செய்த சீர்வசனபூடணம் என்னும் நூலில் (308), ''தான் இதோபதேசம் பண்ணும்போது தன்னையும் சீடனையும் பலனையும் மாறுடி நினைக்கை குரூர நிசித்தம். தன்னை மாறுடி நினைக்கையாவது, தன்னை ஆசாரியன் என்று நினைக்கை; சீடனை மாறுடி நினைக்கையாவது, தனக்குச் சீடன் என்று நினைக்கை'' என்றும்; ''பாகவத அபசாரம் தான் அநேக விதம்; அதிலே ஒன்று அவர்கள் பக்கல் சென்ம நிரூபணம்; இதுதான் அர்ச்சாவதாரத்தில் சிலை உலோகம் முதலிய உபாதான (முதற்காரணப்) பொருளை நினைப்பதிற் காட்டிலும் கொடுமை மிக்கது'' என்றும் வருகின்ற பகுதிகள், இங்கு நினைத்தற்குரியன.(5).

அம்பொன் அரங்கா ஒழித்தருள்வாய் :

மேற் பாடல்களில் ஆவிக்கு அழுக்காகக் கூறப்பெற்ற கேடுகளைப் பலர் அழுக்கு என்று அறிந்துவைத்திருந்தும், இவ் இருள் தரும் மாஞாலத்தின் இயல்புகாரணமாக, இந்த அழுக்குகளினின்று நீங்கி உய்ந்து கடைத்தேருமல், இவற்றில் அகப்பட்டு அழிவு எய்துவர். அதனை நினைந்து, அத்தகைய கேடும் அழிவும் தமக்கு நேராதிருத்தற் பொருட்டுத் திருவரங்க நாதனைப் பின்வருமாறு ஆசிரியர் இறைஞ்சிப் பணிந்து வேண்டிக் கொள்கின்றார்.

அழகிய பொன்மயமான திருவரங்கத்தில் எழுந்தருளி விளங்கும் திருவரங்க நாதப்பெருமானே! மேற்கூறியவை அனைத்தும் ஆன்மாவுக்கு அழுக்கும் அழிவும் விளைவிப்பன என்று யான் அறிந்து கொண்டேன். குற்றம் எதுவும் இன்றிக் குறைவிலா நிறைவாய், எல்லா நல்ல குணங்களும் நிறைந்து சிறந்து விளங்குகின்ற எனது ஆசாரியராகிய பிள்ளைலோகாசாரியருக்காகவும், திருமால்நெறிப் பெருமக்கள் அனைவருக்கும் தலைசிறந்த ஆசாரியராகிய எம்பெருமானார் என்னும் இராமாநுசர்க்காகவும், உன்னுடைய மேலான திருவருளுக்காகவும் திருவுள்ளம்பற்றி, என் உள்ளத்தில் உறைகின்ற தீவினைத் திரள்களை அழித்துப் போக்கி, என்னைக் காத்தருள்வாயாக.

அழுக்கென் றிவையறிந்தேன்; அம்பொன் அரங்கா!
ஒழித்தருளாய் உள்ளில் வினையைப்—பழிப்பிலா
என்ஆ ரியர்க்காக, எம்பெருமா னார்க்காக,
உன்ஆ ரருட்காக உற்று.

தம்முடைய தீவினைகளைத் தீர்த்தருளுதல் வேண்டும் என்று பெரிதும் பணிந்து விண்ணப்பித்துக்கொள்ளும் இந்நூலாசிரியர், தம் வேண்டுகோளைப் பெருமாள் மறுக்காமல் அளித்தற் பொருட்டு ''பழிப்பிலா என் ஆரியர்க்காக, எம்பெருமானார்க்காக, உன் ஆரருட்காக உற்று ஒழித்தருளாய்'' என்று பணிந்து வேண்டிக் கொள்ளுகின்றார். தமக்காகப் பெருமாள் அருள்செய்யாவிட்டாலும், தம்முடைய ஆசாரியர் ஆகிய பிள்ளை லோகாசாரியர் பொருட்டாகவும், திருமால் நெறியைச் சேர்ந்த அடியவர்கள் அனைவருக்குமே பரமாசாரியரான எம்பெருமானார் என்னும் இராமாநுசர் பொருட்டாகவும், பெருமாளின் மேலான சிறந்த திருவருட் சிறப்பிற்கு இழுக்கு ஏதும் ஏற்படாமைப் பொருட்டாகவும், தம்முடைய தீவினைகளைத் திருவரங்கநாதன் நிச்சயமாகத் தீர்த்தருளுதல் இன்றியமையாததாகும் என்று, இப்பாடலால் ஆசிரியர் மன்றாடி வேண்டுகின்றார்.

இந்நூலாசிரியராகிய விளாஞ்சோலைப் பிள்ளைக்கு ஆசிரியர் பிள்ளைலோகாசாரியர். அவரையே இங்கு ''என் ஆசிரியர்'' என்று குறிப்பிட்டார். எம்பெருமானார்-இராமாநுசர். பழிப்புஇலா-குற்றம்இல்லாத. 'பழிப்பிலா' என்னும் இத்தொடர் இடைநிலைத் தீபகம். அது அம்பொன் அரங்கர், ஆரியர், எம்பெருமானார், ஆரருள் என்னும் எல்லாவற்றோடும் சென்று இயைந்து பொருள்தரும்.(6)

சாருவரே அம் தாமம்தான் :

மேற்பாடல்களில் ஆசாரியன் பக்கலில் அன்பில்லாதவர்கள் அடையும் தீங்குகளைப் பல்வகையாலும் சொல்லி விளக்கிய ஆசிரியர், அதற்கு மறுதலையாக ஆசாரியபக்தி மிக்கவர்கள் அடையும் நலம் இது என்று பின்வரும் பாடலில் விளக்கியருள்கின்றார்.

ஒருவகைத் தீங்கும் இல்லாமல் இருக்கின்ற, ஆசாரியனுடைய திருவுள்ளத்திற்குப் பாங்காக, உண்மையான அன்புடையவர்கள், ஓங்காரமாகிய பிரணவத்தேரின் மீது ஏறிக்கொண்டு, சூரியமண்டலத்தை ஊடுருவிச் சென்று, நிலைபேருன அழகிய பரமபதமாகிய வைகுந்தத் திருநாட்டை அடையப்பெற்று,அங்கு இன்புற்று வாழ்வார்கள்.

தீங்கேதும் இல்லாத தேசிகன்றன் சிந்தைக்குப்
பாங்காக நேரே பரிவுடையோர்,—ஓங்காரத்
தேரின்மேல் ஏறிச், செழுங்கதிரின் ஊடுபோய்ச்.
சாருவரே, அந்தாமம் தான்.

ஆசாரியன்பால் உண்மையான அன்புடையவர்கள் ''வையம் மன்னி வீற்றிருந்து விண்ணும் ஆள்வர் மண்ணூரடே'' என்கிறபடி, இம்மையில் எல்லா நலங்களும் பெற்று, மறுமையில் வைகுந்தத் திருநாட்டை எளிதாகவும் இனிதாகவும் அடைந்து, இன்பம் சிறக்க வாழ்வார்கள் என்னும் உண்மை, இப்பாடலால் செவ்விதின் வலியுறுத்தப் பெற்றது. தீங்கு-குற்றம். தேசிகன்-ஆசாரியன். பாங்கு-உரிமை. பரிவு-அன்பு. அம்தாமம்-வைகுந்த உலகம். சாருவர்-அடைவார்கள்.(7).

**

(சப்த காதை முற்றிற்று.)

எம்பெருமானும் களிறும்

(நுண்பொருள் விளக்கம்)

மகாவித்வான் ஸ்ரீமத் பி. ப. அண்ணங்கராசார்ய சுவாமிகள், காஞ்சிபுரம்

எம்பெருமானை ஆழ்வார்கள் பல இடங்களிலும் யானையாகப் பேசி அநுபவிக்கிறார்கள். ‘தென்னானய் வடவானாய் குடபாலானாய் குண பால மத யானாய்’ என்றும், ‘என்னானை யென்னப்ப னெம்பெருமான்’ என்றும் சோலை மழ களிறே என்றும் பலபல அருளிச் செயல்களுள்ளன. யானைக்கும் எம்பெருமானுக்கும் பலபடிகளாலே ஒற்றுமையுண்டு:—

1. யானை, எத்தனை தடவை பார்த்தாலும் பார்க்கும்போதெல்லாம் அபூர்வ வஸ்து போலவேயிருந்து பரமானந்தம் பயக்கும்; எம்பெருமானும் ‘‘எப்பொழுதும் நாள் திங்களாண்டூழியூழி தோறும், அப்பொழுதைக்கு அப்பொழுது என்ஆரா வமுதமே’’ என்னும்படியிருப்பன்.

2. யானையின் மீது ஏறவேண்டியவன் யானையின் காலைப் பற்றியே ஏறவேண்டும்; எம்பெருமானிடஞ் சென்று சேரவேண்டியவர்களும் அவனது திருவடியையே பற்றிச் சேர வேண்டும். ‘‘உன்னடிக்கீழமர்ந்து புகுந்தேனே’ என்றார் நம்மாழ்வார்.

3. யானை தன்னைக் கட்டத் தானே கயிறு எடுத்துக் கொடுக்கும்; ‘‘எட்டினோடிரண்டெனுங் கயிற்றினால்’’ (திருச்சந்தவிருத்தம்) என்கிறபடியே எம்பெருமானைக் கட்டுப்படுத்தும் பக்தியாகிற கயிற்றை அவன்றானே தந்தருள்வன்; ‘‘மதி நலமருளினன்’’ என்றார் நம்மாழ்வார். ‘‘நின்ன பாத பங்கயம் நிரந்தரம் நினைப்பதாக நீ நினைக்க வேண்டுமே’’ என்றார் திருமழிசை யாழ்வார்.

4. யானையை நீராட்டினாலும் அடுத்த நிமிடத்திலே அழுக்கோடே சேரும்; எம்பெருமான் சுத்த சத்வமயனாய்ப் பரம பவித்திரனாயிருக்கச் செய்தேயும், பொய்ந்நின்ற ஞானமும் பொல்லாவொழுக்கமும் அழுக்கு உடம்பும் உடைய நம்போல்வாரோடுசேரத் திருவுள்ளமாயிருப்பன் வாத்ஸல்யத்தாலே.

5. யானையைப் பிடிக்க வேண்டில் பெண் யானையைக் கொண்டே பிடிக்க வேண்டும்; பிராட்டியின் புருஷகாரமின்றி எம்பெருமான் வசப்படானாதலால் பிராட்டியை முன்னிட்டே எம்பெருமானை வசீகரிக்க வேண்டும்.

6. யானை, பாகனுடைய அநுமதியின்றித் தன்பக்கல் வருபவர்களைத் தள்ளிவிடும்; எம்பெருமானும் ‘‘வேதம் வல்லார்களைக் கொண்டு விண்ணோர் பெருமான் திருப்பாதம் பணிந்து’’ என்றபடி பாகவதர்களை முன்னிட்டுப் புகாதாரை அங்கீகரித்தருளான்.

7. யானையின் பாஷை யானைப் பாகனுக்கே தெரியும்; எம்பெருமானுடைய பாஷை திருக்கச்சிநம்பி போல்வார்க்கே தெரியும். பேரருளாளப் பெருமாளோடே பேசுமவர் திருக்கச்சி நம்பிகள்.

8. யானையினுடைய நிற்றல் இருத்தல் கிடத்தல் முதலிய தொழில்கள் யாவும் பாகனிட்ட வழக்காயிருக்கும்; எம்பெருமானும் ‘‘கணிகண்ணன் போகின்றான் காமருபூங்கச்சி மணிவண்ணா நீ கிடக்க வேண்டா—உன்றன் பைந்நாகப் பாய் சுருட்டிக் கொள்’’ என்றும், ‘‘கிடந்தவாறெழுந்திருந்து பேசு’’ என்றுஞ் சொல்லுகிற திருமழிசைப் பிரான் போல்வார்க்கு, ஸர்வாத்மநா விதேயனாயிருந்தமை சரித்திரப் பிரஸித்தம்.

9. யானை உண்ணும்போது இறைக்கும் அரிசி பலகோடி நூறாயிரம் எறும்புகளுக்கு உணவாகும். எம்பெருமான் அமுது செய்து சேஷித்த பிரஸாதத்தாலே பலகோடி பக்தவர்க்கங்கள் உஜ்ஜீவிக்கக் காண்கிறோம்.

10. யானைக்குக் கை நீளம். ‘எம்பெருமானும் அலம்புரிந்த நெடுந்தடக்கையமரர் வேந்தன்’ என்றும், ‘‘நீண்ட அந்தக் கருமுகிலை யெம்மான் றன்னை’’ என்றும் திருமங்கையாழ்வாரால் நீண்ட கையனாகப் பாடப்பட்டான்.

11. யானை இறந்தபின்பும் உதவும், எம்பெருமானும் தீர்த்தம் பிரஸாதித்துத் தன்னுடைய சோதிக்கு எழுந்தருளின பின்பும் இதிகாச புராணங்கள் அருளிச் செயல்கள் மூலமாகத் தனது சரிதைகளை உணர்த்தி உதவுகின்றமையைக் காணா நின்றோம்.

12. யானைக்கு ஒரு கையே உளது. எம்பெருமானுக்கும் கொடுக்குங் கையொழியக் கொள்ளுங் கை இல்லை. ‘வேண்டிற்றெல்லாந் தரும் கோதில் வள்ளல்’ என்று நம்மாழ்வாரும், ‘அர்த்தி தார்த்த பரிதாந தீக்ஷிதம்’ என்[று] கூரத்தாழ்வானும் கூறினர்.

13. பாகனுக்கு ஜீவனங்கள் சம்பா[தி]துக் கொடுக்கும் யானை; எம்பெருமானும் [...] சக பரிசாரகர்களுக்கும், தன்னை நிர்வகிக்[கும்] வித்வான்களுக்கும் ஜீவநோஜ்ஜீவனங்களை [நிர்]வகித்துப் போருகிறான். ‘‘எனக்கே தன்னைத் தந்த கற்பகம்’’ என்றார் நம்மாழ்வார். இங்ஙனமே மற்றும் பல உவமைப் பொருத்தங்களும் கண்டு கொள்க. **

சென்னையில் சிவாஜி தரிசித்த சென்னம்மன்

[“மகாவித்துவான்” பண்டித நடேசனர், B.A., J.P.]

விந்தைக்குரிய முடிவு பெற்ற சிவாஜியைப் போல் வரலாற்று ஆசிரியர்கள் கையில் அகப் பட்டுச் சிக்குண்ட வேறு பாத்திரம் சரித்திரத் தில் காணமுடியாது. (“Shivaji has by curious fate suffered more at the hands of historians than any other character in history) தட்சிண பாதத்திலிருந்த இந்துக்களைக் கொண்டு ஒரு தேசிய கட்சியைக் கண்டு பணியாட்களாகிய பிஜபூர் சுல்தான்களையும் டெல்லியிலிருந்த பேரரசின் சேனைகளையும் முறைப்படி எதிர்த் தார் சிவாஜி; ‘ராஜா’ என்னும் விருதினைத் தானே ஏற்ருர்; தம் தனித்திறமையால்பெற்ற வரிப்பணத்தையும் தம் பெயரால் பிறர் அனுப் பிய செல்வத்தையும் சேர்த்து யுத்தத்தையும் அமைதியுடைய அரசினையும் கண்டு நடத்தினர் (பிரிட்டானிகா: தொகுப்பு 20 பக்கம் 723).

கி. பி. பதினேராம் நூற்ருண்டில் நுழைந்த முகம்மது கஜனியையும் அவனைப் பின்பற்றியவர்களையும் ஜெயித்தவர்கள் மராட் டிய வீரர்களே. மராட்டியர்கள் பஞ்ச திரா விடர்களில் ஒரு பிரிவினர். அவர்கள் மத்திய இந்தியாவில் வாழ்ந்தனர்; ‘குவாலியர்’ முதல் ‘கோவா’ வரைக்கும் அவர்கள் பரவி இருந்த னர். கி.பி. 1674-ல் சிவாஜி தம்மைக் ‘கொண் கான (துருவாநாடு) மகாராஜா’ என அறிவிப்புச் செய்துகொண்டார். (ஷிநூல் தொகுப்பு 14, பக்கம் 680). கி. பி. பதினேழாம் நூற் ருண்டில் மொகலாயப் பேரரசினின்றும் விலகித் தாம் சுதந்தர நாட்டினை ஆட்சி புரிவதாக அறிவித்தார். (பார்வை: கொளும்பியா களஞ் சியம் முதல் தொகுப்பு: பக்கம் 1199). மகா ராஷ்டிர சாம்ராஜ்யத்தின் சக்ரவர்த்தி என் ம் பறைசாற்றினர் சிவாஜி.

ப சிவாஜி மகாராஜா சென்னைக்கு 1677-ல் ந்தார். சென்னம்மன் குப்பத்தில் (மராட்டா டவுன்) வாழ்ந்து கொண்டு, ஆங்கிலேயரது பிரதமத் தச்சராக இருந்த பிரம்மஸ்ரீ முத்து மாரி ஆச்சாரியைக் கண்டார். (Mutta Mari Carpenter in 1677) பார்வை: எச். டி. லங் இயற்றிய சென்னைப் பூர்வீக வரலாறு தொகுப்பு 1, பக்கம் 382) இத்தச்சரை ‘மொட்டமாரி’ என்றும் கூறுப.

சிவாஜி வருகையில் சென்னை மாகாணம் கோட்டமாகவும் நட்டமாகவும் (நத்தம்) பிரித்த 1900 பகுதிகொண்டதாகும். மதருஸ்படம் (சாமி) நெய்த மதருஸ் குப்பம், ஞாயிறு நாட் டில் இருந்தது. புழல் கிராமத்தைச் சார்ந் திருந்தது. இன்று செங்குன்றம் (Red Hills) எனும் ஊருக்குப் பக்கத்தில் இருந்த ‘பள்ளி’ எனும் கிராமத்தில் ஒரு களிமண் கோட்டை யும் (குறும்பு) இருந்தது. ஞாயிறு நாட்டில் காமர்பேட்டை, முத்தியாலுப்பேட்டை (மராட் டாடவுன்), அட்டபள்ளம், இருங்குன்றம் இருந்தன. புழல்கோட்டம் ஞாயிறு கிராமம் (சுந்தரமூர்த்தி சுவாமிகளின் மனைவி, சங்கிலி நாச்சியாரின் தகப்பனர், ஞாயிறு கிழார் வாழ்ந்த இடம்) அம்பத்தூர், ஆகுதி, ஆற்றூர் எழுமூர் (ஏலம்பூர்) என ஐந்து நாடுகளைப் பெற் றது.

பாளையக்காரர்கள், மதருஸ் குப்பத்தை ஆங்கிலேயர் தம் கோட்டையை (சென்னபுரி) கட்டக் கேட்டபோது ஓர் உடன்படிக்கையோடு கொடுத்தார்கள். அவ்வொப்பந்தமாவது: ‘மதருஸ்’ ‘சென்னை’ ‘ஆறு’ குப்பங்களில் உள்ள அருள்மிகு கோயில்களைக் கண்ணேபோல் பாதுகாத்து உதவுதல் வேண்டும் என்பதேயாம். இம் மூன்று குப்பங்களை கி. பி. 1733-லும் 1802-லும் வரைந்த தேசப்படங்களில் காண லாம். (பார்வை : ஷி நூல், தொகுப்பு 1, பக்கம் 90). இன்றுள்ள யுத்த நினைவுச் சின்ன மண்டபமே ஆறுகுப்பம் இருந்த இடம். ‘வட வாறு’ கூவநதியோடு கலந்துவிட்டது. இன்று ‘சால்ட் கோர்டர்ஸ் எனுமிடமே’ மேலப் பேட்டை’ யாக ஏலம்பூர் (எழுமூர்) நதிக் கரையிலிருந்தது. அவ்வாற்று நீர் உப்பு எடுப்ப தற்கும் காய்ச்சுதற்கும் ஏற்றதாக இருந்த தால், மேலப்பேட்டை முழுதும் உப்பளங் களாக மாற்றப்பெற்றன.

“மதருஸ்படம்” (நீலத்துணி) மதருஸ் குப்பத்தில் நெய்ததுபோல் சென்னைக் குப்பத் தில் “சின்னப்படம்” (சின்ன சிவப்புத்துணி) செய்ய ஆரம்பித்தனர் ஆங்கிலேயர். இன்றும் இத்துணிக்கு அந்தமான் தீவிலும் லட்சத் தீவிலும் நல்ல வாணிகம் உண்டு. பழையன

போற்றும் அறிஞர்கள் இத்துணியை மேற் குட்டையாக உபயோகிக்கின்றனர். சென்னைக் குப்பத்தில் பிடித்த ''சென்னைமீனே''ப் பிடிக்க மிகவுறுதியான 'சென்னை வலே' எனும் பெரிய வலைகளைச் செய்ய 1646-ல் தொழிற்சாலைகளை யும் ஏற்படுத்தினர் கிழக்கிந்தியக் கம்பெனியர்.

கி. பி. 2-ஆம் நூற்றுண்டில் கிரேக்கர் திருமயிலையை 'மல்லியார்ப்பா' (Malliarpha) என்றும், 1639-ல் ஆங்கிலேயர் ''பீகாக்டவுன்'' (Peacock Town) என்றும் அழைத்தனர். சென்னைக் குப்பத்தில் உள்ள முத்தியாலுப் பேட்டையை ''பேர்ல் டவுன்'' (Pearl Town) என்றும், பகடாலுப்பேட்டை (தெலுங்கு)யை (இன்று அப்பேட்டை ஒரு சிறு வீதியாகப் பவழக்காரத் தெருவாகவுள்ளது (Coral Town) என்றும் செங்கல்பட்டை 'லோடஸ் டவுன்' (Lotus Town) என்றும் கூறினர் வெள்ளையர். கி. பி. பதினேழாம் நூற்றுண்டில் டச்சுக் காரர்கள் உலாந்தர் (Hollanders), பழவேற்காடு (Pulicat), சதுரங்கப்பட்டினம் (Sadras), நித்திய கல்யாணபுரம் (Covelong — கோவளம்), எனும் கடற்கரைப் பகுதிகளில் வசித்த சுதேசிகளோடு ''உலாந்தர் பச்சைக்கல், உலாந்தா ரவை, உலாந்தா நீலம் என்று பேர் பெற்ற நவரத்தினங்களையும், பருத்தித் துணிகளையும், பொன்னுபரணங்களையும் விற்று வாணிபம் செய்தனர். இன்றும் இவ்வியாபாரம் செய்யும் காசுக்கடைச் செட்டி மார்களையும், அணிகலத் தொழிலாளர்களாகிய பஞ்சாவர் அல்லது பஞ்சபுத்திரர்களையும் (விஸ்வகர்மர்) மிகப் பலராக முத்தியாலுப் பேட்டையில் (சென்னைக் குப்பம்) காணலாம். இவ்விரு குலத்தவர்களே சென்னம்மன் வழி பாட்டினைத்தினசரிசெய்து, விழாக்கள் பல செய் கின்ற உபயகர்த்தர்களாவர். ஆங்கிலேயர் தம் வியாபாரம் நன்கு வளரவும் ஆட்சி நிலை பெறவும் உதவியவர்களாகிய இருவரின் பெயர்களையே இன்று லிங்கிச் செட்டித் தெரு, தம்புச்செட்டித் தெரு என இரண்டு வீதிகளைச் சொல்லுகின்றோம். இவ்விருவரும், பாலுச் செட்டியும், வலக்கை இடங்கை ஜாதிச் சண்டை களில் தலைவர்களாகி ஆங்கில ஆளுநர்களிடம் மன்றாடி மக்களை அமைதியுறச் செய்தவர் களாவர். அவ்வரிய செல்வந்தர்கள் சென்னைக் காளிகாம்பாள் கோயிலை (சென்னம்மன் கோயில்)க் கண்ணேபோல் காத்து விஸ்வகர்மர் களாகிய தருமகர்த்தர்களுக்கு உறுதுணையாக வீற்றிருந்தனர்.

பழவேற்காட்டில் பஞ்சம் ஏற்பட்டது. அங்குள்ள சிவன்கோயிலைக் காட்டிலும் காளி கோயிலே மிகப் பழமையானது. 25-5-1618-ல் போர்ச்சுகீசியர்க்கும் வேறு ஜாதியினர்க்கும் பிறந்த ''மார்டிக்கோ'' (Mertico) 200 பேர் 'புலி கேட்டில்' வசித்தனர். இவர்கள் ஆங்கி லோ இந்தியர் போன்றவர்கள். 30 தம்பதிகள் சிறப்புடன் வந்தார்கள். ஆனல் பஞ்சத்தின் கொடுமையால் ''ஆர்மகம்'' (Anmaham) எனும் கடற்கரைப் பட்டினத்தில் குடியேறினர். குழப்பமடைந்த பெற்றோர்கள் தங்களுடைய குழவிகளை ஆங்கில நாட்டு இரண்டு வெள்ளி மதிப்புடைய நாணயத்திற்கு (Florin) உரிய அரிசிக்குப் பண்டமாற்றுப் புரிந்தனர். ஆயிரக்கணக்கான மகவுகளைக் கப்பலிற் கொண்டுபோய் தென்னிந்திய தீவுகளில் விற்ற னர் மேனாட்டினர்''

கி. பி. 1639-ல் வழி தவறிய டேனிஷ் கப்பல், பழவேற்காட்டுக் கடற்கரையில் நங் கூரம் பாய்ச்சப்பட்டது. 24 வயதுடைய ஆங்கில மாது அக்கப்பலினின்றும் தப்பி வெளி வந்து ''கிங்கதா'' (Gingatha double Canoe) படகில் ஏறிக் கரையை அடைந்தாள். அவளை ஆங்கிலேயரது கோட்டையில் வசித்த ஒரு பாதிரியார் கலியாணம் செய்தார். பஞ்சத் திற்குப் பயந்தும் கடல்வாணிப விருத்திக்கும் ''டே'' (Day) என்னும் ஆங்கில மாலுமி கடற்கரையோரமே தன் கப்பலைச் செலுத்தி ஞன். தெற்கே ஒரு நாக்குப்போன்ற நிலத் தைக் கண்டான்; அங்கு மீனவர்களே வசிப்பதை யும் கண்டான். அந் நாக்குப்போன்ற நெய்தல் நிலம் கோட்டை கட்டுதற்குத் தக்கது என்றும் உத்தமமானது என்றும் தெளிந்தான். அச் செந் திலே (நெய்தல் நிலம்) கடலுக்கும் கூவமாற் றுக்கும் நடுவணதாக அமைந்தது. தென் மேற்கே ஓடை ஒன்று ''வடவாறு'' எனப் பெயர் பெற்று ஓடியது.

மதருஸ் குப்பத்தில் ஆங்கிலேயர் கட்ட நினைத்த கோட்டையை நாயக்கர்கள் தம் செலவில் கட்டித்தர இசைந்தனர். கட்டிய செலவினை ஆங்கிலேயர் கடனாகத் திருப்பித் தர வேண்டும் என ஆணையிட்டனர். நாயக்கர் பழவேற்காட்டுக் காளி பூசை தவறியதால் பஞ்சம் உண்டானது என உணர்ந்த விஸ்வகர் மர்கள் கோயில் திருப்பணி செய்து பயபக்தி யோடு விழாவும் எடுத்தனர். (பார்வை: ஏ. ஆர். இன்கிராம் இயற்றிய (A. R. Ingram) ''இந்தியா வாயில்'' (Gate of India) பக்கம் 25, 26, 27, 80).

சிவாஜிக்குப் பவானி அருள் செய்தது போல் 'சோழமண்டலக்கரையில் உலாந்தரும் பிறரும் சமாதானமாக வாழ்ந்தனர். ஆனல் மதருஸ் குப்பத்தில் குழப்பம் ஏற்பட்டது. சாதி நிற பேதச் சண்டையின் காரணமாகச் சென்னைக் குப்பத்தில் ஜனத்தொகை மிஞ்சி யது. மதச் சண்டையும் பிறந்தது. மசூதி யண்டை வாத்தியம் வாசித்தல், கொ[illegible] களவு மிகுந்தன. கோட்டைக்குள் 26 ஆ[illegible] லேயர் வியாதியஸ்தராயினர். உத்தி[illegible] உயர்வுக்காகப் பேக்கரும் என்றிகிரீன் வி[illegible] போர் தொடுத்தனர். எனவே, கோட்[illegible] அகத்தும் புறத்தும் சச்சரவு மிக்கது. (பார்[illegible] நூல் பக்கம் 135).

3-10-1677-ல் சிவாஜி மகாராஜா மராட்டா டவுன் (சென்னைக் குப்பத்தில்) காளிகோயில் பக்கத்தே பாசறையடித்துத்

தங்கினர். சிவாஜிபாடி வீடு (படைவீடு) ஆடம்பரமற்றிருக்கும். அக்கூடாரங்களில் பெண்கள் இரார்; மூட்டை முடிச்சுகள் இரா. சாதாரணமான மொரட்டுத் துணியால் வைத்த இரண்டு கூடாரங்கள் அடிப்பார் மராட்டியர். ஒன்று வீர சிவாஜிக்கும் மற்றொன்று அவரது பிரதமருக்கும் ஆகும். சேனைவீரர்களும் எளிய வாழ்வினையே ஏற்று நாட்டுக்கும் இந்து மதத்துக்கும் உரியவர்களாயினர். இந்த நெறியோடு சிவாஜி காஞ்சி, செஞ்சி, பூந்தண்மல்லி: விழுப்புரம், உளுந்தூர்பேட்டை, பரங்கிப் பேட்டை, கடலூர், சிதம்பரம், திருவொற்றியூர், திருவாலூர் (திருவாரூர்) முதலிய போர்க்களங்களில் வசித்தார்.

(பார்வை: அயலார் இயற்றிய சிவாஜி சரிதம்-பக்கம் 306).

சிவாஜி மன்னர் தேவி உபாசகர். அம்பா பவானியே அவரை ஆட்கொண்டு நடத்தினள். அவர் சிவசக்தியை நம்பியே எதையும் செய்தார். தேவியைக் கேட்டே எதையும் செய்வது வழக்கம். அவளும் அவரது இதய வொலியாக உணர்த்தினள். ஸ்ரீ தேவிக்குப் படைத்த ''வெண்ணெயில் வெந்த வெண் பொங்கலை'' நடுப்பகலில் உண்பது வழக்கம். ஒரே வேளை உண்ட சிவாஜி ஒரு யோகியே. அவர் இந்து சாம்ராஜ்யத்தைச் சிவையின் அருளாலும் பக்தியாலும் ஸ்தாபித்தார் எனல் உண்மை; வெறும் புகழ்ச்சி இல்லை.

—தொடரும்

அன்பர்கள் கவனிக்க

கடந்த 20 ஆண்டுகளாக, மிகவும் நல்ல முறையில், சிறப்புற நடைபெற்று வரும் நமது ''திருக்கோயில்'' திங்கள் இதழின் சந்தா ஆண்டு, ஜனவரி முதல் டிசம்பர் வரையுள்ள காலமாகக் கணக்கிடப் பெறுகின்றது. ஆதலின், திருக்கோயில் இதழின் புதிய சந்தாதாரராகச் சேர்ந்து, 1978 ஜனவரி மாதம் முதல் 1978 டிசம்பர் மாதம் வரைக்குரிய, 12 இதழ்களையும் தவறாமல் முறையே பெற விரும்புபவர்கள், இம்மாத இறுதிக்குள், முன்னதாகவே சந்தாத் தொகையை விரைந்து அனுப்பி, தங்கள் பெயரைச் சந்தாப் பட்டியலில் பதிவு செய்துகொள்ளும்படி கேட்டுக்கொள்ளப் பெறுகின்றனர். இடையில் சேர்ந்தால், முன்னைய மாத இதழ்கள் பல, பெற முடியாமல் தவறிப் போய்விடும்.

ஆதலின், 1978ஆம் ஆண்டுக்குரிய சந்தாத் தொகையை, இம்மாத இறுதிக்குள் அனுப்பி வைத்து, சந்தாதாரர்களாகச் சேர்ந்து கொள்ளும்படி, அன்பர்கள் வேண்டிக் கொள்ளப்பெறுகின்றனர்.

1978—ஆம் ஆண்டு ஜனவரி முதல் சந்தா விபரம்

உள்நாடு — ரூ. 15—00

வெளிநாடு — ரூ. 25—00

சந்தாத் தொகை அனுப்புபவர்கள் ''திருக்கோயில் இதழின் சந்தாத் தொகை'' என்று மறவாமல் குறிப்பிட்டு,

உயர்திரு ஆணையர் அவர்கள்,

இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை,

நுங்கம்பாக்கம் நெடுஞ்சாலை, சென்னை-600 034

என்னும் முகவரிக்குப் பணவிடை [M. O.] மூலம், அனுப்புதல் வேண்டும். மற்றும் பணவிடைத் தாளின் பின்புறம், தமது (1) முழுப் பெயர், (2) வீட்டின் எண், (3) தெருவின் பெயர், (4) ஊர் அல்லது நகரத்தின் பெயர், (5) வட்டம் (6) மாவட்டத்தின் பெயர், (7) அஞ்சலக எண் [PIN CODE] ஆகிய முழு விபரங்களையும் தெளிவாகக் குறித்து அனுப்புதல் வேண்டும். அப்போதுதான் இதழ்கள் தவறாமல் மாதா மாதம் கிடைப்பதற்கு ஏதுவாக இருக்கும். பழைய சந்தாதாரர்கள், தங்கள் சந்தா எண்ணை மறவாமல் குறிப்பிடுதல் வேண்டும்.

—ஆசிரியர்.

இராமானுச நூற்றந்தாதி

(முற்றொடர்ச்சி)

(66) ஈனம் கடிந்த இராமானுசன்:

திருமால் வீடுபேறு அளிப்பது, ஞான மானது பக்திவடிவமாகப் பரிபக்குவம் அடைந்து, அந்தப் பக்தியினால் நாள்தோறும் மனம் நெகிழ்ந்து உருகுபவர்களுக்கேயாம். மிகவும் கொடிய பாவியான எனது உள்ளத்தில் உள்ள மாசுகளைப் போக்குவித்த இராமானுசர் தம்மை அடைக்கலமாக அடைந்தவர்களுக்கு அந்த வீடுபேற்று நிலையினை அளிக்கும்தன்மை, தம்முடைய அருள் என்ற பொருளை, அவர் களுக்கு வாழ்முதலாகக் கொடுக்கும் திறனாலே யேயாகும்.

''ஞானம் கனிந்த நலங்கொண்டு,
நாள்தொறும் நைபவர்க்கு
வானம் கொடுப்பது மாதவன் ;
வல்வினையேன் மனத்தில்
ஈனம் கடிந்த இராமானுசன்,
தன்னை எய்தினர்க்கு, அத்
தானம் கொடுப்பது தன்தகவு
என்னும் சரண்கொடுத்தே''

(67) அரண் அமைந்த இராமானுசன் :

தன்னைச் சரணம் அடைந்த தருமபுத்திர ருக்காக, முற்காலத்தில் துரியோதனன் முதலிய நூறு பேர்களை இறந்துபோகும்படி செய்வித்த திருமால், தன்னை வழிபடுவதற்காகவே ஏற் படுத்தி வைத்த பொறிபுலன்களாகிய கருவிகள் இவை; இவைகள் உங்களுக்கு உரிமையுடையன அல்ல என்று அறிவுறுத்தி, இராமானுசர் உயிர் களுக்குப் பாதுகாப்பைக் கற்பித்திராவிட்டால், இந்த அருமைமிக்க உயிர்களுக்கெல்லாம் வேறு பாதுகாப்பாவார் யாருளர்? ஒருவரும் இல்லை.

சரணம் அடைந்த தருமனுக்காப்
பண்டு நூற்றுவரை
மரணம் அடைவித்த மாயவன்,
தன்னை வணங்கவைத்த
கரணம் இவை; உமக்குஅன்று; என்று
இராமானுசன் உயிர்கட்கு
அரண் அங்கு அமைத்திலனேல்,
அரண் ஆர் மற்று இவ் ஆருயிர்க்கே?

(68) பொருள் தெரியச் சொன்ன இராமானுசன்:

வியக்கத் தகுந்த சிறப்புமிக்க செயல்களை உடைய திருமால், முற்காலத்தில் பஞ்ச பாண்டவருடைய தெய்வத்தன்மை பொருந்திய தேரின்மீது இருந்துகொண்டு அருளிச் செய்த பகவத்கீதையினுடைய சுவைநிறைந்த பொருளை, அனைவரும் எளிதாகத் தெரிந்து கொள்ளும்படி, இவ்வுலகத்தில் தமது கீதைப் பேருரையின் வாயிலாக அருளிச் செய்த இராமானுசரைப் பணிகின்ற நல்லியல்பு உடையவர்களின் சிறந்த பெருந்தகைமைக் குணங்களில், என்னுடைய உயிரும் உள்ளமும் சென்று சேர்ந்துவிட்டன. சொல்லப்புகுந்தால் இவ்வுலகில் இக்காலத்தில் எனக்கு ஒப்பு ஆவார் யார் உளர்?

ஆர் எனக்கு இன்றுநிகர்? சொல்லில்;
மாயன் அன்று ஐவர்தெய்வத்
தேரினில் செப்பிய கீதையின்
செம்மைப் பொருள்தெரியப்
பாரினில் சொன்ன இராமானுசனைப்
பணியும் நல்லோர்
சீரினிற் சென்று பணிந்தது,
என் ஆவியும் சிந்தையுமே!

(69) எந்தை இராமானுசன் :

படைப்புக்கு முற்காலத்தில் உள்ளமும் பொறிகளும் எல்லாம் கழிந்து, முடிவை அடைந்து அறிவற்ற நிலையில் இருப்பதனைக் கண்டு, அங்ஙனம் அறிவற்ற நிலையிற் கிடந்த வர்களில் ஒருவனாகிய எனக்கு அந்தக் கருவித் தொகுதிகளை, அக்காலத்தில் அருளினா படைத்துக் கொடுத்த திருமாலும்கூட, தன்னு டைய திருவடிகளைக் காட்டியருளி, என்னை உ விக்கவில்லை. அந்தக் குறைநீங்கும்படி, இராம நுசர் தாமாகவே வந்து தம் திருவடிகளை தந்தருளி, இன்று என்னை உலகியல் வாழ்க்கை யாகிய பெருங்கடலினின்றும் எடுத்துக் கரை சேர்த்தருளினர்.

சிந்தையினோடு கரணங்கள் யாவும்
சிதைந்து, முன்னாள்
அந்தம் உற்று ஆழ்ந்ததுகண்டு;
அவை என்றனக்கு என்றருளால்
தந்த அரங்கனும் தன்சரண்
தந்திலன்; தான் அதுதந்து
எந்தை இராமானுசன் வந்து
எடுத்தனன் இன்றுஎன்னையே!

(70) பெருங்கருணை இராமானுசன்:

இராமானுசரே! ஒருகுணமும் இல்லாமல், குற்றங்களே நிறைந்திருக்கின்ற என்னையும் நோக்கி, இனிமேலும் எவ்வகையான நன்மை

யினையும் தேடிக்கொள்ள முடியாமலிருக்கின்ற என்னுடைய தன்மைகளை நோக்கி, எண்ணி றந்த பல சிறந்த பண்புகளையுடைய தங்களையும் நோக்குங்கால், இப்போதுபோல எப்போதும் தாங்கள் அருள்செய்து கொண்டிருப்பதே நல்லது. இது தவிர, மேலும் ஆராயுங்கால், என்னிடத்தில் ஏதேனும் நன்மை உண்டோ? ஒரு சிறிதும் இல்லை. நன்மை ஒன்றும் இல்லாத வர்க்கு நாம் அருள்செய்தல் ஆகாது என்று தாங்கள் திருவுள்ளம் பற்றினால், தங்களைப் புக லடைந்தவர்கள், தங்களின் அருட்டிறனைப் பற்றி யாது நினைப்பார்கள்? மிகவும் இழி வாக அன்றோ கருதிவிடுவார்கள்.

என்னையும் பார்த்து, என் இயல்பையும்
பார்த்து, எண்ணில் பல்குணத்த
உன்னையும் பார்க்கில், அருள்செய்வதே
நலம்; அன்றி என்பால்
பின்னையும் பார்க்கில் நலம்உளதே!
உன் பெருங்கருணை
தன்னை என் பார்ப்பர்?இராமாநுச
உன்னைச் சார்ந்தவரே!

(71) பெருந்தகை இராமாநுசன்:

வள்ளற் றன்மை உடையவரும், எமக்குத் தலைவரும், பெருந்தகைமைக் குணங்களை உடை யவரும் ஆகிய இராமாநுசரே! என்னுடைய உள்ளம் தங்களுடைய இணையடிகளின்கீழ் அமர்ந்து விட்டது. எனது பக்தியும் அந்தத் திருவடித் தாமரைகளிலேயே பெரிதும் மிகுந்து விட்டது. என்னுடைய செயலும் தங்களு டைய திருக்குணங்களுக்கே அற்றுத் தீர்ந்தது. யான் முற்பிறவிகளிற் செய்த பாவங்களெல் லாம், தங்களுடைய திருக்கடைக்கண் பார்வை யினாலேயே தொலைந்து அழிந்து போயின.

சார்ந்தது என்சிந்தை உன் தாள்இணைக்கீழ்;
அன்புதான் மிகவும்
கூர்ந்தது; அத்தாமரைத் தாள்களுக்கு;
உந்தன் குணங்களுக்கே
தீர்ந்தது என்செய்கை; முன்செய்வினை
நீ செய் வினையதனால்
பேர்ந்தது; வண்மை இராமாநுசா!
எம் பெருந்தகையே!

(72) வண்மை இராமாநுசன்:

இராமாநுசர் தமது வள்ளன்மைப் பண் பினை மிகுதியாகக் காட்டி, தீய புன்சமயங் களில் இருந்துகொண்டு கலகம் செய்பவர்களை ஒழித்துவிட்டார்; தூய்மை நிறைந்த வேத நெறியினை இவ்வுலகத்தில் நிலைநிறுவினார்; என்று நினைத்து உள்ளம் கனிந்து, அந்த மகிழ்ச்சியோடு கூடியிருந்து, அவரைத் துதித்து வணங்குகின்ற புகழ்மிக்க பெருமக்களுடன், தானும் ஒருவனாகச் சேர்ந்து விளங்கும்படி தன்னை வைத்தருளினார்.

கைத்தனன் தீய சமயக்
கலகரைக், காசினிக்கே
உய்த்தனன் தூய மறைநெறி
தன்னைஎன்று, உன்னி உள்ளம்
நெய்த்த அன்போடு இருந்துஏத்தும்
நிறைபுகழோர் உடனே,
வைத்தனன் என்னை இராமாநுசன்;
மிக்க வண்மை செய்தே.

(73) ஞானம் உரைத்த இராமாநுசன்:

தம்முடைய வள்ளன்மைப் பண்பினாலும், மேலான அருள் நலனாலும், திங்களைப்போன்ற திருவுள்ளத்தின் குளிர்ச்சியினாலும் இவ்வுலகில் உள்ளவர்களுக்கெல்லாம் தாமே காப்பாள ராய் விளங்கி, இயல்பாகச் சிறந்த ஞானத்தை அறிவுறுத்தருளிய இராமாநுசரைச் சிந்தித்தல் ஆகிய உறுதிப்பாட்டைத் தவிர, ஆராயுங்கால் அடியேனுடைய ஒரு உறுதிப்பாடு வேறு எது வும் இல்லை.

வண்மையினாலும், தன் மா
தகவாலும், மதிபுரையும்
தண்மையினாலும், இத் தாரணி
யோர்கட்குத், தான்சரணாய்,
உண்மை நன்ஞானம் உரைத்த
இராமாநுசனை, உன்னும்
திண்மை யல்லால் எனக்குஇல்லை;
மற்று ஓர்நிலை தேர்ந்திடிலே!

(74) ஏரார் குணத்து எம் இராமாநுசன்:

வேதங்கள் சொல்லுகின்ற நெறியை இவர்கள் அறிந்து தெளியவில்லை என்று, திரு மால், பாவிகளைத் தண்டிப்பது கூர்மையான சக்கரப்படையினாலேயே ஆகும். மேகம்போன்ற என்மைக் குணம் உடையவரும் மற்றும் பல நல்ல பண்புகளை உடையவருமான இராமா நுசர், அந்தச் சிறந்த வேதத்தில் ஈடுபடாத வர்களை வெற்றிகொண்டு சிதைப்பது, அப் போதைக்கு அப்போது, ஒவ்வொரு புதிய நுண் ணிய சிந்தனையைக் கொண்டு ஆகும்.

தேரார் மறையின் திறம்என்று,
மாயவன் தீயவரைக்
கூர்ஆழி கொண்டு குறைப்பது;
கொண்டல் அனைய வண்மை
ஏரார் குணத்து எம்இராமாநுசன்,
அவ்எழில் மறையில்
சேராதவரைச் சிதைப்பது,
அப்போது ஒரு சிந்தைசெய்தே.

(75) புகழ்மிகும் இராமாநுசன்:

வயல்களில் சங்குகள் அழகிய முத்துக்களை ஈனுகின்ற, வளம்மிகுந்த திருவரங்கமாநகரில் எழுந்தருளியிருக்கும் பெருமாள், தமது திருக் கையில், திருவாழி திருச்சங்குகளைத் தரித்துக் கொண்டு, எனது கண்ணெதிரில் வந்து நெருங்கி 'உன்னை விடமாட்டேன்' என்று பற்றிக் கொண்டு அலைத்தபோதிலும், இராமாநுசரே! தங்களுடைய சிறந்த திவ்விய குணங்கள் என் பக்கல் வந்து சூழ்ந்துகொண்டு, என்னைப் பெரி தும் கவர்கின்றன.

செய்த்தலைச் சங்கம் செழுமுத்து
ஈனும் திருவரங்கர்,
கைத்தலத்து ஆழியும் சங்கமும்
ஏந்தி, நம்கண்முகப்பே
மொய்த்து அலைத்து, உன்னைவிடேன்
என்று இருக்கினும், நின்புகழே
மொய்த்து அலைக்கும் வந்து;
இராமாநுசா! என்னை முற்றுமின்றே.

(76) இன்பந்தரும் இராமாநுசன்:

இராமாநுசரே! நிலைநின்ற பெரும் புகழும், மிகுதியாக நீர்வளமும் நிறைந்துள்ள திருவேங் கடம் என்னும் அழகிய திருமலையும், பரமபத மாகிய திருநாமமும், கொண்டாடத்தக்க திருப் பாற் கடலும், தங்களுக்கு எவ்வளவு சிறந்த அளவற்ற மகிழ்ச்சியை விளைவிக்குமோ, அத்தகைய மகிழ்ச்சியைத் தங்களுடைய இரண்டு திருவடிகள், எனக்கு உண்டாக்கும். அத்தகைய தங்கள் சிறப்புமிக்க திருவடிகளைத் தாங்கள் அடியேனுக்குத் தந்தருள்தல் வேண்டும்.

நின்றவண் கீர்த்தியும், நீள்புனலும்,
நிறை வேங்கடப் பொற்
குன்றமும், வைகுந்த நாடும்,
குலவிய பாற் கடலும்,
உன்றனக்கு எத்தனை இன்பந்தரும்;
உன் இணை மலர்த்தாள்
என்றனக்கும் அது; இராமாநுச!
இவை ஈந்தருளே!

(77) இன்னருள் இராமாநுசன்:

இதற்கு முன்பு ஒருவருக்கும் செய்யாத, சிறந்த அருளை அடியேனுக்குச் செய்தருளிய வரும்; எண்ணிறந்த வேத விரோத மதங்களை யெல்லாம், அந்த வேதங்களின் பொருளையே சான்றாகக் கொண்டு, கடிந்து களைந்தவரும்; தமது பெரும் புகழால் இவ்வுலகமெங்கும் பரவி நிற்பவரும்; எனது தீவினைகளை வேரோடே அற்றொழியும்படி போக்கியவரும்; வள்ளன்மையே வடிவு கொண்டவருமான இராமாநுசருக்கு, இன்னமும் செய்யத் தக்க தாகத் திருவுள்ளத்தில் ஏதேனும் உண்டோ?

ஈந்தனன் ஈயாத இன்னருள்;
எண்ணில் மறைக் குறும்பைப்
பாய்ந்தனன் அம்மறைப் பல்பொருளால்;
இப் படி அனைத்தும்
ஏய்ந்தனன் கீர்த்தியினால்; என்
வினைகளை வேர் பறியக்
காய்ந்தனன்; வண்மை இராமாநுசற்கு
என் கருத்து? இனியே.

(78) கருத்தில் புகுந்த இராமாநுசன்:

இராமாநுசரே! தாங்கள் என்பொருட்டு, நெஞ்சால் நினைக்கவும் இயலாத பெரும் பாடுகள் பட்டு, என்னை நன்றாக ஏமாற்றி எனது நெஞ்சத்தில் வந்து புகுந்து, அதன் உள்ளேயிருந்த உயிர்க்களவு ஆகிய குற்றத் தைப் போக்கி, என்னைத் திருந்துமாறு செய்து, இவ்வுலகத்தில் என்னைத் திருமாலுக்கு ஆளாகும் படி செய்தருளிய பின்னர், இதற்கு மாறான வேறு எந்த தவறான நினைவும் என் உள்ளத்தில் வந்து பொருந்தமாட்டாது.

கருத்தில் புகுந்து, உள்ளில்
கள்ளம் கழற்றிக், கருதரிய
வருத்தத்தினால் மிக வஞ்சித்து,
நீ இந்த மண்ணகத்தே
திருத்தித் திருமகள் கேள்வனுக்கு
ஆக்கியபின், என்நெஞ்சில்
பொருத்தப்படாது, எம் இராமாநுச!
மற்று ஓர் பொய்ப்பொருளே.

(79) மெய்யைப் புரக்கும் இராமாநுசன்:

இவ்வுலகத்தில் பொய்யான கருத்துக் களையேமேன்மேலும் வெளிப்படுத்திப் பரப்பு கின்ற, புறச் சமயத்தவர்களின் பொருள்களைக் கடிந்து, உண்மையைக் காப்பாற்றுகின்ற இரா மாநுசர் எழுந்தருளியிருக்கும்போது, இவரைப் பொருளாகக் கருதாமல், இவ்வுலகத்தில் அறி வில்லாத மக்கள் ''நம்மை உய்விக்க வல்ல வேறு ஏதேனும் தெய்வம் இவ்வுலகத்தில் உண் டோ?'' என்று தேடி ஆராய்ந்துகொண்டு, அதனால் ஏற்படும் மன வருத்தத்தால், உடல் உலர்ந்து இளைத்து கெடுகின்றார்கள். இராமா நுசரின் திருவடி மலர்களை அடைக்கலம் என்று இருக்கின்ற நல்ல ஞானத்தைப் பெறாமல், இவர்கள் வீணாக ஐயப்பட்டு உழல்கின்றார்கள். அந்தோ! பாவம்.

பொய்யைச் சுரக்கும் பொருளைத்
துரந்து; இந்தப் பூதலத்தே
மெய்யைப் புரக்கும் இராமாநுசன்
நிற்க, வேறு நம்மை
உய்யக் கொள்ளவல்ல தெய்வம்
இங்கு யாதுஎன்று உணர்ந்து, அவமே
ஐயப்படா நிற்பர்; வையத்து உள்ளோர்
நல் அறிவு இழந்தே.

(80) நல்லார் பரவும் இராமாநுசன்:

நலம் நிறைந்த பெருமக்களால் துதித்துப் புகழப்படுகின்ற, இராமாநுசருடைய திருப் பெயரைத் தமக்குத் தஞ்சமாக நம்பியிருக்க வல்லவர்களின் சிறப்பினை மறவாமல், எப் போதும் சிந்திப்பவர்கள் யாரோ, அத்தகைய, இராமாநுசரின் அடியார் அடியவர்களுக்கே, எல்லா இடங்களிலும், எல்லா நிலைகளிலும், எல்லாக் காலங்களிலும், எல்லாவகையான பணிவிடைகளையும், மனமொழி மெய்கள் என் னும் முக்கரணங்களாலும், யான் சோர்வு சிறிதும் இன்றிச் செய்து மகிழ்வேன்.

நல்லார் பரவும் இராமாநுசன்
திருநாமம், நம்ப
வல்லார் திறத்தை மறவாதவர்கள்:
யவர், அவர்க்கே
எல்லா இடத்திலும், என்றும், எப்
போதிலும், எத்தொழும்பும்,
சொல்லால் மனத்தால் கருமத்தினால்
செய்வன்; சோர்வு இன்றியே.

(81) சீர் ஒன்றிய கருணை இராமாநுசன்:

இராமாநுசரே! நும்முடைய இரண் திருவடிகளின்கீழே, சோர்வு இன்றி அன்பு அடிமைப்பட்டவர்கள் பக்கலில் சென்று தல் இல்லாமல் இருந்த எனக்கு, இன்று பெருமாளாகிய திருவரங்கநாதனின் திருவடி இணைகளை ஒருகாலும் விட்டு நீ படி, தலைமணியாகத் தந்தருளின தங்க சிறந்த திருவருளுக்கு, ஆராயும் அளவில் நிக எதுவும் இல்லை.

சோர்வு இன்றி உன்றன்
துணையடிக்கீழ்த் தொண்டுபட்டவர்பால்
சார்வு இன்றி நின்றஎனக்கு,
அரங்கன் செய்ய தாளிணைகள்

பேர்வு இன்றி இன்றுபெறுத்தும்
இராமாநுச! இனிஉன்
சீர் ஒன்றிய கருணைக்கு இல்லை,
மாறு தெரிவுறினே.

(82) தெரிவுற்ற கீர்த்தி இராமாநுசன்:

தெளிவான ஞானத்தைச் சேரப்பெறுமல், மிகவும் கொடிய தீவினையினுலே பயனற்ற வீண் அறிவை உடையவனுய், ஒன்றினுலும் நிலை கொள்ளாமல், திரிந்து உழல்கின்ற என்னை ஒரு நொடிப்பொழுதில் ஒப்பற்ற பல கல்வி கேள்விகளை உடையவனுகும்படி செய்தருளிய வரும், மிகவும் பரவிய பெரும் புகழினை உடையவரும், வள்ளன்மையால் சிறந்த மேகம் என்று சொல்லும்படி திகழ்பவருமாகிய இராமாநுசர், எத்தகைய அறச் செயலாளரோ? அவரைப் போன்ற அறவாணர் எவரும் இல்லை.

தெரிவுஉற்ற ஞானம் செறியப்
பெறுது, வெம்தீவினையால்
உருஅற்ற ஞானத்து உழல்கின்ற
என்னை, ஒருபொழுதில்
பொருஅற்ற கேள்வியன் ஆக்கிநின்முன்,
என்ன புண்ணியனே?
தெரிவுற்ற கீர்த்தி இராமாநுசன்
என்னும் சீர்முகிலே

(83) கார்கொண்ட வண்மை இராமாநுசன்:

இராமாநுசரே! நான், சமம் தமம் முதலிய பண்புநலங்களை உடையவராய், சிறந்த அறமாகிய சரணுகதி யோக நெறியினைக் கடைப்பிடித்து, மிக மேலான உறுதிப் பொருளாகிய வீடுபேற்றை அடைந்திடுவோம் என்று எண்ணிக் கொண்டிருக்கின்ற, புகழோங்கிய பெருமக்களின் திருக்கூட்டத்தைச் சேர்ந்தவன் அல்லேன். தங்களுடைய இரண்டு திருவடிகள் ஆகிய மேலான சிறந்த வீடுபேற்றை யான் எளிதாகப் பெற்றுவிடுவேன். வள்ளன்மைப் பண்பில் மேகத்தையும் வெற்றிகொண்டு விளங்குகின்ற தங்களின் கொடைநலம் இத்தகையது! தாங்களே அதனை ஆய்ந்துணர்ந்து கொள்ளலாம். அடியேன் தங்களுக்குச் சொல்லுதல் வேண்டுமோ!

சீர்கொண்டு பேரறம் செய்து,
நல்வீடு செறிதும் என்னும்
பார்கொண்ட மேன்மையர் கூட்டன்
அல்லேன்; உன்பத யுகமாம்,
ஏர்கொண்ட வீட்டை எளிதினில்
எய்துவன்; உன்னுடைய
கார்கொண்ட வண்மை இராமாநுசா!
இது கண்டு கொள்ளே!

(84) உலப்பிலா இராமாநுசன்:

இராமாநுசரின் இயல்பினை இன்று யான் உள்ளபடி தெரிந்து கொண்டேன். தெரிந்து கொண்ட அளவில், அவர்தம் அன்பர்களின் அழகிய திருவடிகளில் அடிமைப்பட்டேன். அதனுல் எனது பழைய கொடிய வினைக்காடுகளை நீக்கிக் கொண்டேன். அவருடைய சிறந்த பெருந்தகைமைப் பண்புகள் ஆகிய பெருங் கடலை வாயாரப் பருகி நுகரப்பெற்றேன். இவ்வாறு மேன்மேலும் யான்பெற்ற நன்மைகளைச் சொல்லப்புகுந்தால், அதற்கு ஒரு முடிவும் இல்லை.

கண்டுகொண்டேன் எம் இராமாநுசன்
தன்னைக்; காண்டலுமே
தொண்டு கொண்டேன் அவர் தொண்டர்
பொற்றுளில்; என் தொல்லை வெம்நோய்
விண்டுகொண்டேன்; அவன்சீர் வெள்ள
வாரியை, வாய்மடுத்து இன்று
உண்டுகொண்டேன்; இன்னம் உற்றன
ஓதில் உலப்பு இல்லையே!

(85) பேதைமை தீர்த்த இராமாநுசன்:

தேவர்களும் முனிவர்களும் ஓதுகின்ற வேதங்களின் உட்பொருளாகவும், அவ்வேதங்களின் முடிபாகிய உபநிடதங்களில் விளங்குகின்ற சோதியாகவும் உள்ள திருமாலை, எல்லாவற்றிற்கும் மேலான பெருந் தலைவன் என்று தெரிந்து கொள்ளாமல், கண்டகண்ட இடங்களிலெல்லாம் அடிமை செய்து அலைந்து திரிகின்ற புன்மக்களின் அறியாமையினைப் போக்கியருளிய இராமாநுசரைத் தொழுகின்ற பெருமக்களுடைய திருவடிகள் தவிர, என்னுடைய அருமையான உயிர்க்கு வேறு எந்த ஒரு புகலிடமும் இல்லை.

ஓதிய வேதத்தின் உட்பொருளாய்,
அதன் உச்சி மிக்க
சோதியை, நாதன் எனஅறியாது
உழல்கின்ற, தொண்டர்
பேதைமை தீர்த்த, இராமா
நுசனைத் தொழும்பெரிய
பாதம்அல்லால், என்றன் ஆருயிர்க்கு
யாது ஒன்றும் பற்றுஇல்லையே.

—ஆசிரியர்.

—(தொடரும்....)

சேக்கிழார் எடுத்த செஞ்சொற்கோயில்



''சேக்கிழார் பாத சேகரர்''
திரு. சி. சு. கண்ணுயிரம், கோவை.

முன்னுரை :

ஆலய வழிபாடு நற்கதிக்கு மட்டுமன்றி இவ்வுலக வாழ்விலும் எல்லா நலன்களையும் எய்துதற்கும், மனச்சாந்தி பெறுதற்கும் ஆன்றோரால் வகுக்கப்பட்ட நெறியாகும். எங்கும் நிறைந்துள்ள இறைவனை எங்கு வேண்டுமாயினும் வணங்கலாம். ஆயினும் ஆலயத்துள் வணங்குதல் விரைந்து நிறைந்த பலனைப் பெறச் சுருக்க வழியாகும். பல சான்றோர்கள் பல காலும் வழிபட்ட இடம் என்ற நினைவும்; அவர்கள் பார்த்த மூர்த்தங்களையே நாமும் தரிசிக்கின்றோம் என்ற நினைவும்; ஒத்த மன உணர்வுடைய பல பக்தர்கள் உடனிருந்து தொழுவதால் ஏற்படும் உள்ளக் கிளர்ச்சியும் இந்தச் சுருக்கவழி அமைய உதவுகின்றன. எங்கும் நிறைந்து வீசும் சூரியனின் ஒளி, சூரிய காந்தக் கண்ணுடி என்னும் லென்ஸ் மூலம் வரும்பொழுது மிக அதிக வெப்பம் தருவதை இதற்கு உதாரணமாகக் காட்டுவர். ஏனைய இடங்களில் தொழுவது நன்றாயினும் ''ஆலயந் தொழுவது சாலவும் நன்று'' என்று அறிவுறுத்தினள் ஔவைப் பிராட்டியும்.

சிவாலயங்கள் :

இவ்வாலயங்களுள், வேதநெறியைப் பிரமாணமாக ஏற்றுக்கொண்ட இந்துக்கள் சென்று தொழுவன பலவாம். அவர்களுள் ஒரு பெரும் பிரிவினர் சிவபெருமானை வணங்குவோர். இவர்களும் விநாயகர் முருகன் அம்பிகை சாஸ்தா போன்ற மூர்த்தங்களை நிறுவி வழிபடும் தனித்தனி ஆலயங்கள் உள்ளன. இவை எல்லா அங்கங்களும் அமையப்பெற்று விளங்குவனவே சிவாலயங்கள்.

வழிபடும் முறை :

சிவாலயங்களில் சென்று வழிபடுவதற்குச் சான்றோர் பல விதிகளை வகுத்துள்ளனர். குளித்துத் தூய்மை செய்துகொண்டு, திருநீறு முதலிய சிவ சின்னங்களைத் தரித்து ஆலயம் செல்ல வேண்டும். தொலைவில் இராயகோபுரம் தெரியும்பொழுதே, அதை ஸ்தூல லிங்கமாகக் கருதி வணங்க வேண்டும். கோயில் வாயிலை அடைந்ததும் தீபஸ்தம்பத்திலோ, அல்லது கோபுர வாயிலில் தனிச் சந்நிதியில் உள்ள சிறு ஆலயத்திலோ உள்ள விநாயகரை முதலில் வணங்க வேண்டும். கோயிலினுள் நுழைந்ததும் பிராகாரத்தில் முதலில் தென்கிழக்கு மூலையில் உள்ள சூரியனை வணங்க வேண்டும். பிறகு பிராகாரத்தில் தொடர்ந்து வலம்வரும்பொழுது விமானங்களிலும், திருமதில்களிலுமுள்ள சுதைச் சிற்பங்களைப் பார்த்துக்கொண்டே சென்று தென்மேற்கு மூலையிலுள்ள நிருதி விநாயகரை வணங்கவேண்டும். பிராகார முடிவில் வடகிழக்கு மூலையில் உள்ள சந்திரனை வணங்கிப் பிராகாரத்தை முடித்துக் கொள்ளலாம்.

அடுத்துச் சுவாமி சந்நிதியில் உள்ள பலிபீடத்தில் நம் பசு போதங்களைப் பலியிட்டுக் கொடிமரத்தை வணங்கி, அதற்கு முன்புள்ள திருநந்திதேவரிடம் உள்ளே செல்ல அனுமதி பெற்றுக் கொள்ளவேண்டும். இனி இரண்டாவது பிராகாரத்தில் நுழையலாம். இங்குத் தேவாசிரிய மண்டபத்தில் இறைவன் தரிசனத்துக்குக் காத்திருக்கும் அடியார்களின் திருக்கூட்டத்தை முதலில் வணங்கவேண்டும். இனி இப்பிராகாரத்தில் வலம்வந்து சுவாமி சந்நிதியில் நுழையலாம். இங்குக் கோயில் அர்ச்சகர் நம்மை இன்முகம் காட்டி வரவேற்பார். பிறகு துவார பாலகரை வணங்கி உள்ளே சென்று மூலவரைச் சிவலிங்க வடிவில் தரிசிக்கலாம். தொடர்ந்து தட்சிணுமூர்த்தி, நடராசர், சோமாஸ்கந்தர், முருகப்பெருமான் இவர்களை வணங்கி, அம்பிகை கோயிலினுள் சென்று துர்க்கை, திருமால் ஆகியவர்களை வணங்கிய பின் அம்பிகையைத் தரிசிக்கலாம்.

இனிச் சண்டேசர் சந்நிதியிற் சென்று சிவ தரிசனப் பலனை அருளும்படி வேண்டி வெளி வந்து நவக்கிரகங்களை வணங்கலாம். அத... பிறகு, நூற்றுக்கால் மண்டபம், ஆயிரக்க... மண்டபம் போன்றவற்றுளுள்ள சிற்பச் ... வங்களைக்கண்டு களிக்கலாம். இறுதியாக ... பைரவரை வணங்கி விடைபெற்றுக்கொ... பலிபீடத்தின் அருகில் ஓரமைதியான இடத்... அமர்ந்து திருவைந்தெழுத்தை இயன்ற அளவு செபித்து வீடு திரும்ப வேண்டும். இவை சிவாலய தரிசனத்தின் பொது விதிகள். ஆனல் கற்றுவல்லோரிலும் இவற்றை அறிந்தோர் இந்நாளில் குறைவு. அறிந்தும் கடைப்பிடிப்போர் இன்னும் குறைவு.

சொற்கோயில் :

நமது முன்னோர் பல கோயில்களை எடுத்தனர். அவை என்றும் நிலைத்திருக்கும் வண்ணம் பிற்காலச் சோழர்கள் அவற்றைக் கற்கோயில்களாக்கினர். அச்சோழப் பேரரசின் முதலமைச்சராகத் திகழ்ந்திருந்த சேக்கிழார் பெருமானே, என்றும் நிலைத்திருப்பது மட்டுமன்றி, எங்கும் எடுத்துச் செல்ல வசதியுள்ளதுமான ஓர் சொற்கோயிலை எடுத்தார். அதுவே பெரிய புராணம் என்று வழங்கப்படுகின்றது.

மேல் விளக்கிய ஆலய தரிசன விதிகளை முறையாகவும் தொடர்ந்து வரிசையாகவும் கைக்கொண்டு நாம் இந்தச் சொற்கோயிலில் வழிபடும் வண்ணம் சேக்கிழார் பெருமான் இக்கோயிலை எடுப்பித்துள்ளார். அதை நாம் ஈண்டுக் காண்போம்.

இராசகோபுரம்-ஸ்தூல லிங்க தரிசனம் :

பெரியபுராணத்தின் முதற் செய்யுளே இந்த இராயகோபுரமாகிய ஸ்தூல லிங்கமாகும் அது.

உலகெ லாமுணர்ந் தோதற் கரியவன்
நிலவு லாவிய நீர்மலி வேணியன்
அலகில் சோதியன் அம்பலத் தாடுவான்
மலர்சி லம்படி வாழ்த்தி வணங்குவாம். (பாயிரம் 1)

என்பதாகும். ஸ்தூல லிங்கம் என்பதற்கேற்ப இறைவனின் இயல்பும், அவன் கோலத்தில் காணும் நிலவு, கங்கை, சடைமுடி, சிலம்பு, திருவடி ஆகியவற்றையும் கேசாதிபாதமாகக் காட்டி அவனை நாம் தரிசிக்கச் செய்யும் ஆசிரியரின் கவிநலமும் காண்க.

விநாயகர் :

தொலைவிலேயே கோபுரதரிசனம் செய்த நாம் இப்பொழுது கோயிலை நெருங்கி அதன் வாயிலில் உள்ள தீபஸ்தம்பத்தின் அருகில் நிற்கின்றோம். இதன் நாற்புறமும் புடைச் சிற்பங்கள் உள்ளன. கிழக்குப்புறமுள்ளது விநாயகர் வடிவம். சிதம்பரம் போன்ற தலங்களில் கோயில் வாயிலில் விநாயகருக்குத் தனிச் சிறு ஆலயமே உண்டு. தில்லையில் இவர் கற்பக விநாயகர் என்று வழங்கப்படுகிறார். திருத்தொண்டர்புராணக் கோயிலிலும் இங்கு …யகருக்குத் தனி ஆலயம் உண்டு. அதனுள் …ள விநாயகர்,

…கும் மாக்கதை இன்றமிழ்ச் செய்யுளாய்
…டக்கும் மேன்மை நமக்கருள் செய்திடத்
தடக்கை ஐந்துடைத் தாழ்செவி நீண்முடி
கடக்க ளிற்றைக் கருத்து ளிருத்துவாம். (பாயிரம்-3)

என்று சேக்கிழார் பெருமானால் நமக்குத் தரிசனம் செய்விக்கப்படுகின்றார்.

சூரியன் :

இவ்விதம் நாம் இவ் விநாயகப்பெருமானை வணங்கி, இந்தச் சொற்கோயிலின் வெளிப் பிராகாரத்தில் வலம் வரத் தொடங்குகின்றோம். இத்திருச்சுற்றின் தென்கிழக்கு மூலையில் சூரிய பகவானின் சந்நிதியில் நின்று வணங்குகின்றோம். செஞ்சுடரோனின் ஒளிவெள்ளம் கோயில் முழுதும் பாய்ந்தால்தானே, இருள் நீங்கி நமது கண்கள் மூர்த்திகளைத் தரிசித்து இன்புற இயலும்? புற இருளை மட்டுமன்றி, அக இருளையும் ஓட்டுகின்ற இச் செங்கதிரவனைக் கீழே தரிசியுங்கள்.

''இங்கிதன் நாமம் கூறின்
இவ்வுல கத்து முன்னாள்
தங்கிருள் இரண்டில் மாக்கள்
சிந்தையுட் சார்ந்து நின்ற
பொங்கிய இருளை ஏனைப்
புறஇருள் போக்கு கின்ற
செங்கதி ரவன்போல் நீக்கும்
திருத்தொண்டர் புராணம் என்பாம்
—பாயிரம் 10

கோபுரப் பதுமைகள்:

இனி, இப்பிராகாரத்தில் தொடர்ந்து வலம் வரும்பொழுது, இராய கோபுரம், திருமதில் உச்சிகள், சூழ்ந்து நிறைந்துள்ள பல விமானங்கள் ஆகியவற்றில், நெருங்கியுள்ள சுதைச் சிற்பங்களைக் கண்டு களித்துக் கொண்டே செல்கின்றோம். அவற்றுள் பல சிறு சிறு பூதங்களின் வடிவங்கள், அவை கோபுரத்தைத் தாங்குதல், மலையை எடுத்தல், சங்கு ஊதுதல் போன்ற வலிய செயல்களில் ஈடுபட்டுள்ளன. இவற்றை இந்தச் செஞ்சொற் கோயிலிலும் காண்கின்றோம். இதோ பாருங்கள்:

நீடு தேவர் நிலைகளும், வேண்டிடின்
நாடும் ஐம்பெரும் பூதமும் நாட்டுவ,
கோடி கோடி குறட்சிறு பூதங்கள்
பாடி ஆடும் பரப்பது பாங்கெலாம்
—திருமலைச் சிறப்பு-6.

நிருதி விநாயகர் :

இவற்றைப் பார்த்துக் கொண்டே பிராகாரத்தில் தொடர்ந்து வலம் வருகின்றோம். இப்பொழுது நாம் பிராகாரத்தின் தென் மேற்கு மூலையை அடைந்துவிட்டோம். இதற்கு நிருதிமூலை என்று பெயர். அஷ்டதிக்குப் பாலகருள் ஒருவரான நிருதி என்பவர், இத்திசைக்கு அதிபராதலின் இது இப்பெயர் பெற்றது. அனேகமாக எல்லாச் சிவாலயங்களிலும், இங்கு ஒரு சிறு கோயிலில் விநாயகர் எழுந்தருளி இருப்பார். இவரை நிருதி விநாயகர் என்பர். பெரியபுராணக் கோயிலிலும் இங்குச் சேக்கிழார் பெருமான் நிருதி விநாயகரை நிறுவியுள்ளார். அதைக் கதை சொல்லும் போக்

தில் குறித்துச் செல்கின்றார். திருக்கயிலையில் சிவ பரஞ்சுடரைத் தரிசிக்க வந்த திருமால், தமது வாகனமாகிய கருடனை விட்டு இறங்கி, அதை அங்கு ஓர் இடத்தில் விட்டு, மலைச்சாரலை அடைகின்றார். அங்கு நின்றும் சந்நிதியில் செல்வதற்கு உரிய சமயம் பார்த்துக் காத்திருக்கின்றார். அவர் பிரிந்து சென்று நெடுநேர மாகியும் வராமையால் அவரைத் தேடிக் கொண்டு கருடனும் அங்கு வருகின்றான். அப்பொழுது வழியில் ஒரு காட்சி. வெண்சுடர் போன்ற அப் பனிமலையின் வங்கு ஒன்றுள், விநாயகப் பெருமானின் வாகனமாகிய பெருச்சாளி நுழைகின்றது. தொலைவில் பார்த்த கருடன் அப்பெருச்சாளியைப் பன்றி என்று தவறுகக் கருதிக் கொள்ளுகின்றான். ''முன்பு ஒருகாலத்தில் திருவண்ணுமலையில் சிவபெருமான் செஞ்சுடராக நின்றார்; அவர் திருவடியைக் காண நமது தலைவராகிய திருமால் பன்றி வடிவமெடுத்துப் பூமியை அகழ்ந்து சென்றார்; இன்று இங்கு இறைவர் வெண்சுடராக இக் கயிலை மலைவடிவில் நிற்கின்றார்; அவர் பாத பத்மங்களைக் காண நமது தலைவர் மீண்டும் பன்றி வடிவம் எடுத்துப் பூமியைக் குடைகின்றார் போலும்; நாமும் அவருடன் சேர்ந்து கொள்வோம்'' என்று அங்கு வேகமாக வருகின்றான் கருடன்! இக்காட்சியைத் தீட்டும் சேக்கிழார்பெருமான் துதிக்கையோனைக் குறிப்பிடும் பாங்கில், இங்கு நிருதி விநாயகரைப் பிரதிஷ்டை செய்துள்ளதைக் கீழே காண்க.

காதில்வெண் குழையோன் கழல்தொழ, நெடியோன்
காலம்பார்த் திருந்ததும் அறியான்,
சோதிவெண் கயிலைத் தாழ்வரை முழையில்
துதிக்கையோன் ஊர்தியைக் கண்டு,
மீதெழு பண்டைச் செஞ்சுடர் இன்று
வெண்சுடர் ஆனதென்று, அதன்கீழ்
ஆதி ஏனமதாய் இடக்கலுற் றான்என்று
அதனைவந் தணைதரும் கலுழன்!

—திருமலைச் சிறப்பு 8

சந்திரன்:

நிருதி மூலையில் உள்ள இத் துதிக்கையோனைத் துதித்து மேற்செல்வோம். இப்பொழுது நாம் இப்பிராகாரத்தின் முடிவில், வடகிழக்கு மூலையில் நிற்கின்றோம். இங்குள்ள சுற்றாலயம் சந்திர பகவானின் சந்நிதி. சூரியனைச் ''செஞ்சுடர்'' என்றும், சந்திரனை ''வெண்சுடர்'' என்றும் கூறுவது தமிழ்மரபு. மேற்குறித்த பாட்டிலேயே ''துதிக்கையோனை'' அடுத்து இந்த ''வெண்சுடரோன்'' நிறுவப் பட்டுள்ளதைக் கண்டு வணங்குக.

பலிபீடம்—கொடிமரம் :

இப்பொழுது நாம் வெளிச் சுற்றுமுழுவதும் பிராகாரமாக வந்துவிட்டோம். சந்நிதியில் நாம் நிற்கும் இடம் பலிபீடம், கொடிமரம், நந்திதேவர் உள்ள பகுதியாகும். திருத்தொண்டர் புராணமாகிய திருக்கோயிலில் கயிலைத் திருமலைச்சாரலின் ஒரு பகுதியே பலிபீடமாக அமைகின்றது; பிரமன் முதலிய பெருந்தேவர்கள், தங்கள் தங்கள் உலகங்களிலிருந்து, இறைவனைத் தரிசிக்க ஏறிவரும் உயர்ந்த மாடிப்படி போன்ற வழியே, இந்தப் பலிபீடத்தை அடுத்து நிற்கும் கொடிமரமாகின்றது.

''அரம்பையர் ஆடல் முழவுடன், மருங்கில்
அருவிகள் எதிரெதிர் முழங்க,
வரம்பெறு காதல் மனத்துடன் தெய்வ
மதுமலர் இருகையும் ஏந்தி,
நிரந்தரம் மிடைந்த விமான சோபான
நீடுயர் வழியினல் ஏறிப்,
புரந்தரன் முதலாங் கடவுளர் போற்றப்
பொலிவது, அத் திருமலைப் பறம்பு!

—திருமலைச் சிறப்பு 9

திருநந்திதேவர் :

இவற்றை அடுத்துள்ளவர் திருநந்திதேவர். இவர் திருக்கயிலையிற் போலவே பூவுலகிலுள்ள கோயில்களிலும், இறைவனின் சந்நிதியிலுள்ள தலைமைக் காவலாளர். இவரை வணங்கி உள்ளே செல்ல அனுமதி பெற்ற பிறகே மேற்செல்ல வேண்டும். கோயிலினுள் படுத்த நிலையில் உள்ள காளைபோன்ற திருவுருவில் காட்சிதரினும், உண்மையில் இவர் சிவசாரூபம் பெற்றவர். இறைவனைப் போன்றே சடைமுடி, நெற்றிக்கண், நீலகண்டம், நீற்றுக்கோலம், நாற்பெருந்தோள் ஆகிய கோலமுடையவர். இம்மாதிரியே சாரூபம் பெற்ற எண்ணற்ற கணங்களின் தலைவர். உடைவாளும், கையில் பிரம்பும் தாங்கிப் பெரியபுராணக் கோயில் முகப்பில் நிற்கும் இவரை, இதோ சேக்கிழார் பெருமானே உங்களுக்கு அறிமுகப்படுத்துகின்றாரே!

''நெற்றியிற் கண்ணர், நாற்பெருந் தோளர்,
நீறணி மேனியர் அனேகர்,
பெற்றமேற் கொண்ட தம்பிரான் அடியார்,
பிஞ்ஞகன் தன்னருள் பெறுவார்,
மற்றுஅவர்க் கெல்லாம் தலைமையாம் பணியும்
மலர்க்கையில் சுரிகையும் பிரம்பும்,
கற்றைவார் சடையான் அருளினல் பெற்றான்
காப்பதக் கயிலைமால் வரைதான்''

—திருமலைச்சிறப்பு

தேவாசிரியமண்டபம்—அடியார்கள் :

திருநந்திதேவரின் அனுமதியுடன் உள்ளே செல்லும் நாம், தேவாசிரிய மண்டபத்துள் இறைவனின் தரிசனத்துக்காக வந்து காத்திருக்கும் அடியார்கள் கூட்டத்தை, முதலில் வணங்கியே சுவாமி சந்நிதிக்குள் செல்லுதல் வேண்டும். பரம ஆசாரிய மூர்த்திகளாகிய சுந்தரமூர்த்தி சுவாமிகளே, ஒருமுறை திரு

வாரூர்க் கோயிலுள் இவர்களை வணங்காமல் புற்றிடங் கொண்டாரின் சந்நிதியை நோக்கி நடந்து விட்டார். அதைக்கண்ணுற்ற விறன் மிண்ட நாயனர் எனும் பெரியார் ''அடியார் களை வணங்காது செல்லும் இந்தச் சுந்தர மூர்த்தியும் நமக்குப்புறகு; இவருக்கு அருள் புரியும் சிவபெருமானும் நமக்குப் புறகு'' என்று இருவரையுமே ஒதுக்கி விட்டார். பிழையை உடன்பட்ட சுந்தரமூர்த்தி சுவாமிகளும் பிறகு மீண்டு வந்து, அடியார்களை முதலில் வணங்கித் ''தில்லைவாழ் அந்தணர்தம் அடியார்க்கும் அடி யேன்'' என்று தொடங்கும் திருத்தொண்டத் தொகை பாடித் துதித்த பிறகே, சுவாமி சந் நிதிக்குள் சென்றார். அவர் காட்டிய வழியில் செல்லும் நாமும், இப்பொழுது இச் சொற் கோயிலினுள்ள அடியார்களை முதலில் வணங்கு வோம்.

''கேடும் ஆக்கமும் கெட்ட திருவினர்
ஓடும் செம்பொனும் ஒக்கவே நோக்குவார்
கூடும் அன்பினில் கும்பிட லேஅன்றி
வீடும் வேண்டா விறலின் விளங்கினர்.

—திருக்கூட்டச் சிறப்பு 8

''இப்பொழுது உன்பால் எங்களுக்குள்ள அன்பு போதாது, இன்னும் அதிக அன்பைக் கொடு'' என வேண்டுவதன்றி, மோட்சமுங்கூட வேண் டிப் பிரார்த்திக்காத இவர்களை வணங்கிய புண் ணியமன்றோ, நம்மைச் சுவாமி சந்நிதிக்குள் இன்று இழுத்துப் போகின்றது?

சிவாசாரியார் :

இவ்விடத்தில் இன்முகங் காட்டி நம்மை ''வருக! வருக!!'' என்று வரவேற்று இட்டுச் செல்பவர், கோயில் அர்ச்சகர்! அவர் உமை யொருபாகனுகிய இறைவனின் திருமேனியை முப்போதும் தீண்டிப் பூசிக்கும் தொண்டில் தலைமுறை தலைமுறையாக வந்த சிவவேதியர். கதைப் போக்கில், சுந்தரமூர்த்தி சுவாமிகளின் திருவவதாரம் கூறும் பாங்கில், அவரது தந்தை யாராகிய சடையனுரைச் சேக்கிழார் சுவாமி கள் தாம் எடுத்துள்ள சொற்கோயிலில் இவ் விடத்தில் தொண்டு செய்ய நியமித்துள்ளது காண்க:

மாதொரு பாக னுர்க்கு
வழிவழி அடிமை செய்யும்
வேதியர் குலத்துள் தோன்றி
மேம்படு சடைய னுருக்கு
ஏதமில் கற்பின் வாழ்க்கை
மனைஇசை ஞானி யார்பால்
தீதகன் றுலகம் உய்யத்
திருஅவ தாரம் செய்தார்

—(தடுத்தாட்கொண்ட புராணம் 3)

தொடரும்

இந்து மதத்தின் சிறப்பியல்பு !...

''இந்து மதம், எல்லாச் சமயங் களிலுமுள்ள நல்ல கொள்கை கள் அனைத்தையும் ஏற்றுக் கொள் கின்றது. எந்த ஒரு சமயத்தையும் இகழ்ந்து புறக்கணிக்காமல், எல்லாவற்றையும் ஏற்றபெற்றி உடன்பட்டுத் தழுவிக் கொள் கின்றது. மனித குலத்திற்கும், மனித இயற்கைக்கும், அனைத்துல கிற்கும் உரிய, இனிய மதமாக அது திகழ்கின்றது. வேறு எந்த மதத்தின் வளர்ச்சியினையும் தடுத்து எதிர்க்கும் இயல்பு, அதன் கண் காணப்படவில்லை. ஏனைய எல்லாச் சமயங்களையும், தனது பரந்த விரிந்த பெருநோக்கினுல், தன்பால் ஏற்று இணைத்துத் தழுவிக்கொள்ளும் பெரு மாட்சிமை உடையதாக, இந்து மதம் விளங்குகின்றது. அவரவர் களின் மனப்போக்கிற்கும் இயல் பிற்கும் ஏற்ப, அவரவர்க்குப் பொருந்திய நலங்களை விளைவிக் கும்திறனை, இந்து மதம் உண்மை யிலேயே பெற்று விளங்குகின்றது. மனித குலத்திற்கும் மனித மனப் போக்குக்கும் உரிய எத்தகைய வேறுபாடுகளுக்கும் இணங்கி, இசைந்து ஒத்துச் செல்லும் தன்மையில், இந்து மதம் இணையற்றதாகத் திகழ்கின்றது. இவ்வியல்பே அதன் வலிமைக்கும் வளர்ச்சிக்கும் காரணம் எனலாம். தத்துவ ஞானிகள், கவிஞர்கள், சிந்தனையாளர்கள், அமைதி விரும்புவோர், தனிமை நாடு வோர், உணர்ச்சி மிகுந்தோர், செயல் வகை விழைவோர் ஆகிய பலருக்கும், மன நிறைவு அளிக்க வல்லதாக, இந்து மதம் இனிய பற்பல சிறப்பியல்புகளைத் தன்னி டம் கொண்டுள்ளது'' என்று, **சர். மானியர் வில்லியம்ஸ்** என்னும் ஆராய்ச்சியாளர், நம் இந்து மதத்தின் சிறப்பினைப் புகழ்ந்து போற்றியிருக்கின்றார்.

—ஆசிரியர்.

"ஆதி பகவன்"

முன்னுரை :

உலகிற் சில மதங்கள் கடவுளை ஆணுக வைத்துப் போற்றுகின்றன. மற்றும் சில மதங்கள் கடவுளைப் பெண்ணுக வைத்துப் போற்றுகின்றன. ஆனல் தமிழர்கள் தொன்று தொட்டே கடவுளைத் தனித்தனியே ஆணுகவோ பெண்ணுகவோ கருதாமல், இருகூறும் இயைந்த நிலையில் இனிது வழிபட்டு வருகின்றனர்.

''நீல மேனி வாலிழை பாகத்து
ஒருவன் இருதாள் நிழற்கீழ்
மூவகை யுலகும் முகிழ்த்தன முறையே''

என்று, ஐங்குறுநூறு என்னும் சங்கநூல், அர்த்த நாரீசுவர மூர்த்தத்தின் அருமைப் பாட்டினை வியந்து துதிக்கின்றது.

''பெண்ணுரு ஒருதிறன் ஆகின்று; அவ்வுருத்
தன்னுள் அடக்கிக் கரக்கினும் கரக்கும்''

எனப் புறநானூறு இதனைப் போற்றுகின்றது. இவ்வாற்ருல் மிகப் பழைய காலத்திலேயே, தமிழ்ப் பெருஞ் சான்ருேர்கள், இறைவன் ''மாதியலும் பாதியன்'' என்னும் நிலையில் விளங்கும் மாண்பினைப் போற்றி மகிழ்ந்த தன்மையினை, நாம் நன்கினிது உணரலாம்.

ஆண்-பெண் அமைப்பு :

இவ்வுலகியற்கையமைப்பினை நாம் கூர்ந்து காண்போமாயின், ஓரறிவு முதல் ஆறறிவு வரையுள்ள உயிர்கள் அனைத்திலும், ஆண் பெண் பாகுபாடு அமைந்து கிடத்தலைக் காணலாம். புற்பூண்டுகளிலும் மரஞ்செடி கொடிகளிலும், ஆண் பெண் அமைப்பு தவருமற் பொருந்தியுள்ளது; கற்களிலும்கூட, ஆண்கல் பெண்கல் முதலிய பாகுபாடுகள் இருப்பதாகச் சிற்பிகள் கூறுகின்றனர்.

இறைவன் தாயும் தந்தையும்ஆக, அம்மையும் அப்பனும்ஆக, சிவமும் சக்தியும் ஆகத் தன் திருவுருவத்திலேயே இரு வேறு வகைப்பட்ட தன்மைகளைக் கொண்டு திகழ்தலினல் தான், உயிர் வடிவங்கள் அனைத்தும், குறியாலும் குணத்தாலும் ஆண், பெண் என அவ்வப் பிறவிக்குள் இருவேறு வகையாய் அடங்கித் தம்முள் கூடிக் களித்து மகிழ்ந்து வாழ்ந்து வருகின்றன. உலகியல் வாழ்வுகள் அனைத்தும், சிவமும் சக்தியும் தம்முள் இயைந்து ஒன்றி நிற்கும் பெற்றியின் விளைவேயாகும்.

இறைவன் தன் பாதி ஆண் வடிவத்தில் தோல் உடுத்துக் குழையணிந்து, பால் வெள்ளை நீறுபூசிச் சூலம் ஏந்தித் திகழ்கின்ருன்; பிறிதொரு பாதி பெண் வடிவத்தில் துகில் உடுத்துக் தோடு அணிந்து, பசுஞ்சாந்து பூசிப் பைங்கிளி ஏந்தி வளையல்கள் தரித்து வயங்குகின்ருன் எனக் குறிப்பிட்டு, இத்தகைய இறைவனின் திருவுருவத்தினைத் ''தொன்மைக் கோலம்'' என மாணிக்கவாசகர் விதந்து வியந்து பாராட்டிப் பாடியிருத்தல், அறிந்து மகிழற்பாலது.

குமரகுருபரர் :

இத்தகைய அர்த்தநாரீசுவரத் திருவுருவின் சிறப்புக் குறித்துக் குமரகுருபர சுவாமிகள், தமது செந்தமிழ் இலக்கணப் புலமை நலந்தோன்றப் பின்வரும் கருத்தமையப் பாடுகின்ருர்: ''உலகப் பற்றை நீத்த மெய்ஞ் ஞானிகளுக்கு ஐந்தொழில் நிகழ்த்தும் தனது ஆனந்த நடனத்தைக் காட்டுதற்காக, அட்ட மூர்த்தியாக விளங்கும் சிவபெருமானுக்கும், உமையம்மைக்கும் உருவம் ஒன்ருகவே உள்ளது. அவ்வுருவத்தினை ஆண்பால் வடிவம் பற்றி 'ஒருவன்' என்று சொல்வேனு? அல்லது பெண்பால் வடிவம்பற்றி 'ஒருத்தி' என்று சொல்வேனு? இருபாலுள் எதுபற்றிக் குறிப்பிடினும் பிறிதொருபால் விடுபட்டேபோகும்.

''ஒருவர் என்பது உயர்இரு பாற்ருய்ப்
பன்மை வினைகொளும் பாங்கிற்று என்ப''

என்னும் இலக்கணச் சூத்திரம், 'ஒருவர்' [...]னும் சொல் இருபாலையும் குறித்து ஏற்றபெ[...] வரும் என விளக்குகின்றது. ஆண் பெண் ஆகிய இருபாலாரையும் ஒன்று சேர்த்துக் குறிப்பிடத்தக்க நிலையில், தமிழ் மொழியில், 'ஒருவர்' என்னும் அழகிய சொல் இல்லாமற் போயிருக்குமாயின், யான் வேறு எச் சொல்லால் அத்திருவுருவத்தினைக் குறிப்பிடுதல் இயலும்?'' என்கின்ருர், குமரகுருபரர்.

''. . . ஒருவனுக்கும் ஒருத்திக்கும்
உருவொன் றால்! அவ்
உருவைஇஃது ஒருத்தன் . என்கோ !
ஒருத்தி என்கோ ?
இருவருக்கும் உரித்தாக
ஒருவர் என்றோர்
இயற்சொல்இலது எனின், யான்
மற்றுஎன் சொல்கேனே ?''

இவ்வாறே மற்றோர் இடத்திலும் குமரகுருபரர் அர்த்தநாரீசுவர வடிவம் பற்றி அழகுறப் புனைந்து பாடி மகிழ்வுறுத்துகின்றார்; ''சிவந்த வாயையும் கருங்கண்ணையும் உடைய பைந்தோகை ஆகிய உமாதேவிக்கும், சந்திரனைத் தலையில் அணிந்துள்ள சிவபெருமானுக்கும் திருவுருவம் ஒன்றாகவே உள்ளது. அவ்வுருவினை யாம் எந்தச் சொற்பொருள் கொண்டு எடுத்துக் கூறவல்லேம்? இருவருக்கும் பொருந்துமாறு பொதுப்பட ''எந்தாய்'' என (எம் தந்தையே; எம்முடைய தாயே என இருவகைப் பொருளும் அமையுமாறு) ஒரு சொல்லையேஅமைத்துப் பாடி விடுவோம்'' என நயமுற நவிலுகின்றார் அவர்.

செவ்வாய்க் கருங்கட்பைந் தோகைக்கும்,
வெண்மதிச் சென்னியற்கும்
ஒவ்வாத் திருவுரு ஒன்றேஉளது !
அவ்வுருவினை மற்று
எவ்வாச் சியம்என்று எடுத்திசைப்பேம்?
இன்னருட் புலியூர்ப்
பைவாய்ப் பொறியரவு அல்குல்
எந்தாய் என்று பாடுதுமே

தத்துவ நுண்பொருள் :

ஆணும் பெண்ணும் தம்முள் அயன்மையின்றி, அன்பினால் ஒருவருக்கொருவர் ஒன்றித் தொடர்பு கொள்ளும் அரிய இனிய நெறியின் சிறப்பினை, இந்தியமக்கள் தெளிவுறத் தெரிந்திருந்த தன்மையினை அர்த்தநாரீசுவரத் திருவுருவம் புலப்படுத்துகின்றது. ஓர் ஆணோ பெண்ணோ, தனியே இருக்கும் அளவும் நிறைநிலை பெறுவதில்லை. இருவரும் ஒன்று சேரும் பொழுதுதான், அவர்கள் முழு நிறைவை அடைகின்றனர். ஒருவருக்கு ஒருவர் இன்றியமையாதவராக, வாழ்க்கையில் உற்றுழியுதவிக் கொள்ளும் உயிர்த்துணைவர்களாக, ஆணும், பெண்ணும் அன்பினாற் பிரிவற ஒற்றுமைப்பட்டு உலகில் வாழ்தல் வேண்டும்; கணவனும் மனைவியும் தம்முள் மிகச் சிறந்த நண்பர்களைப் போன்று திகழத்தக்கவர்கள் ஆவர். 'கணவன் மனைவி' என்னும் தொடர்பினும் சிறந்த புனிதம் மிக்க தொடர்பு, பிறிதெவுதும் உலகத்தில் இல்லை. மனித வாழ்வின் விருப்பங்கள் அனைத்தும் அத்தொடர்பாற் புனிதமும் நிறைவும் பெறுகின்றன. உலக வாழ்வு என்பதே அது தான்! இத்தகைய பற்பல சிறந்த தத்துவங்களையெல்லாம் நம்மனோர்க்கு நன்கு இனிது உணர்த்துவதே, அர்த்தநாரீசுவரத் திருவுருவமாகும். இவ்வுலகத்திற் சிறந்த கணவன் மனைவியராகத் திகழ்ந்து, இல்லறத்தை நல்லறமாக ஆற்றி, வையத்து வாழ்வாங்கு வாழ விரும்புவோர் அனைவரும், அர்த்தநாரீசுவரப் பெருமானை வழிபட்டு உய்ய முயலுதல் வேண்டும்!. *

முடிவுரை :

இத் தெய்வத் திருவுருவினையே, ஆசிரியர் திருவள்ளுவர் ஆதிபகவன் என்னும் தொடரால் குறிப்பிட்டுள்ளார், எனவும் கூறலாம். வேதத்துக்குப் பலரும் பல பொருள் கூறுவர், கொள்வர். அம்முறையில் தமிழ் வேதமாகிய திருக்குறளுக்கும் நாம் பலவகையில் பொருள் கொள்ள வாய்ப்புண்டு. ஆதிபகவன் என்னும் தொடர், ஆதி சத்தியோடு கூடிய பகவனாகிய சிவபிரான் எனவும்; ஆதிலட்சுமியோடு கூடிய பகவனாகிய திருமால் எனவும்; பொருள் செய்யத் தக்க வகையில் விளங்குகின்றது. திருமால் என்னும் சொல்லுக்குத் திருவோடு கூடிய மால் (இலட்சுமி நாராயணன்) எனப் பொருள் கொள்வது மரபு. இவ்வாற்றால் ஆதிபகவன் என்னும் தொடர் உலகியல் நெறிக்கும் அருளியல் நெறிக்கும் ஏற்றதொன்றாய், சைவம்-வைணவம் என்னும் இரு சமயத்திற்கும் பொதுமை உணர்வுடையதாய் அமைந்துள்ளமை அறிந்து இன்புறத் தக்கது.

வாழிய திருவள்ளுவர் !
வாழ்க திருவள்ளுவர் !

—*ஆசிரியர்.*

---

* "Siva is Ardhanariswara, and his image signifies the co-operative interdependent, separately incomplete but jointly complete masculine and feminine functions of the supreme being. There is nothing unwholesome or guilty about the sex life . . . .The image of Ardhanariswara is India's recognition of the mutual relationship of man and woman, the husband and the wife . . ."

—DR. S. RADHAKRISHNAN.

திருவெட்டெழுத்து மந்திரம்

— தமிழ்விரகன்

''எட்டும் எட்டும் எட்டுமாய், ஓர்
ஏழும் ஏழும் ஏழுமாய்,
எட்டும் மூன்றும் ஒன்றும் ஆகி
நின்ற ஆதி தேவனை,
எட்டின் ஆய பேதமோடு
இறைஞ்சிநின்று, அவன்பெயர்,
எட்டெழுத்தும் ஓது வார்கள்,
வல்லர் வானம் ஆளவே'' (1)

ஆர்வமோ டிறைஞ்சிநின்று அவன்பெயர்
எட்டெழுத்தும்
வாரமாக ஓதுவார்கள், வல்லர்வானம் ஆளவே! (2)

—திருமழிசைப் பிரான்.

முன்னுரை :

திருமால் எண்ணில் தொல் புகழ் உடையவர். அவருக்குப் பேரும் ஓராயிரம். திருமாலின் அவதாரங்களையும், அவற்றின் சிறப்பினையும், திருமாலின் எண்ணில்லாத பல குணநலங்களையும் விளக்குவனவாகத், திருமாலுக்கு எத்தனையோ பல பெயர்கள் வழங்கும். அவைகள் அனைத்துமே அப்பெருமானுக்குரிய மந்திரங்களாகத் திகழும். அம்மந்திரங்களை வியாபகங்கள் என்றும், அவ்வியாபகங்கள் என்றும், பெரியோர்கள் குறிப்பிடுவர். வியாபக மந்திரங்கள் மூன்றும், மற்றையவற்றினும் சிறந்தவை. இவை மூன்றினுள்ளும் நாராயண மந்திரமே, ஒப்புயர்வற்ற தலைசிறந்த மந்திரமாகும். இதன் அருமை பெருமைகள், நம்மால் அறிந்து அளவிடற்பாலன அல்ல.

நாராயண மந்திரத்தைத் திருவெட்டெழுத்து, அட்டாக்கரம், திருமந்திரம், பெரிய திருமந்திரம், நலம்தரும்சொல் என்னும் பல பெயர்களால், பெரியோர்கள் வழங்குவர். இம்மந்திரம் எட்டெழுத்தாய், மூன்று பதமாய் அமைந்திருக்கும். இம்முப்பதங்களுள் முதலில் ஓம் என்பதும், இடையில் நம என்பதும், ஈற்றில் நாராயணாய என்பதும், முறையே இம் மந்திரத்தில் அமைந்திருக்கும். இம்முறையிலேயே இதனை ஓதுதல் வேண்டும்.

உயிர்கள் உய்வதற்கு உறுப்பாக அறிய வேண்டிய எல்லாப் பொருள்களையும், திருமந்திரம் தெளிவுற உணர்த்துகின்றது. உயிர்கள் அறிவதற்குரிய பொருள்கள் ஐந்து. அவற்றை அர்த்த பஞ்சகம் என்பர். அவை முறையே, இறையியல், உயிரியல், நெறியியல், தடையியல், பயனியல் என்பனவாகும். ஓம் என்னும் பிரணவம் உயிரியலையும், நம என்னும் பதம் நெறியியல், தடையியல் ஆகியவற்றையும், நாராயண பதம் இறையியலையும், ஆய என்னும் சொல் பயனியலையும் உணர்த்துகின்றன. ஓம் என்னும் பிரணவம், அ உ ம் என்னும் மூன்று ஒலிகளின் சேர்க்கையினால் அமைந்தது. அவற்றுள் அகரம் நாராயணன், மகரம் உயிர், உகரம் பிராட்டி ஆகியோரைக் குறித்து வரும்.

நம பதம், ந, ம: என்னும் இரண்டு எழுத்துக்களால் அமைந்துள்ளது. நம பதத்தால் அறியப்படும் பொருள்—உயிர் தன்னைத் தான் காத்துக் கொள்ளுதலில் உரிமையுடையதன்று, நாராயணனே தனிப் பெருங் காப்பாளன் என்கின்ற உணர்ச்சியும்; ''யானே நீ என் உடைமையும் நீயே'' என்று அவன் வயப்பட்டிருத்தல் ஆகிய பாரதந்திர உணர்ச்சியும்; ''களைவாய் துன்பம் களையாது ஒழிவாய் களைகண் மற்றிலேன்'' என்று அவன் கருணையையே நோக்கி இருக்கின்ற நெறி உணர்ச்சியும்; ''மற்றை நம் காமங்கள் மாற்று'' என்று, தொண்டில் பற்று அற்று வழுவிலா அடிமை செய்தலாகிய பயன் உணர்ச்சியும் ஆகும். அடியார்க்கு அடிமை செய்தலே, இறைவன்பாற் செய்யும் அடிமைக்கு எல்லை நிலமாய் இலங்கும் என்பது, நம என்னும் பதம் உணர்த்தும் நற்பெரும் பொருளாகும்.

நாராயண என்னும் பதத்தை வேற்றுமைத் தொகையாகவும், அன்மொழித் தொகையாகவும் கொண்டு, இருவகையில் பொருள் விரித்து உரைப்பர். வேற்றுமைத் தொகையால் தேறும்பொருள், நாரங்களுக்கு அயநம் என்பதாம். நாரங்களாவன அழிவில் பொருள்கள். அயநம் என்பது இருப்பிடம் என்னும் பொருளது. இதனால் அழிவில் பொருள்களைத் தனக்கு இருப்பிடமாக உடையவன் என்பதாம். பொருள்களுக்குத் தான் இருப்பிடமாதல் பரத்துவம் (மேன்மை), பொருள்களைத் தனக்கு இருப்பிடமாகக் கொள்ளுதல் சௌலப்பியம் (எளிமை). எல்லாப் பொருள்களினுள்ளும் விரவிக் கலந்து நிற்றல் அந்தர்யாமித்துவம் (கலந்துறையும் தன்மை), அறிவுடைப்பொருள் அறிவில் பொருள்களில், அறிவுடைய சேதனப் பொருள்களுக்கெல்லாம், உபாயம் உபேய[illegible] என்னும் நெறியாகவும் பயனாகவும் நிற்[illegible] முதலியன, இறைவனுக்குரிய சிறந்த இய[illegible]களாகும். பயன்களுள் உறவு முறையும் ஒன்[illegible]லால் இறைவனே எல்லா உறவாகவும் விள[illegible]கின்றான். இவ்வாற்றால் நாராயணன் என்னு[illegible] நலம் தருகின்ற சொல், அடியார்களின் தொண்டினை ஏற்றருள்கின்ற இறைவன், மேன்மை எளிமை கலந்துறைதல் நெறி பயன் உறவு என்னும் எல்லா நலங்களும், உடையவனாகத் திகழ்கின்றான் என்பதை நன்கு இனிது உணர்த்தும்.

'ஆய' என்னும் பதத்தின் பொருள், ''ஒழிவில் காலமெல்லாம் உடனாய் மன்னி, வழுவிலா அடிமை செய்ய வேண்டும் நாம்'' என்று விண்ணப்பித்துக் கொள்ளுகின்ற வேண்டுகோள் ஆகும்.

எம்பெருமானுக்கே உரியவனான நான், எனக்கு உரியவன் ஆகாது ஒழிதல் வேண்டும், எல்லார்க்கும் தலைவனான நாராயணனுக்கே எல்லா அடிமைகளும் நான் செய்தல் வேண்டும் என்பதே, ஓம் நமோ நாராயணாய என்னும் திருவெட்டெழுத்து மந்திரத்தின் திரண்ட சிறந்த பொருளாகும்.

நவவித சம்பந்தம் :

திருமாலே புருடோத்தமன், நமக்கெல்லாம் நாயகன். உயிர்களாகிய நாமெல்லாம் அவனை நயந்து அடைய விரும்புகின்ற நாயகி நிலையில் உள்ளவர்கள் ஆவோம். நாயகனாகிய அவன் நாயகியராகிய நம்மனோர்க்கு, எட்டெழுத்துக்கள் எட்டிழையாய், மூன்று பதங்கள் மூன்று சரடாய் அமைந்த, திருமந்திரம் ஆகிய மங்கல நாணை அணிவித்துள்ளான். மகளிர் அணிந்து கொள்ளும் மங்கல நாண், தாம் தம் கணவனுக்கு அன்றி ஏனையோருக்கு உரியரல்லர் என்பதை உணர்த்தும். அங்ஙனமே ஆன்மாக்கள் அணியும் திருமந்திர மாலையாகிய மங்கலநாண், உயிர்கள் நாராயணன் ஒருவனுக்கே உரியனவாதலை உணர்த்தும். மகளிர் அணியும் மங்கல நாணானது, கணவன், மனைவி (நாயகன், நாயகி) என்னும் ஓர் உறவை மட்டுமே உணர்த்தும். ஆனால் ஆன்மாக்கள் அணிதற்குரிய திருமந்திரமாகிய மங்கலநாணோ, உயிர்களுக்கும் இறைவனுக்கும் உள்ள ஒன்பது வகை உறவுகளைக் குறிக்கும்.

1. தந்தை மகன்
2. காப்பவன்
   காக்கப்படுவது } — அகரப் பொருள்
3. தலைவன் அடிமை
4. நாயகன் நாயகி — உகரப் பொருள்
5. அறிபவன்
   அறியப்படுவது — மகரப் பொருள்.
6. உடையவன்
   உடைமை — நம: பதப்பொருள்
7. தாங்குவது
   தாங்கப்படுவது — நாராயண பதப்பொருள்
8. உயிர் உடல்
9. நுகர்பவன்
   நுகர்பொருள் } — 'ஆய' பதப்பொருள்.

இறைவன் உயிரோடு இந்த ஒன்பது வகையான உறவுகளை உடையவன் என்பதை, நலம் தரும் சொல்லாகிய திருவெட்டெழுத்து மந்திரம் உணர்த்துகிறது. இவ்வுறவுகளை அறிந்து கொள்ளுதல், உயிர்களின் பேற்றுக்கு இன்றியமையாதது. மனைவியைக் காத்தல் கணவனுக்குக் கடமையாதல் போல, இவ்வுறவுகளை உடைய உயிர்களைக் காத்தருள் புரிதல், இறைவனுக்கு உரிய கடமை என்பதும் இதனால் வலியுறுத்தப் பெறுகின்றது.

மருளும் தெருளும் :

இருள் தருமா ஞாலம் எனப் பெரியோர்களால் இழித்து உரைக்கப்பெறும் இவ்வுலகில் வாழ்கின்ற வரைக்கும், நமக்குப் பலவகை மயக்கங்கள் விளைந்துகொண்டே இருக்கும். (1) உடலே உயிர் என்னும் உணர்வு. (2) உயிர் தன் உரிமை உடையது என்னும் நினைவு. (3) உயிர் நாராயணனுக்குப் போலவே மற்றையோர்க்கும் அடிமைப்பட்டிருக்கலாம் என்னும் நினைவு. (4) நாமே நம்மைக் காத்துக் கொள்ளலாம் என்னும் எண்ணம், (5) அடியார்களும் நம்மைப் போன்ற மனிதர்கள்தான் என்னும் நினைப்பு. (6) உற்றார் சுற்றத்தின்பால் கொள்ளும் பற்று. (7) இறைவனின் திருவுருவங்களை இவை கல் செம்பு என்பவற்றால் அமைந்தவை தாமே, இவைகள் என்ன பயனைத் தரும் என்னும் ஐயப்பாடு. (8) உலக வாழ்க்கையில் உயிர்கள்பால் தோன்றும் விருப்பு வெறுப்புகள் (9) இறைவன் அல்லாத பிறருக்கும் ஊழியம் செய்ய முற்படுதல், (10) அழிந்துபோகும் செல்வம் முதலிய அற்பப் பொருள்களில் பற்றுக் கொள்ளுதல் என்னும் பலவகை மயக்கங்களால், நாம் அடையும் இன்னல்களுக்கு ஓர் எல்லையேயில்லை. இம்மயக்கங்களையெல்லாம் திருவெட்டெழுத்து மந்திரம் போக்கியருள்கின்றது.

(1) உடலே உயிர் என்னும் உணர்வு, பிரணவத்தின் மகரப் பொருளை உணர்ந்தால் ஒழியும்.

(2) உயிர் தன்னுரிமை உடையதென்னும் நினைவு, பிரணவத்தின் அகரப்பொருளை நினைத்தால் நீங்கும்.

(3) பிறருக்கும் அடிமைப்பட்டிருக்கலாம் என்னும் மயக்கம், பிரணவத்தின் உகரப்பொருளை உணர்ந்தால் ஒழியும்.

(4) நம்மை நாமே காப்பாற்றிக் கொள்ளுதல் இயலும் என்னும் மயக்கம், நம: பதப்பொருளை நினைந்தால் விலகும்.

(5) அடியார்களும் நம்மைப்போன்ற சாதாரண மனிதர்கள்தான் என்னும் பிறழ்வுணர்ச்சி, நம: பதப்பொருளின் சிறப்பை உணர்ந்தால் ஒழியும்.

(6) உற்றார் சுற்றத்தார்பால் கொள்ளும் உலகியற் பற்றுக்கள், எல்லா உறவும் இறைவனே என்னும் நாராயண பதப்பொருளை அறிந்தால் தெளியும்.

(7) தெய்வத் திருவுருவங்களைக் கல்லும் செம்புமே எனக் கருதும் மயக்கம், எல்லாப் பொருள்களினுள்ளும் கலந்து நிறைந்து உறை பவன் இறைவனே என உணர்த்தும் நாராயண பதப் பொருள் உணர்ச்சியால் தீரும்.

(8) உலகியல் வாழ்க்கையின் விருப்பு வெறுப்புக்கள், எல்லாப் பொருள்களும் இறை வனின் சார்புடையனவே என உணர்த்தும் நாராயணபதச் சிறப்பினைத் தெளிய நீங்கிப் போகும்.

(9) இறைவனுக்கு அன்றி மக்களுக்கும் அடிமைப்பட்டு ஊழியம் செய்யலாம் என்னும் உணர்வு, உனக்கே நாம் ஆட்செய்வோம் என் னும் 'ஆய'பதப் பொருளை அறிந்தால் விலகும்.

(10) அழிந்து போகும் செல்வம் முத லிய அற்பமான பொருள்களில் நிகழும் ஆசை முதலியன, இறைவனுக்குத் தொண்டு இயற்று தலே எல்லாவற்றினும் மேலாகச் சிறந்த பெருஞ்செல்வம் என்பதை உணர்த்தும் 'ஆய' பதப்பொருளை அறிதலால் தவிரும்.

குலம்தரும்; செல்வம் தந்திடும்; அடியார்
படுதுயர் ஆயின எல்லாம்
நிலம்தரம் செய்யும்; நீள்விசும்பு அருளும்;
அருளொடு பெருநிலம் அளிக்கும்;
வலம்தரும்; மற்றும் தந்திடும், பெற்ற
தாயினும் ஆயின செய்யும்;
நலம்தரும் சொல்லை நான்கண்டு கொண்டேன்!
நாரா யணாஎன்னும் நாமம்!

—திருமங்கையாழ்வார்.

—ஆசிரியர்.

தலவழிபாடு

சைவத் தமிழர் எனப்பிறந்த தக்கோர்எவரும் தம்வாழ்வில்
எய்தற் குரிய பேறுகளுள், இனிய நால்வர் பெருமக்கள்
தெய்வப் பாடல் பெற்றொளிரும் சிறந்த தலங்கள் பலவும்கண்டு,
உய்யத் தொழூஉம் பெருவாய்ப்பின், உயர்ந்த தொன்று பிறிதில்லை. (1)

"இறக்கும் முனர்நேப் பிள்ஸ்நகர்கண்டு இறக்க" என்பர் மேல்நாட்டார்!
சிறக்க நால்வர் பாடல்பெறும் தெய்வத் தலங்கள் சென்றிறைஞ்சி,
மறக்க இயலாப் பெருநலத்தின் வழிபட் டுவத்தல், சைவர்எனப்
பிறக்கப் பெற்றோர் அனைவருக்கும், பெரிதும் சிறந்த பெரும்பேறும்! (2)

சிற்பம் ஓவம் இசைகூத்து, சிறப்பே மிக்க பிறகலைகள்,
பொற்பத் தழைத்தே, ஆங்காங்கும் புதுமை புனிதம் பேரழகு
பற்பல நலங்கள் விளங்கநின்று, பண்டைத் தமிழர் பண்பாட்டின்
வெற்றித் தூணும் கோயில்பல, மேவிக் காண்டல் வியன்சிறப்பாம்! (3)

தூய நால்வர் பாடல்பெற்றுத், துரிசில் சோழர் பாண்டியர்கள்
பாய சீர்த்திப் பல்லவர்கள் பலரும், பண்டு பணிசெய்யச்
சேய திசையும் புகழ்விளைத்துத் திகழும் சிறந்த சிவத்தலங்கள்,
ஆயம் கொண்டு போய்ப்பணிந்தோர், அவர்தாம் வாழ்வின் பயன்கொண்டோர் (4)

பொங்குநற் பக்தி வெள்ளப் புணரியில் திளைத்து மூழ்கி,
நன்குயர் ஆழ்வார் கள்தாம் நலமிகப் பணிந்தி றைஞ்சி,
மங்களா சாச னம்செய், வைணவத் தலங்கள் யாவும்,
இங்குநாம் கண்டு போற்றல், இனியநற் கடமை யாகும்.

மனிதன் ஒருவன் எய்துதற்காம் வாழ்வின் இன்பம் பலவற்றுள்,
புனித நமது பாரதத்திற் பொலியும் சைவ வைணவமாம்
இனிய தலங்கள் கண்டுதொழும் இன்பிற் சிறந்த தொன்றில்லை!
நனிநன் றுயர்ந்த அப்பேற்றை நலமே அடையமுயன்றுய்வோம் ! (6)

—ஆசிரியர்.

கந்தபுராணக் காப்பிய நலம்

"திருக்குறள்மணி"
திரு. க. த. திருநாவுக்கரசு, M.A., M.Litt.,
உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனம், சென்னை—2.

(முற்றொடர்ச்சி)

கந்தபுராணக் கதைக்கரு :

'ஆதியங்குமரன் மாயத் திருவிளையாடலே' கந்தபுராணத்தின் கதைக் கருவாகும். தக்கன் நடத்திய யாகத்திற்கு, இறைவனை அழைக்க வில்லை. அந்த யாகத்திற்கு இறைவனால் அனுப் பப்பட்ட நந்திதேவர், யாகத்தில் முறைப்படி சிவபெருமானுக்குக் கொடுக்க வேண்டிய அவிப்பாகத்தையும், மதிப்பையும் பிரமன் முதலியோர் தராததைக் கண்டு சீற்றமுற்றார். யாகத்தைச் செய்தவர்களையும், அதில் கலந்து கொண்ட தேவர்களையும்,

> "ஈரமில் புன்மனத் திழுதை மற்றுனைச்
> சாருறு கடவுளர் தாமும் ஓர்பகல்
> ஆருயிர் மாண்டொழிந்து அளபிலா உகஞ்
> சூரெனும் அவுணனால் துயரின் மூழ்கவே"

என்று நந்திதேவர் சபித்தார். இதனால், அவுணன் தோன்றினான்; அதேவர்களைக் கொடுமைப்படுத்தினான். 'அல்லற்பட்டு ஆற் றாது அழுது கண்ணீர்' வடித்த தேவர்கள், தங்கள் தவற்றை உணர்ந்து சிவபெருமானிடம் முறையிட்டனர்; அடைக்கலம் அடைந்தனர். எண்ணரிய வரங்களை அவுணர் கோமானுக்கு அளித்த தாமே, அவனை அழிப்பது அறமாகாது என்று கடவுள் கருதினார். அதனால், தம்மு டைய அறிவும் ஆற்றலும் ஒருசேர இணைந்த சிறப்புடைய குமரனைப் படைத்து, அக்குமரன் மூலம் அசுரரை அழித்து, தேவர்களுக்குப் புது வாழ்வு நல்கினார் என்பதே, இந்நூலின் கதைக் கருவாகும்.

இதனால் இந்நூலின் தலைவன் முருகக் கடவுள் என்பதும், அவனை எதிர்த்தவர்கள் மண்ணுலகத்தைச் சேர்ந்த அசுரர் என்பதும் புலனாகின்றன. எனவே இந்நூலின் கதை மனி தர்களைப் பற்றியது அன்று. தேவர்களுக்கும், அவர்களுடைய எதிரிகளான அசுரர்களுக்கும் இடையே நடந்த போரின் வரலாற்றைச் சித் தரிப்பதே கந்தபுராணம் என்பது தெளிவாகி றது.

இக்காரணத்தால்தான், மனித இயல்பு களை விஞ்சிய, கற்பனை செய்து காண இயலாத அறிவும், ஆற்றலும் உடைய கதைமாந்தர்களை நாம் இந்நூலில் காண்கின்றோம். அசுரர்கள் மனிதர் அல்லர். 'சூர்' எனும் தமிழ்ச் சொல் லிற்கு அச்சம் துன்பம் வஞ்சனை நடுக்கம் எனும் பல பொருள்கள் உண்டு. இப்பண்புகள் அனைத் தின் மொத்த வடிவமாக விளங்கியவர்களையே சூரர் என்று நம் முன்னோர்கள் குறித்தனர். வடமொழியில் 'சுரர்' எனும் சொல் தேவரை யும், 'அசுரர்' என்னும் சொல் தேவரின் எதிரி களை (தேவர் அல்லாதவர்களை)யும் சுட்டுகின் றன. இவற்றால், இக்கதை, மனிதரை மைய மாகக் கொண்டது அன்று என நாம் உறுதி யாகக் கூறலாம்.

கதைத் தழுவலா? மொழிபெயர்ப்பா?

இதனால், வடமொழியிலிருந்து கடன் வாங்கப்பட்ட கதையினைக் கச்சியப்பர், தம் நூலின் கருப்பொருளாகக் கொண்டாரா? அல்லது வடமொழியில் உள்ள சிவரகசிய காண்டத்தை அப்படியே தமிழில் மொழி பெயர்த்துத் தந்தாரா? எனும் எண்ணம் எழ லாம். இருமொழி நூல்களையும் ஆழ்ந்து ஆராய்வோமானால் வடமொழிப் புராணத்தை அவர் அடியொற்றிச் செல்லுகிறார் எனத் தான் கூற இயலுமேயொழிய, அதை அப் படியே, தமிழில் மொழி பெயர்த்துத் தந்துள் ளார் எனச் சொல்லுவதற்கு இயலாது.

புதியன படைப்பு:

சிவரகசிய காண்டத்துள் ஏழு பகுதிகள் உள்ளன. அவற்றுள் ஆறு பகுதிகளையே கச்சி யப்பர் ஆறு காண்டங்களாகத் தமிழில் தந்துள் ளார். முதற்பகுதி உற்பத்திகாண்டம் என்ப தாகும். இதைத் தொடங்குவதற்கு முன்னர், தமிழ்நாட்டுக் காப்பிய இலக்கிய மரபைப் போற்றிப் பின்பற்றும் வகையில், ஏழுபகுதிகளை அவர் அமைத்துள்ளார். முதல் பகுதியாகிய 'பாயிரத்'தில் விநாயகர் காப்பாக இரு பாடல் களும், சுப்பிரமணியர்காப்பாக இருபாடல் களும், பின்னர் நூற்பயன்கூறும் பாடலையும், 'மேன்மைகொள் சைவ நீதி விளங்குக உலகம் எல்லாம்' என முடியும் வாழ்த்துச் செய்யுளை யும் அவர் அமைத்துள்ளார். அடுத்து, கடவுள் வாழ்த்து எனும் பகுதியில் சிவபெருமான், சிவ சக்தி, விநாயகக்கடவுள், வைரவக் கடவுள், வீரபத்திரக் கடவுள், ஆறுபடை வீடுகளிலும் எழுந்தருளியுள்ள சுப்பிரமணியக் கடவுள், திரு நந்திதேவர், சமயகுரவர் நால்வர், பிற திருத்தொண்டர்கள், கலைமகள் ஆகியோருக்கு வாழ்த்தும் வணக்கமும் கூறி அவர் வழிபடு கிறார். மூன்றாவது பகுதியாகிய அவையடக்கத் தில், 'அறுமுகமுடையவோர் அமலன் மாக் கதை, சிறியதோர் அறிவினேன் செப்பநின்

றதே' எனத் தொடங்கி, நந்திதேவர் சிவபெருமானிடம் கேட்டறிந்த சிவரகசியத்தை, சனற்குமாரர் முதல் சூதமுனிவர் வரை கேட்டறிந்த வரலாற்றைச் சொல்லுகிறார். அதைச் சூதர் பிற முனிவர்களுக்குச் சொல்லியதைச் சுட்டி, அக்கதையைச் 'செந்தமிழ்க்கு வரம்பெனச் செப்பிய முந்து காஞ்சியில்' கோயில் கொண்டுள்ள குமரக்கடவுளின் தூண்டுதலால், 'வெம்பு சூர்முதல்வீட்டிய வேற்படை நம்பி காதையை நற்றமிழ்ப் பாடலால்' இசைக்கத் தாம் முன்வந்ததை இயம்புகின்றார்.

ஆற்றுப்படலம்:

இவற்றை அடுத்து, ஆற்றுப்படலமும், திருநாட்டுப் படலமும், திருநகரப் படலமும் கந்தபுராணத்தை அணிசெய்கின்றன. இவை மூன்றும் வடமொழியில் உள்ள முதற் பகுதியாகிய 'சம்பவ காண்டத்தில்' காணப் பெறுதவை. தமிழிற்கேயுரிய சிறப்புமிகு மரபாகப் போற்றப்படும் பகுதிகள் இவை. சிறப்புமிகு காப்பியத் தலைவன் தோன்றும் நாடும் நகரமும், தள்ளாவிளையுளும் தக்காரும் தாழ்விலாச் செல்வரும்' சேர்ந்து வாழும் திருநாடாக இருக்க வேண்டும் என்பது, பண்டைத் தமிழ்ப்புலவர்களின் திடமான நம்பிக்கையாகும். அங்குத் திருமகளும் கலைமகளும் களிநடம்புரிவர்; அறமெனும் செங்கோலை ஏந்தி அன்பு அரசு புரியும். இத்தகைய 'கற்பனைத் திருநாட்டை' (Ideal State) த் திருத்தக்கதேவர் முதல் சேக்கிழார் வரையிலான காப்பியப் புலவர்கள் சித்தரித்துக் காட்டுவர். அம்முன்னோர் அடிவழியைப் பின்பற்றி, பாட்டுடைத்தலைவன் கோயில்கொண்டு எழுந்தருளியுள்ள காஞ்சிமாநகரையும், அந்நகர் அமைந்துள்ள தொண்டை நாட்டையும், அங்கே பாய்ந்தோடும் பாலியாற்றையும் போற்றிப் பாடியுள்ளார். முதலில் ஆற்றுப் படலத்தை அமைத்துள்ளார். பாலாறு நந்திமலையில் தோன்றி, நால்வகை நிலங்களில் பாய்ந்து, தொண்டை நாட்டில் ஓடியதனை,

> ''கால்கிளர் கின்ற நீத்தம்
> கவிரிதழ்க் கலசக்கொங்கை
> சேல்கிளர் கரிய வுண்கண்
> திருநுதல் மிழற்றுந் தீஞ்சொல்
> மேல்கிளர் பரவை யல்குன்
> மெல்லிய அறல்மென் கூந்தல்
> மால்கிளர் கணிகைமாதர்
> மனமெனப் போயிற்றுமால்''

என்று கச்சியப்ப சிவாசாரியர், கற்பனைச் சிறப்பமையக் கவினுறப் பாடியருள்கின்றார்.

நாடு நகரப் படலம்:

இதனை அடுத்துள்ளது திருநாட்டுப் படலம். அதில் தொண்டைநாட்டின் நீர்வளம், நிலவளம், மக்கள் குடிவளம் சிறப்பித்துப் பேசப்படுகின்றன. 'தெண்திரை யுலகினில் சீர்பெற்று ஓங்கிய மண்டலம் எங்கணும் மதிக்க நின்றதோர் தொண்டை நன்னாடு' (1-5-57) என ஆசிரியர் அதனைப் போற்றுகின்றார்.

கல்வியில் கரையிலா காஞ்சி மாநகரின் அமைப்பையும் அழகையும், கச்சியப்பர் திருநகரப் படலத்தில் விரித்துரைக்கின்றார். தாம் வாழும் ஊரானமையால், அதன் அருமை பெருமைகளையும் நிறைகுறைகளையும் ஆசிரியர் நுணுக்கமாகக் கண்டு அறிந்துள்ளார். அவற்றைத் தன் கற்பனைத் திறனால் வியத்தகு காட்சிகளாக அவர் மாற்றிக் காட்டுகிறார். காஞ்சி நகருக்கு வழங்கிய பன்னிரண்டு பெயர்களையும், அப்பெயர்கள் வரக் காரணமாக இருந்த வரலாறுகளையும் விரித்துரைத்து, குமரக் கோட்டத்தின் சிறப்பைக் கச்சியப்பர் சொல் நயமும் பொருள் நயமும் பொதுளப் போற்றுகின்றார்.

ஏழாவதாகப் பாயிரப்படலம் எனும் ஒன்றை அவர் அமைத்துள்ளார். 'துன்பம் அகற்றிடும் தொல்புராணங்கள் ஒன்பதிற்று இருவகை (18)' உள்ளன என்பதைச் சொல்லி அவற்றின் தோற்றம் வளர்ச்சியைச் சுட்டிப், பின்னர் அவற்றை மூவகைப்படுத்தி, கந்த புராணத்தின் நோக்கையும் போக்கையும் அவர் கோடி காட்டுகிறார். இந்த ஏழு படலங்களிலும் 352 திருவிருத்தங்கள் உள்ளன. இவற்றையும் சேர்த்தே கந்தபுராணத்தில் 10345 திருவிருத்தங்கள் உள்ளதாகக் கணக்கிடுவர்.

கச்சியப்பர் படைப்புகள்:

இனி முதற்கண் உள்ள உற்பத்திக் காண்டத்தில் உள்ள குமாரபுரிப் படலத்தில் (24) உள்ள திருச்சேய்ஞலூர் வரலாறு, திருச்செந்தில் படலம் (26), தேவகாண்டத்தில் உள்ள திருப்பரங்குன்று சேர்படலம் (1), தட்சகாண்டத்தில் (6) உள்ள வள்ளியம்மை திருமணப் படலம் (6:24), வழிநடைப்படலம் (1:23) ஆகிய படலங்கள் வடமொழியில் உள்ள மூல நூலில் காணப்படவில்லை.

இவையல்லாமல், (1) சுந்தரரைத் தடுத்தாட்கொண்ட கதை, (2) தழுவக் குழைந்த வரலாறு, (3) இந்திரன் சீகாழியில் நந்தவனம் அமைத்து இறைவனை வழிபட்ட கதை, (4) திருக்குற்றாலம் படலம், (5) யானை, பாம்பு, பரிக்குருவி, சிலந்தி போன்ற உயிரினங்களுக்கு இறைவன் அருள்புரிந்ததைப் பற்றிய திருவிளையாடல் புராணக் கதைகள், (6) சோழர்குல முன்னோன் முசுகுந்தன் கருவூரையும் திருவாரூரையும் ஆண்ட வரலாறு (7) திருவிடைமருதூரில் உமை இறைவனை வழிபட்ட கதை, (8) திருவாரூர்த் தியாகேசரும் முசுகுந்தனும் பற்றிய கதைகள், (9) திருமறைக்காட்டில் கல்லை உண்டவன் (சிலைஅதண்டவன்) கதை, போன்ற பல புதிய, ஆனால் தமிழ்நாட்டில் வழங்கி வந்த கதைகளையும் கச்சியப்பர் தம் நூலில் புதியவாகப் புகுத்தியுள்ளார். மார்க்கண்டேய படலத்தில் வரும் இரசவாதியின் சுவை கதை, கச்சியப்பரின் படைப்பேயாகும்.

தமிழ்க் கந்தபுராணத்தில், விநாயக சதுர்த்தி, மாசிமகம், பங்குனி உத்தரம், ஐப்பசி, மாத சஷ்டி விரதம், சிவராத்திரி, வெள்ளிக்கிழமை விரதம், எனும் ஏழுவகைப் பண்டிகைகளும் நோன்புகளும் விளக்கப்படுகின்றன. வடமொழிக் கந்தபுராணத்தில் நூற்றுக்கு மேற்பட்ட பண்டிகைகளும் நோன்பு

களும் சிறப்பித்துப் பேசப்படுகின்றன. ஆனால் அவையாவும், ஏழாவது காண்டமாகிய உப தேச காண்டத்திலேயே இடம்பெறுகின்றன.

இவ்வண்டப் பகுதியின் உண்டைப் பிறக் கத்தைப் பற்றிய செய்திகள், முதல்நூலில் தட்ச காண்டத்தில் (6), அண்டகோசப் படலத் தில் விரித்துரைக்கப் பட்டுள்ளன. ஆனால், கச்சியப்பர், அப்படலத்தை (1) அசுரகாண்டத் துள் (2), சுக்கிரனுபதேச படலத் (10) தினை அடுத்தும், திக்குவிசயப் படலத்திற்கு முன்னாக வும் அமைத்துள்ளார். திக்குவிசயம் புறப்படு வதற்கு முன், 1008 அண்டங்களின் அமைப்பை யும் இயல்பையும் அறிந்திருப்பது நல்லது என்று கருதி, தன் குருநாதரைச் சூரன் வேண்ட, குருவாகிய சுக்கிரன் அவற்றின் அமைப்பையும் நிலைகளையும் கூறியதாகக் கச்சியப்பர் அமைத் திருப்பது மிகவும் பொருத்தமாகத் தோன்று கிறது.

மற்றும் அசுர காண்டத்துள், காசிபன் உபதேசப் படலத்தில் விளக்கப்படும் சைவ சித் தாந்தக் கருத்துக்கள், சிவஞானபோதம் சிவ ஞானசித்தியார் ஆகிய சித்தாந்த சாத்திர நூல்களையும் அவை எடுத்துரைக்கும் கருத்துக் களையும் நினைவூட்டுவனவாக உள்ளன. மற்றும் நூல் முழுவதிலும் திருக்குறளின் கருத்துக்கள் இழையோடிச் செல்கின்றன. மகேந்திர காண் டத்தில், சூரனுடைய அமைச்சியற் படலத்தில், சிறப்பாகத் திருக்குறட் பொருட்பாலின் பொரு ளுரைகள் பொன்னேபோல் போற்றப்படுவதை யும் காண்கின்றோம்.

இவை யாவற்றையும்விட, மூல நூலி லிருந்து தமிழ்நூல் ஆசிரியர் வேறுபடும் சிறப் பான இடம் சுக்கிரன் உபதேசப் படலமாகும். வடமொழிநூலில், சாருவாக உலோகாயதத் தத்துவங்களையே சுக்கிராசாரியார் உபதேசம் செய்ததாக விரித்துரைக்கப்பட்டுள்ளது. ஆனால், கச்சியப்பரோ, 'பிரமம் ஒன்றே சத்துப்பொருள்; ஆன்மாவும் சிவனும் (பிரம மும்) ஒன்றே' எனும் கருத்தில் அத்துவித வேதாந்தத்தைச் சுக்கிரர் போதித்ததாகக் கூறு கிறார்.

பாசம் என்றும் பசுஎன்றும் மேதகும்
ஈசன் என்றும் இசைப்பர்; தனையெனப்
பேசல் மித்தை; பிறிதிலே; ஆவியும்
தேசு மேவு சிவனும் ஒன்று ஆகுமே

என்னும் பாணியில் தொடர்ந்து உபதேசம் செய்யப்படுவதாகக் கூறுகிறார். இது, அன் றைய தமிழகத்தில் நடைபெற்ற வேதாந்த சித்தாந்தத் தத்துவப் போராட்டத்தின் எதி ரொலியாக இருக்கலாம். சிறந்த சிவபக்தனை சூரபன்மனை 'மாயாவாதியாக்கிய' பெருமை கச்சியப்பருக்குரியதாகும்.

பொருள் இலக்கண மரபு :

இனி, பண்டைத் தமிழ்க் கலைச்செல்வத் துள் பெருஞ்சிறப்பு வாய்ந்தது பொருள் இலக் கண மரபு. அதனை ஆசிரியர் அங்கங்கே சுட்டிச் செல்லுகின்றார். போருக்குப் புறப்படு வோர் வெட்சி, கரந்தை, தும்பை ஆகிய பூமாலை களைத் தாங்கள் அன்றைக்குச் செய்யப்போகும் போர்க்கு ஏற்ற அடையாளமாக அணிந்து செல் லுவர் என்பது புறப்பொருள் இலக்கணத்துள் விரித்துரைக்கப்படும் செய்தியாகும். இதனை, வச்சிரவாகு,

அணி கொண்ட அயிற்கணை பெய்தபோற்
தூணி கொண்டுபின் தும்பை மிலைச்சியே

எனவும், பானுகோபன், 'தும்பையைஞ் சிக ழிகை மவுலி சூட்டினன்' எனவும் சுட்டுவதி லிருந்து, 'அதிரப் பொருவதற்குத் தும்பை அணியும்' வழக்கம் நினைவிற்கு வருகிறது. மற்றும் அமைச்சியற் படலத்தில், தங்கள் நக ரின்மீது படையெடுத்து வந்து முற்றுகையிடத் தயாராக உள்ள முருகனை எதிர்த்துப் போரிடப் புறப்பட்ட பானுகோபன், 'கரந்தை சூடுவான் குமரனைப் பொருத' என்று ஆசிரியர் குறிப்பிட் டுள்ளார். இவை அல்லாமல், போருக்குப் புறப் படும்பொழுதும் போரிலே பகைவர் முன்னிலை யில் வஞ்சினம் கூறுவது பண்டைப் புறப் பொருள் மரபு. வீரவாகு 'நன்னகர் அழிப்பன் இன்று' என்று வஞ்சினம் கூறினான். பானு கோபன்,

கன்னலொன்று அளவை தன்னில்
  கந்தவேள் ஒற்றன் யாக்கை
சின்னபின் னங்க ளாகச்
  செய்குவன்; செய்தி டேனேல்
பின்னுயிர் வாழ்க்கை வேண்டேன்
  யான் பிறந்தேனு மல்லேன்
என்னொரு சிலையும் யானும்
  எரியிடைப் புகுவன் என்றான்

என்பதை 'வஞ்சினம் இனையக் கூறி'னான் என ஆசிரியர் அடுத்த பாட்டில் சுட்டுவதும் இங்குக் கருதத்தக்கன.

— தொடரும்

"அகர முதல எழுத்தெல்லாம்"

(அகரமும் கடவுளும்)

..முன்னுரை :

உலகப் பெருங் கவிஞர்களுள் தலைசிறந்த ..ருவராகிய திருவள்ளுவர், தமது ஒப்புயர் ..ற்ற திருக்குறள் நூலின் முதற்கண், கடவுள் ..ாழ்த்து''க் கூற முற்படுகின்றார். ''கடவுளை ..ாழ்த்துவதற்குத் தலைப்படும் முன்னர், உல ..ற்குக் கடவுள் ஒருவர் உண்டு என உணர்த்த ..வேண்டுவது அவருக்கு இன்றியமையாத ..டமையாகின்றது. கடவுள் ஒருவர் உண்டு ..ன்னும் உண்மையை உணர்த்த, அவர் வேறு ..த்துணையோ பலப்பல வகையான சான்றுகளை ..ும், காரணங்களையும் எடுத்துக் காட்டியிருக்க ..லாம். ஆனால் அவர் அங்ஙனமெல்லாம் செய் ..யாமல், தமிழிலக்கணக் கருத்தினையே கையாளு ..கின்றார்.

ஆசிரியர் தொல்காப்பியர் தாம் இயற்றி ..யருளிய தொல்காப்பியம் என்னும் தமிழிலக் ..கண நூலில் ''மெய்யின் இயக்கம் அகர ..மொடு சிவணும்'' எனப் பணித்தருளிய நுட் ..பம் உணர்ந்து,

> ''அகர முதல எழுத்தெல்லாம் ஆதி
> பகவன் முதற்றே உலகு''

என்னும் திருக்குறளில், இறைவனுண்மை ..நிறுவுவதற்குத், தமிழிலக்கண அமைப்பினைத் ..தழுவி, ஆசிரியர் திருவள்ளுவர் அகர எழுத் ..தினையே உவமை காட்டியுள்ள அருமைப்பாடு, ..பெரிதும் போற்றி மகிழ்தற்குரியது.

அகரவுவமை :

'அக்கரங்கள் இன்றும் அகரவுயிர் இன் ..றேல்' என ஆசிரியர் மெய்கண்ட சிவமும், ..'அக்கரங்கள் தோறும் சென்றிடும் அகரம் ..போல நின்றனன் சிவனும் சேர்ந்தே' என ..ஆசிரியர் அருள்நந்தி சிவமும், திருவள்ளுவர் ..அருளிச் செய்த அகரவுவமையினைத் திறன் ..தெரிந்து போற்றித் தழீஇக் கொண்டுள்ளமை ..காணலாம். இங்ஙனமே வாழையடி வாழை ..யாகப் பிற்போந்த சான்றோர்கள் அனைவரும், ..திருவள்ளுவர் கூறிய இவ் அகரவுவமையினைப் ..பெரிதும் வியந்து புகழ்ந்து, தத்தம் நூல்களிற் ..பொன்னினும் மணியினும் போற்றிப் பொதிந்து ..கொண்டு சிறப்பித்துள்ளமை அறிந்து இன் ..புறற்பாலது.

இவ்வாறு பிற்போந்த சான்றோர்கள் அனைவரும் போற்றி மகிழும்வண்ணம் இறை யுண்மையை நிறுவுதற்குத் தெய்வப் புலவர் திருவள்ளுவர் பெருமான் காட்டியருளிய அகர வுவமையானது, சிந்திப்பரியதாய்ச் சிந்திப்ப வர்க்குச் சிறந்து செந்தேன் முந்திப் பொழிவ தாய், நுண்பொருள்கள் பலவற்றைத் தன்ன கத்தே கொண்டு ஒளிர்கின்றது.

நுண்பொருள்கள் :

(1) ஆதி அகரம் விகாரத்தானன்றி நாத மாத்திரையான் இயல்பாக வெளிப்பட்டு நிற்கின்றது; அதுபோலவே இறைவனும் இயல் பாகத் திரிபின்றி இயற்கை வடிவினனாக அமைந்து விளங்குகின்றான்.

(2) அகரம் அங்காப்பு மாத்திரையால் திரிபின்றி வெளிப்பட்டு, வேறு பிற ஒலிகளின் தோற்றங்களுக்கெல்லாம் முதன்மையாய் நிற் கின்றது; அதுபோலத் திரிபின்றி இயல்பாக விளங்கும் இறைவனும், முத்தொழில்களுற்றுத் திரிபுறும் உயிர் உலகுகளின் இயக்கங்களுக்கு முதல்வனாகத் திகழ்கின்றான்.

(3) அகரமே உயிர்களினும் மெய்களி னும் கலந்து நின்று அவற்றை ஒலிப்பிக்கின் றது; அதுபோலவே இறைவனும் அறிவற்ற உலகப் பொருள்களிலும் அறிவுடைய உயிர் களினுள்ளும் ஒன்றிக் கலந்து நின்று அவற்றை இயக்குவிக்கின்றான்.

(4) எழுத்துக்கள் மெய் உயிர் என இரண்டாய் அகர முதலவாதல் போலப் பிர பஞ்சமும் சேதனம் அசேதனம் என இரண் டாய் ஆதிபகவனாகிய முதலையுடையது. உயி.. எழுத்து சீவான்மாவிற்கும், மெய்யெழு.. தத்துவப் பிரபஞ்சத்திற்கும், அகரம் ஆதி.. வற்கும் உவமையாம் என்பன. இதனை,

> ''அகர உயிர்போல் அறிவாகி எங்கும்
> நிகரில்இறை நிற்கும் நிறைந்து''

எனச் சைவ சித்தாந்த சந்தானாசிரியர்களுள் ஒருவராகிய உமாபதிசிவம் தாம் இயற்றிய 'திருவருட்பயன்' என்னும் நூலில் அருளிச் செய்திருத்தல் கொண்டு உணரலாம்.

(5) அகரம் மெய்களினும் உயிர்களினும் ஒன்றிக் கலந்து நிற்பினும், அம் மெய் உயிர்களின் வேருகத் தனித்தும் நிற்கின்றது; அதுபோலவே, இறைவனும் உலகோடும் உயிர்களோடும் கலந்து ஒன்றி நிற்கின்ருன் எனினும், அவற்றின் வேருகத் தனித்தும் விளங்குகின்ருன்.

(6) அகரம் உயிர்களோடும் மெய்களோடும் ஒன்ருய் வேருய் உடனுய்க் கலந்து நிற்பினும், ஒலியியல் நுட்பம் உணர்ந்த அறிஞர்களுக்கன்றிப் பருப்பொருள் அறிவினர்க்கு அவ்வியல்பு விளங்குவதில்லை; அதுபோலவே இறைவனும் உலகுயிர்களோடு, கலப்பினுல் 'உடலின் உயிர்போல்' ஒன்ருகியும், பொருட்டன்மையாற் 'கண்ணில் அருக்கன்போல்' வேருகியும், உயிர்க்குயிராதற் றன்மையாற் 'கண்ணெளியின் ஆன்ம போதம் போல்' உடனுகியும் நின்று அருள் செய்து போதருகின்ருன். ஆயினும், மெய்யுணர்வு பெற்ற மேலோர்கட்கன்றி அவனது அருளியல்பு விளங்குவதில்லை.

(7) வாயை அங்காந்த அளவில் தோன்றும் அகரமும், அதன் இயைபாற் பிறந்தொலிக்கும் ஏனைய மெய் உயிர் எழுத்துக்களும், ஒருவனுல் ஒலிக்கப்பட்டுத் தோன்றுதலின், தோற்றமும், ஈறும் உடையனவாகக் கருதப்படுமெனினும், முக்காலத்து மக்களாலும் எக்காலத்தும் ஒலிக்கப்படுதலின், அவை என்றும் உளவாய் நின்றிலங்கும் அழிவில் பொருள்களேயாம்; அதுபோல இறைவனும் இறைவனுல் இயக்கப்பெறும் உலகுயிர்களும் முத்தொழில் நிகழ்ச்சிகளைப் பெற்றிருப்பினும், என்றும் உளவாம் அழிவில் பொருள்களே யாகும். ''பதியினைப்போற் பசு பாசம் அனுதி'' என்பது திருமூலர் மந்திரம்.

(8) அகரம் தமிழ் எழுத்துக்களுக்கு மட்டுமேயன்றி, வேறு பல மொழிகளின் எழுத்துக்களுக்கும் பொதுவாகவும் முதலாகவும் திகழ்கின்றது; அதுபோலவே இறைவனும் எல்லாச் சமயங்களுக்கும் பொதுவாகவும் முதலாகவும் விளங்குகின்ருன். 'ஒருவனுமே பலவாகி நின்றவா தோள்நோக்கம் ஆடாமோ' என்பர் மணிவாசகர். ''இராமேச்சுரத்து ஒருவனுமே பலவாகி நின்றதொரு வண்ணமே'' என்பது திருஞானசம்பந்தர் தேவாரம்.

(9) அகர ஒலி ஒன்றே வெவ்வேறு மொழியாளர்களாற் பல்வேறு வடிவினதாக எழுதப்படுகின்றது; அதுபோல இறைவன் ஒருவனே வெவ்வேறு சமயத்தினராற் பல்வேறு வடிவினனுகவும் பெயரினனுகவும் வைத்து வழிபடப்படுகின்ருன். ''ஒருநாமம் ஒருருவம் ஒன்றுமில்லாற்கு ஆயிரம் திருநாமம் பாடி நாம் தெள்ளேணம் கொட்டாமோ'' என்பது திருவாசகம்.

(10) பேச்சளவில் மட்டுமுள்ள திருந்தா மொழிகளில், அகரம் முதலிய ஒலிகட்கு வரிவடிவில் எழுத்துக்கள் இல்லையாயினும், திருந்திய இலக்கியச் செம்மொழிகளில் ஒலிவகைகளைக் காட்ட வரிவடிவங்கள் இன்றியமையாதன என்று நன்குணர்ந்து, எழுத்து வடிவங்கள் படைக்கப்பட்டுள்ளன; அதுபோல இறைவழிபாட்டிற்குத் திருவுருவங்கள் வேண்டா எனக் கரைந்து திரியும் ஒரு சிலர் உளரெனினும், ஒலி வகைகளைக் காட்டுவதற்கு எழுத்தமைப்புக்கள் வேண்டப்படுதல் போல, இறைவழிபாட்டிற்கும் திருவுருவ அமைப்புக்கள் வேண்டப்படும் என்பது பழந்தமிழர் கொள்கை.

''கட்புலன் இல்லாக் கடவுளைக் காட்டும்
சட்டகம் போலச் செவிப்புல ஒலியை
உட்கொளற்கு இடும்உரு பாம்வடி வெழுத்தே''

என்பது நன்னூல் விருத்தியுரை மேற்கோள். இதனுல் விக்கிரக வழிபாட்டின் (Idol worship) இன்றியமையாமையினையும், சிறப்பினையும் யாவரும் இனிது தெளியலாம்.

முடிவுரை :

இங்ஙனம் அறிஞராய்க் கருதி யுணர வல்லார் கருதி யுணர்ந்து மகிழத்தகும் சிறந்த கருத்துக்கள் பலபலவும், இவ்வகர உவமையின்கண் செவ்விதின் அமைந்துள்ளமை கண்டு கொள்க! இங்ஙனம் தாம் காட்டிய ஓர் உவமையின் வாயிலாகவே, பல அரிய நுண்பொருள்கள் வெளிப்பட்டு விளங்கும்படி செய்தருளிய ஆசிரியர் திருவள்ளுவரின் தெய்வப்புலமையினை வியந்து நினைந்து, அவரைப் போற்றி உய்ய முயலுவோமாக!

திகழும் திருவள் ளுவனுர்தம்
  தெய்வப் புலமை இலச்சினையா,
நிகரின் றிலங்கு திருக்குறள்நூல்
  நின்று நிலவும் முழுதெனினும்,
பகவன் உண்மை நிறுவுதற்குப்
  பண்பின் ஆராய்ந்(து) அவர்சொற்ற,
அகர உவமை தான்ஒன்றே,
  அமைதல் சாலும் எனல்தேற்றம்.

—ஆசிரியர்.

திருக்குறள்போல் நீதிநூல், சிறந்துயர்தொல் காப்பியம்போல்
பொருத்தமிகும் இலக்கணநூல், சிவஞான போதம்போல்
சுருக்கமிகும் மெய்ப்பொருள்நூல், தூயதிரு வாசகம்போல்
உருக்கமிகும் பக்திநூல், உலகினில்வேறு எங்கும்உண்டோ ?

— ஆசிரியர்

செங்கற்பட்டு மாவட்டக் கோயில்கள் பற்றிய குறிப்புக்கள்

[ந. ரா. முருகவேள், M.A., M.O.L.]

(முற்றொடர்ச்சி)

22) செம்பாக்கம் :

சிவப்பிரகாசசுவாமி கோயில்

செங்கற்பட்டிலிருந்து 9 கல் தொலைவில், செம்பாக்கம் கிராமம் உள்ளது. பேருந்து வசதிகள் உள்ளன. இக்கோயில் சுமார் 400 ஆண்டுகளுக்கு முற்பட்டதாக இருத்தல்கூடும். கோயில் 20 சென்ட் நிலப்பரப்புடையது. இரு வேளை பூசை நிகழ்கிறது. பரம்பரை உரிமையில்லாத குருக்கள் பூசை செய்கின்றார். அவருக்கு ஆண்டுக்கு 125 மரக்கால் நெல் தரப்படுகிறது. பக்தர்கள் வழங்கும் அன்பளிப்பும், அவருக்கு அனுமதிக்கப்படுகிறது. கோயிலுக்கு 5 ஏக்கர் நன்செய் நிலம் உள்ளது. அதன்மூலம் ஆண்டுக்கு 400 மரக்கால் நெல் கிடைக்கிறது. சுமார் 400 ரூபா மதிப்புள்ள நகைகள் உள்ளன. ஐம்பது ஆண்டுகளுக்கு முற்பட்ட, மரத்தால் செய்த இரண்டு கேடய வாகனங்கள் உள்ளன. விழாக்கள் எதுவும் இல்லை. அறநிலையத்துறை நியமிக்கும் இரண்டு அறங்காவலர்கள் இக்கோயிலை மேற்பார்க்கின்றனர்.

23) அகரம் :

கைலாசநாதசாமி கோயில்

செங்கல்பட்டுக்கு 16 கல் தொலைவில், மானும்பதிக்குச் செல்லும் சாலையில், அகரம் கிராமம் உள்ளது. கைலாசநாதர் சுயம்புவாக, அன்னை அகிலாண்டேசுவரியுடன் எழுந்தருளியுள்ளார். கோயிலின் பரப்பு 64 சென்ட், பரம்பரை உரிமையில்லாத குருக்கள் ஒருவரால், ஒருவேளை பூசை நிகழ்கிறது. விழாக்கள் எதுவும் இல்லை. மூன்று சிறு தேர்கள் தவிர, சங்கம சொத்துக்கள் எதுவும் இல்லை. பயிர் செய்யப்படும் 48.58 ஏக்கர் நிலங்கள் உள்ளன. அதன் ஆண்டு வருவாய் ரூ. 1200. ஒரு நியமன அறங்காவலர் உள்ளார்.

24) மானும்பதி :

திருக்கரையீசுவரர் கோயில்

செங்கற்பட்டு நிலையத்திற்கு 15 கல் தொலைவிலும், திருப்போரூருக்கு ஏழு கல் தொலைவிலும், திருக்கழுக்குன்றத்திற்கு 6 கல் தொலைவிலும், மானும்பதி உள்ளது. பேருந்து வசதிகள் உள்ளன. கோயில் சுமார் 300 ஆண்டுகளுக்கு முற்பட்டது; பரப்பு 50 சென்ட். குத்தகையில் பயிரிடப் பெறும் நன்செய் புன்செய் 56.0 ஏக்கர் நிலங்கள் உள்ளன. வேறு சொத்துக்கள் இல்லை. இரண்டு வேளை பூசை நிகழ்கிறது. கந்தர்சஷ்டி ஆருத்திரா தரிசன விழாக்கள் நடைபெறுகின்றன. நியமன அறங்காவலர் ஒருவர் உள்ளார்.

25) முள்ளிப்பாக்கம் :

பரசுராமேசுவரர் கோயில்

செங்கற்பட்டு நிலையத்திலிருந்து 9 கல் தொலைவிலும், திருக்கழுக்குன்றத்திற்கு 6 கல் தொலைவிலும் முள்ளிப்பாக்கம் கிராமம் உள்ளது. இங்குள்ள கோயில் 270 ஆண்டுகளுக்கு முன்பு கட்டப்பட்டது. பரப்பு 32 சென்ட். நன்செய் புன்செய் நிலங்கள் 19.39 ஏக்கர் உள்ளன. வேறு சொத்துக்கள் இல்லை. பரம்பரை உரிமையுள்ள குருக்களால் ஒருவேளை பூசை நடைபெறுகிறது. ஓர் அறங்காவலர் உள்ளார்.

26) திருவடிசூலம் :

ஞானபுரீசுவரர் கோயில்

செங்கற்பட்டு நிலையத்திலிருந்து திருப்போரூர் செல்லும் சாலையில், 5 கல் தொலைவில் திருவடிசூலம் கிராமம் உள்ளது. திருஞா சம்பந்தர் தேவாரத்தில் திருஇடைச்சுர என்று குறிக்கப்பெற்றிருப்பதே, இப்பொழு திருவடிசூலம் என மருவி வழங்குகின் காஞ்சிபுரத்திலிருந்து திருஞானசம்ப திருக்கழுக்குன்றம் நோக்கிச் சென்று கொண் டிருந்தபொழுது, அவர் இத்தலத்தைக் கடந்து சிறிது தூரம் சென்ற அளவில், சிவபெருமான் ‘என்னை மறந்தனையோ’ என்ற ஒலி எழுப்பி வினவி, ஒளிவடிவமாகக் காட்சியளித்தார். அது கண்ட திருஞானசம்பந்தர் இவ்விடத்திற்குத் திரும்பி வந்து இங்குள்ள இறைவனைப் பாடிப்

பணிந்து, பின்னர்த் திருக்கழுக்குன்றம் சென்று சேர்ந்தார் எனப் பெரியபுராணம் கூறுகின்றது.

''வரிவளர் அவிர்ஒளி அரவு அரைதாழ,
வார்சடை முடிமிசை வளர்மதி சூடிக்,
கரிவளர் தருகழல் கால்வலம் ஏந்திக்
கனல்எரி ஆடுவர், காடு அரங்காக ;
வரிவளர் தருபொழில் இளமயில் ஆல,
வெண்ணிறத்து அருவிகள் திண்ணென வீழும்
எரிவளர் இனமணி புனம்அணி சாரல்
இடைச்சுரம் மேவிய இவர்வணம் என்னே !''

''மடைச்சுரம் மறிவன வாளையும் கயலும்,
மருவிய வயல்தனில் வருபுனற் காழிச்
சடைச்சுரத்து உறைவதோர் பிறையுடை அண்ணல்
சரிதைகள் பரவிநின்று உருகு சம்பந்தன்
புடைசுரத்து அருவரைப் பூக்கமழ் சாரற்
புணர்மட நடையவர் புடையிடை ஆர்ந்த
இடைச்சுரம் ஏத்திய இசையொடு பாடல்
இவைசொல வல்லவர் பிணியிலர் தாமே!''

—சம்பந்தர்.

எனவரும் திருஞானசம்பந்தர் தேவாரப்பதிகம் பெற்ற தலமாதலின், இக்கோயில் 1,300 ஆண்டுகளுக்கு முற்பட்ட பழமையுடைய தாகும். கோயில் பழைய சோழ அரசர்களால் கட்டப்பெற்றது. நிலப்பரப்பு 82 சென்ட். கோயிலின் உட்பிராகாரத்தில் உள்ள கல் வெட்டுக்கள் பெரிதும் சிதைந்துள்ளன. செட்டி நாட்டு நகரத்துப்பெருமக்கள் சில திருப்பணிகள் செய்துள்ளனர். இங்குள்ள லிங்கம் சுயம்பு. இலிங்கத்திற்கு உரிய சில பூசைப்பொருள்களைக் கொண்டு அபிஷேகம் செய்தால், கற்பூர தீபத் தின் ஒளி இலிங்கத்திலும் பளிங்கிற்போலப் பிரதி பலித்து ஒளிவிட்டுத் தோன்றும். திருஈங்கோய் மலை என்னும் தலத்திலுள்ள மரகதாசலேசுவரர் கோயிலிலுள்ள சிவலிங்கத்தைப்போல, இங் குள்ள இலிங்கத்திலும் கற்பூர தீபஒளி அழகு பெறத்தோன்றி மகிழ்வித்தல் குறிப்பிடத் தக்கது. பரம்பரைக் குருக்கள் ஒருவர், இரண்டு வேளைகள் பூசை புரிகின்றார். அவருக்கு ஊதியமாக நெல் வழங்கப் படுகின்றது. கோயிலுக்கு உரிய நிலங் களிலிருந்து 4 வண்டி நெல் ஆண்டு ஒன்றுக்குக் கிடைக்கின்றது. ஆண்டுதோறும் சித்திரா பௌர்ணமி, கார்த்திகை, ஆருத்திரா, பங்குனி உத்திரம் ஆகிய விழாக்கள் நடைபெறுகின்றன. இரண்டு வாகனங்கள் உள்ளன. ஒரு நிர்வாக அதிகாரியும் மூன்று அறங்காவலர்களும் உள்ள னர்.

27) புலிப்பாக்கம் :

வியாக்கிரபுரீசுவரர் கோயில்

செங்கற்பட்டு நிலையத்திற்கு வடக்கே 1.5 கல் தொலைவில் உள்ளது. சுமார் 300 ஆண்டு களுக்கு முன்னர் இக்கோயில் கட்டப்பெற்றுள் ளது. பரப்பு 425 சதுரஅடி. தினம் ஒருமுறை பூசை நடைபெறுகிறது. கார்த்திகைத் தீப உற்சவம் மட்டும் கொண்டாடப்படுகின்றது. 4 ஏக்கர் நிலங்கள் உள்ளன. அவற்றிலிருந்து 5 வண்டி நெல் கிடைக்கின்றது. ஒரு பரம்பரை அறங்காவலர் இதனை மேற்பார்த்து வருகின்றார்.

இக்கிராமத்திலேயே புண்டரீக வரத ராசப் பெருமாள் கோயில் என்று வேறொரு கோயிலும் உள்ளது. அதன் பரப்பு 672 சதுர அடி. இதுவும் சுமார் 300 ஆண்டுகளுக்கு முற் பட்டது. 3.51 ஏக்கர் நிலங்கள் உள்ளன. அவற்றின்மூலம் கிடைக்கும் ஆண்டு வருவாய் ரூ. 4000. தினம் ஒருவேளைப் பூசை நடை பெறுகிறது. ஆண்டுக்கு ஒருமுறை கார்த்தி கைத் தீபவிழா கொண்டாடப்படுகிறது. இரண்டு அறங்காவலர்கள் உள்ளனர்.

28) செங்கற்பட்டு நகரம் :

அ) வரதராசப்பெருமாள் கோயில்

செங்கற்பட்டு நகரத்தின் எல்லைக்குள் ஏழு கோயில்கள் உள்ளன. அவற்றுள் வரதராசப்பெருமாள்கோயில் என்பது, ஒத்தி வாக்கம் நிலையத்திலிருந்து 1.5 கல் தொலைவில் உள்ளது. இக்கோயில் 300 ஆண்டுகளுக்கு முன்பு கட்டப்பெற்றிருக்கலாம். இரண்டு ஏக்கர் பரப்பில் அமைந்திருக்கின்றது. ஒரு வேளை மட்டும் பூசை. வைகுண்ட ஏகாதசி விழா நிகழ்கிறது. இதற்கு ஓர் அறங்காவலர் உள்ளார்.

ஆ) பதங்கீசுவரர் கோயில்

செங்கற்பட்டு நிலையத்திலிருந்து அரைகல் தொலைவில் உள்ளது. பழமையான கோயிலா கத் தோன்றுகிறது. 75 சென்ட் நிலப்பரப்பில் அமைந்துள்ளது. இலிங்கம் சுயம்பு மூர்த்தி. ஒருவேளை மட்டும் பூசை நடைபெறுகிறது. 45.70 ஏக்கர் புன்செய் நிலங்கள் உள்ளன. அதன் ஆண்டு வருவாய் ரூபா 500. வேறு சொத்துக்கள் இல்லை. சித்திரைத் திருவிழா நடைபெறுகிறது. மூன்று அறங்காவலர்கள் உள்ளனர்.

இ) அங்காள பரமேசுவரி கோயில்

200 ஆண்டுகளுக்கு முன்னர் அன்பர்களின் நன்கொடையால் கட்டப்பெற்றது. அம்பிகை அமர்ந்த நிலையில் 4 திருக்கைகளுடன் விளங்கு கின்றாள். சிவன்கோயில் குருக்கள் இங்கு இரண்டு வேளை பூசை புரிகின்றார். விழாக்கள் இல்லை. ஒரு பரம்பரை அறங்காவலர் இதனை நிர்வகிக்கின்றார்.

ஈ) கைலாசநாதர் மற்றும் கோதண்டராமசாமி கோயில்கள்

இவ்விரு கோயில்களும் சுமார் 200 ஆண்டுகளுக்கு முன்பு கட்டப்பெற்றன. சிவன்கோயில் மிகவும் சிறியதாக உள்ளது. பெருமாள் கோயில் 34 சென்ட் பரப்பு உடையது. இங்குப் பட்டாபி ராமர் அமர்ந்த நிலையில் உள்ளார். காலை மாலை பூசை நிகழ்கிறது. சிவன் கோயிலுக்குச் சொத்துக்கள் இல்லை. பெருமாள் கோயிலுக்கு நிலங்கள் மூலம் ஆண்டுக்கு ரூ. 2,000 வருவாய் கிடைக்

கிறது. மரத்தால் செய்த கருடன் ஆதிசேடன் அனுமன் குதிரை யானை வாகனங்கள் உள்ளன. பிரம்மோற்சவம் நவராத்திரி சீராமநவமி ஆகியவை நடைபெறுகின்றன. சிவன்கோயிலுக்கு ஓர் அறங்காவலரும், பெருமாள்கோயிலுக்கு இரண்டு அறங்காவலர்களும் உள்ளனர்.

உ) வீரபத்திரசுவாமி திருக்கோயில்

இத்திருக்கோயில் ஊர்வாழ் மக்களால் கிராம தேவதைக் கோயிலாக, 400 சதுர அடிப் பரப்பில் கட்டப் பெற்றுள்ளது. சந்நிதிக்குள் விநாயகர் சிலையும் நிறுவப்பட்டுள்ளது. மூலவர் நின்ற நிலையில் உள்ளார். ஒரு வேளை பூசை. குருக்களுக்கு மாத ஊதியம் ஏழு ரூபாயும், நான்குபடி அரிசியும் தரப்படுகின்றன. கோயிலின் வீட்டுமனைகள் வாடகைக்கு விடப்பெற்று, அதன் மூலம் ரூ. 156 வருவாய் கிடைக்கின்றது. விழாக்கள் இல்லை. ஓர் அறங்காவலர் உள்ளார்.

ஊ) திரௌபதியம்மன் கோயில்

இக்கோயிலும் நகர்வாழ் மக்கள் அண்மையிற் கட்டியதாகும். கும்பாபிஷேகம் 37 ஆண்டுகளுக்கு முன்பு நிகழ்ந்தது. திரௌபதியம்மனின் திருவுருவம் நின்ற நிலையில் விளங்குகின்றது. கிருஷ்ணர் அர்ச்சுனர் விக்கிரகங்கள் உள்ளன. கோயிலின் பரப்பு 50 சென்ட், கோயிலின் பரம்பரைப் பூசாரி தினமும் காலையில் பூசை புரிகின்றார். அவருக்குத் தினமும் கால் படி அரிசியும், மாத ஊதியம் ரூபா பத்தும் வழங்கப்படுகின்றன. கோயிலுக்கு இரண்டு கடைகளும், சில வீட்டுமனைகளும் சொந்தமாக உள்ளன. அவற்றின்மூலம் ஆண்டுக்கு ரூ. 540 கிடைக்கின்றது. கேடய வாகனங்கள் சில உள்ளன. இரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை ஆடி மாதத்தில் 21 நாட்கள் விழாக் கொண்டாடப்படுகிறது. அதன் கடைசி நாளில், ஆண்களும் பெண்களும் ஆகப் பக்தர்கள் தீமிதி விழாவில் பங்கு கொள்ளுகின்றனர். மூன்று நியமன அறங்காவலர்கள் உள்ளனர்.

எ) ஏகாம்பரேசுவரர் கோயில்

பல்லவ மன்னர்களால் கட்டப் பெற்றதாகத் தெரிகின்றது. இங்கு சுமார் 75 ஆண்டுகளுக்கு முன்பு கும்பாபிஷேகம் நிகழ்ந்தது. கோயிலில் ஏகாம்பரேசுவரர், காமாட்சியம்மை, விநாயகர், சுப்பிரமணியர், நவக்கிரகங்கள் ஆகிய திருவுருவங்கள் உள்ளன. கோயில் 1.5 ஏக்கர் பரப்புடையது. காலை மாலைகளில் பூசை நடக்கின்றது. குருக்களுக்கு மாத ஊதியம் ரூ. 40. வெள்ளிக்கவசம், கற்கள் பதித்த தங்கப் பதக்கம் ஆகிய நகைகள் உள்ளன. ரூபா 2,000 மதிப்புள்ள இந்த நகைகளைப் பக்தர்கள் வழங்கியுள்ளனர். கோயிலுக்கு 8.43 ஏக்கர் நன்செய் நிலங்களும், மூன்று வீடுகளும், ஒரு குளமும் உள்ளன. அவற்றின் மூலம் ஆண்டுக்குச் சுமார் ரூ. 3,600 வருவாய் கிடைக்கின்றது. குதிரை ரிஷபம் சூரியப்பிரபை மயில் பெருச்சாளி அதிகாரநந்தி முதலிய வாகனங்களும் நான்கு பல்லக்குகளும் உள்ளன. இவைகள் 60 ஆண்டுகளுக்கு முன்பு மரத்தால் செய்யப்பட்டவை. ஆருத்திரா, மகாசிவராத்திரி பங்குனி உத்திரம் ஆகிய விழாக்கள் நடைபெறுகின்றன. இக்கோயில் செட்டியார் குலமக்களால் முன்பு, நிருவகிக்கப் பெற்று வந்தது. இப்பொழுது நியமன அறங்காவலர்கள் இருவரால் நடத்தப்பட்டு வருகின்றது.

29) திருக்கழுக்குன்றம் :

வேதகிரீசுவரர் கோயில்

சென்னையிலிருந்து 45 கல் தொலைவிலும், செங்கற்பட்டிலிருந்து 9 கல் தொலைவிலும் உள்ளது. பண்டைக் காலத்தில், தொண்டை நாட்டுக்குரிய 24 கோட்டங்களுள் களத்தூர்க் கோட்டத்தில் களத்தூர் நாட்டைச் சேர்ந்திருந்தது. கல்வெட்டுக்கள் இதனை 'உலகளந்த சோழபுரம்' என்று குறிப்பிடுகின்றன. இதற்குப் பட்சிதீர்த்தம் எனவும் பெயர் வழங்கும். வடநாட்டிலிருந்து ஏராளமான யாத்திரிகர்கள் நாள்தோறும் வந்து தரிசிக்கின்றனர். நோயாளர்கள், மனநோய் உள்ளவர்கள், பேய் பிடிக்கப்பட்டவர்கள் ஆகியோர், இங்கு வந்து சில நாட்கள் தங்கி மலைவலம் புரிந்து நலம்பெற்றுச் செல்லுகின்றனர். இத்தலத்தில் வேதங்கள் இறைவனைப் பூசித்து மலைவடிவாக அமைந்தன என்பது தலவரலாறு. அதனால் இதற்கு வேதகிரி, வேதாசலம், வேதமலை, மறைமலை என்னும் பெயர்கள் வழங்கும். கோடி உருத்திரர்கள், திருநந்திதேவர், பிரமன், திருமால், அஷ்டவசுக்கள் ஆகியோர் பூசித்ததனால், இதற்கு உருத்திரகோடீசம் நந்திபுரம் பிரமபுரம் ஆதிநாராயணபுரம் வசுபுரம் என்னும் பெயர்களும் வழங்கும். தலமரம் வாழையாதலின் கதலிவனம், கதலிவெற்பு என்றும் இதற்குப் பெயருண்டு.

ஊரின் நடுவே சுமார் 600 அடி உயரமுடையதாக மலை திகழ்கின்றது. இம்மலை நான்கு பகுதிகளாகக் காட்சியளிக்கின்றது. இம்மலையின் உச்சியில் சிவபெருமான் வாழைப்பூக் குருத்துப்போலச் சுயம்புமூர்த்தியாகத் தோன்றியுள்ளார். அதற்குக் கவசம் சார்த்திப் பூசித்து வருகின்றனர். வேதமாகிய மலையின் உச்சியில் விளங்குவதால், வேதகிரீசுவரர்க்கு மலைக்கொழுந்து என்றும் பெயர் வழங்கும். ''கந்தசிஷ்யன் என்ற இரண்டாம் கந்தவர்மன் (கி.பி. 400-436), திருக்கழுக்குன்றத்துச் சிவன்கோயிலுக்கு நிபந்தம் விட்டிருந்தான். அது மீண்டும் முதல் நரசிம்மவர்மன் (கி.பி. 600-668) கால[illegible]தில் புதுப்பிக்கப்பெற்றது'' என்று இராஜர[illegible] சோழனின் (கி. பி. 985-1014) கல்வெ[illegible] ஒன்று குறிப்பிடுகின்றது. அதனால் இக்கோ[illegible]லின் பழமை இனிது புலனாகின்றது. கோயிற் கருவறையின் மூன்று பக்கத்துச் [illegible]களிலும், பிரமன் திருமால் நந்திதேவர் சண்[illegible]டேசுவரர் சோமாஸ்கந்தர் தட்சிணாமூர்த்தி மார்க்கண்டேயர் போகசக்தி திருவுருவங்கள் அமைக்கப்பட்டுள்ளன. மலைக்கோயிலின் வெளிச்சுற்றில் சொக்கம்மை கோயில், வடக்கு நோக்கித் தனியே அமைக்கப் பெற்றுள்ளது. மலைக்கோயிலினின்று கீழே இறங்கி வரும்

பாதையில் சுமார் 50 அடிக்குக்கீழ் ஒரு குடைவரை மண்டபம் உள்ளது. அஃது ஒரே பாறையில் அமைக்கப்பட்டுள்ளது. அதன்கண் மண்டபமும் கருவறையும் உள்ளன. இக்குடைவரை மண்டபம் மகேந்திரவர்ம பல்லவன் (கி.பி. 600-630) காலத்ததாக அறிஞர்கள் கருதுகின்றனர்.

மலையின் உச்சியிலுள்ள இறைவனை இந்திரன் பன்னிரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை பூசை புரிவதாகத் தலபுராணம் கூறுகின்றது. இந்திரன் பூசிப்பதற்கு அடையாளமாக வானத்திலிருந்து மலைக்கோபுரத்தில் இடி விழுந்து, இலிங்கத்தை மூன்றுமுறை வலம்செய்துபூமிக்கு அடியில் இறங்கி விடுவதாகக் கூறுகின்றனர். இதனால் கோயிலுக்கோ சுவாமிக்கோ பழுது எதுவும் நேர்வதில்லை. கி.பி. 1889-ஆம் ஆண்டிலும், 1911-ஆம் ஆண்டிலும் இந்திரபூசை நடைபெற்றதாகக் கூறப்படுகின்றது. இந்திரன் உருவமும் கருவறையில் செதுக்கப்பெற்றுள்ளது.

பிரம்மாவின் மானசீகப் புத்திரர் எண்மர் சாரூப பதவியை விரும்பிக் கடுந்தவம் புரிந்தனர். சிவபெருமான் அவர்களின் தவத்திற்கு இரங்கிக் காட்சியளித்து யாது வேண்டும்? என வினவினர். பிரம்ம புத்திரர்கள் ஆகிய அம்முனிவர்கள், சாயுச்சிய பதவியை அருளிச் செய்ய வேண்டினர். பெருமான் வியந்து, ''விரும்பியதைக் கொடுக்கத் தடையில்லை, ஆயினும் ஒன்றை நினைந்து தவம் செய்து, மற்றொன்றைக் கேட்டீர்கள். மனமொன்று செயலொன்றாக நடித்தல் சிவத்துரோகம். எல்லா அறங்களுங் கற்றும், கர்ம வினை உங்களை விட்டு நீங்கவில்லை. ஆதலால் எண்மரும் கழுகுகளாகப் பிறந்து உழல்வீர்களாக'' எனச் சபித்தனர். அவர்கள் ஆண்டவனைத் தொழுது தங்கள் குற்றத்தை மன்னித்து வேண்டினர். எழுவகைப் பிறவிகளுள் எதுவரினும் நுமது இணையடி மறவாத பேரன்பை அருள்வீராக என வேண்டினர். அவர்களின் மன உறுதியைக் கண்டு மகிழ்ந்த இறைவன், ''நீங்கள் எண்மரும் யுகத்திற்கு இரண்டு கழுகுகளாகப் பிறந்து வேதகிரியில் நம்மைத் தொழுது, யுகமுடிவில் சாயுச்சிய பதவி பெறுவீர்களாக'' என அருளிச் செய்தனர். பெருமான் கட்டளையிட்டபடியே, கிரேதா யுகத்தில் சண்டன், பிரசண்டன் என்ற பெயரோடு இருவர் கழுகுருவாய்த் தோன்றி இம்மலையில் தவம் செய்து பேறு பெற்றனர். திரேதாயுகத்தில் சம்பாதி, சடாயு என்ற இரு முனிவர்கள் கழுகு உருவாகப் பிறந்து இங்குப் பெருமானை வழிபட்டுப் பேறு எய்தினர். துவாபர யுகத்தில் சம்புகுத்தன், மாகுத்தன் என்ற முனிவர்கள் கழுகுருவத்தை அடைந்து இத்தலத்தில் தவமியற்றிப் பெருமானது சாயுச்சிய பதவி அடைந்தனர். கலியுகத்தில் பூஷா, கல்[illegible]தர் என்னும் இரு முனிவர்கள், கழுகுருவம் பெற்று வழிபட்டு வருகின்றனர் என்பது தல வரலாறு. நான்கு யுகத்திலும் கழுகு பூசித்துப் பேறு பெறுவதால் இதற்குக் கழுக்குன்றம் என இவ்வூர் பெயர்பெற்றது. ''கழுகுதொழு வேதகிரி'' என்று, 600 ஆண்டுகளுக்கு முற்பட்ட அருணகிரிநாதர், தம் திருப்புகழ்ப் பாடலில் குறிப்பிட்டிருக்கின்றார்.

இத்தலத்தில் இற்றைக்குச் சுமார் 300 ஆண்டுகளுக்கு முன்னர்க் கி. பி. 1681-ஆம் ஆண்டு ஜூன் மாதம் 6-ஆம் தேதியன்று, ''ஹாவர்ட்'' (HOWERT) என்னும் டச்சுக்காரர் ஒருவர், திருக்கழுக்குன்றத்துக்கு வந்து கழுகுகள் உணவு கொள்ளும் நிகழ்ச்சியினைத் தாமே நேரிற்கண்டு வியந்ததாகத் தாம் எழுதிய நூல் ஒன்றில், விவரமாகக் குறிப்பிட்டுள்ளார்.

நாள்தோறும் காலை 11 மணியளவில் தேசிகர் ஒருவர், சர்க்கரைப் பொங்கலும், நெய்யும், இக்கழுகுகட்கு அளித்து வருகிறார். இதனைக் கழுகு பூசை என்பர். இக்கழுகுகள், காலையில் கங்கையில் நீராடி, நடுப்பகலில் கழுக்குன்றத்தில் உணவு உட்கொண்டு, மாலையில் இராமேச்சுரத்தில் வழிபட்டு, இரவு சிதம்பரம் அடைகின்றன என்று, செவிவழிச் செய்தி வழக்கும் உண்டு.

இத்தலத்து விநாயகர் வண்டுவன விநாயகர் என வழங்கப்படுவார். இவர் தவிர மற்றும், சந்நிதிவிநாயகர், சண்முக விநாயகர் (சங்குதீர்த்தக்கரை), தேரடி விநாயகர், சொக்கப்பிள்ளையார் (திருவாவடுதுறை மடம்), சிந்தாத்திரி விநாயகர் (மலைஅடிவாரம்), அன்னக்காவடி மடத்து விநாயகர், கோடி விநாயகர், முடிகாட்டும் விநாயகர், ஆலடிப்பிள்ளையார் என, விநாயகர் கோயில்கள் பல உள்ளன.

ஊரின் நடுவில் மலையடிவாரத்தில் விசாலமான பெரிய சிறந்த கோயில் அமைந்து விளங்குகின்றது. இது தாழ்வரைக் கோயில் எனப்படும். பொதுமக்கள் இதனைத் தாழக்கோயில் என வழங்குவர். திருப்பெருந்துறையில் இறைவனால் ஆட்கொள்ளப்பெற்ற மாணிக்கவாசகர் மீண்டும் ஒருமுறை குருதரிசனம் பெற்று 'கணக்கிலாத் திருக்கோலம் நீவந்து காட்டினாய் கழுக்குன்றிலே' எனப் பாடிய தலமாதலின், இங்கு மாணிக்கவாசகர் கோயிலும், அதற்கு நேர் எதிரில் இறைவனின் திருவடி அமைக்கப்பெற்ற கோயிலும் அமைந்து விளங்குகின்றன. இங்குள்ள இறைவனின் பெயர் பக்தவத்சலர். அம்பிகை திரிபுரசுந்தரி. இக்கோயிலிலுள்ள சண்முகப்பெருமான் திருவுருவம், வீரபத்திரர் திருவுருவம் என்பவை மிகவும் சிறப்பு வாய்ந்தவை. இக்கோயிலில் பல்லவர் காலத்திற்கும், சோழர் காலத்திற்கும் உரிய அழகிய சிற்ப வேலைப்பாடுகள் பல செறிந்துள்ளன.

இத்தலம் தட்சிண கயிலாயம் எனவும் வழங்கப்படும். ஆதிசேடனும் வாயுதேவனும் தம்முள் வலிமை மிக்கவர் யார்? என்று போட்டியிட்டபோது, வாயு தேவனால் சிதறும்படி செய்யப்பெற்ற மேருமலையின் பகுதிகள் சில இத்தலத்திலும் விழுந்ததாகக் கூறுவர். ஆஞ்சநேயர், இலக்குவன் இலங்கையில் மூர்ச்சை அடைந்தபோது சஞ்சீவி மலையை எடுத்துச் சென்றார் என்றும், அப்போது அதன் பகுதிகள் சில இங்குச் சிதறி வீழ்ந்தன என்றும் கூறுவர். அதனால் இங்கே சஞ்சீவி மலைச்சாரல் என்ற ஒன்று, புகழ்மிக விளங்கி வருகிறது. அதன்கண் பல அரிய மூலிகைகள் உள்ளன என்றும், அவற்றின்மீது படிந்துவரும் காற்றானது பல பிணி

களைத் தீர்த்து உடலுக்கு நன்மை தருகின்றது என்றும், பெரியோர்கள் அனுபவித்து உணர்ந்து கூறுகின்றனர். இத்தலத்தில் மலைவலம் வருவதனால் எத்தனையோ பல நோய்கள் தீர்ந்து விடுகின்றன என்பது, அனைவரும் கண்டறிந்த அனுபவ உண்மை. திருவாலங்காட்டில் காளிதேவியுடன் வாது செய்து ஊர்த்துவ தாண்டவம் புரிந்த சிவபெருமான், இத்தலத்திற்கு வந்து தங்கியே தம் களைப்பைத் தீர்த்துக் கொண்டார் எனத் தலபுராணங் கூறுகிறது.

தோடுடையான் ஒரு காதில்
தூயகுழை தாழ ;
ஏடுடையான் தலைகலனாக
இரந்து உண்ணும்
நாடுடையான் ; நள்ளிருள்
ஏம நடமாடும்
காடுடையான் காதல்செய்
கோயில் கழுக்குன்றே! (1)

—சம்பந்தர்

மூவிலைவேற் கையானை, மூர்த்தி தன்னை,
முதுபிணக்காடு உடையானை, முதலா னானை,
ஆவினில் ஐந்துகந்தானை, அமரர் கோனை,
ஆலாலம் உண்டுகந்த அம்மான் தன்னைப்,
பூவினின்மேல் நான்முகனும் மாலும் போற்றப்,
புணர்வரிய பெருமானைப் புனிதன் தன்னைக்,
காவலனைக் கழுக்குன்றம் அமர்ந்தான் தன்னைக்
கற்பகத்தைக் கண்ணாரக் கண்டேன் நானே (2)

—அப்பர்

கொன்று செய்த கொடுமையாற் பலசொல்லவே
நின்ற பாவவினைகள் தாம்பல நீங்கவே
சென்று சென்று தொழுமின் தேவர்பிரான்இடம்,
கன்றினோடு பிடிசூழ் தண்கழுக் குன்றமே (3)

—சுந்தரர்

பிட்டு நேர்பட மண்சுமந்த
பெருந்துறைப் பெரும்பித்தனே,
சட்ட நேர்பட வந்திலாத
சழக்கனேன் உனைச் சார்ந்திலேன்,
சிட்டனே சிவலோகனே சிறு
நாயினும் கடையாய வெங்
கட்டனேனையும் ஆட்கொள்வான் வந்து
காட்டினாய் கழுக்குன்றிலே (4)

—மணிவாசகர்

30) உழலூர் :

அகத்தீசுவரர் கோயில்

செங்கற்பட்டுக்கு 4 கல்தொலைவில் ஒத்திவாக்கம் நிலையத்திற்கு அருகில் உள்ளது. கோயில் மூன்று ஏக்கர் பரப்பு. இரண்டு வேளை பூசை. கோயிலுக்குச் சில நிலபுலன்கள் மட்டும் இருக்கின்றன. அதன் வருவாய் நித்திய பூசைக்கும், ஆருத்திரா விழாவிற்கும் பயன் படுத்தப்படுகிறது. நியமன அறங்காவலர் ஒருவர் உள்ளார்.

31) திருமணி :

கலியாணவரதராசப் பெருமாள் கோயில்

செங்கற்பட்டு நிலையத்திலிருந்து 3 கல் தொலைவில் உள்ளது. 100 ஆண்டுகளுக்கு முற்பட்டது. திரு. அப்பூர் சீநிவாசாச்சாரி என்பவர் சில திருப்பணிகள் செய்துள்ளார். கோயில் 30 சென்ட் நிலப்பரப்பு. சில நிலபுலன்கள் இருக்கின்றன. ஓர் அறங்காவலர் உள்ளார்.

32) ஒரகடம் :

கோதண்டராம சுவாமி கோயில்

இது செங்கற்பட்டு நிலையத்திலிருந்து 9 கல் தொலைவில் உள்ளது. யாத்திரிகர்கள் இங்குக் கட்டை வண்டியில் செல்லலாம். கோயில் சுமார் 900 ஆண்டுகளுக்கு முற்பட்டது சில கல்வெட்டுக்கள் உள்ளன. 40 சென்ட் நிலப்பரப்பில் அமைந்துள்ளது. நித்தியபூசை நடைபெறுகிறது. ஆண்டு வருவாய் ரூ. 800. சீராமநவமி விழா பத்துநாட்கள் நடைபெறுகிறது. சில நகைகளும் கருடவாகனமும் உள்ளன. மதுராந்தகம் அகோபிலமடத்து அலுவலர்கள் இக்கோயிலை நிர்வகிக்கின்றனர்.

33) மாமல்லபுரம் :

தலசயனப்பெருமாள் கோயில்

இது சென்னையிலுந்து 39 கல் தொலைவிலும் செங்கற்பட்டிலிருந்து 18 கல்தொலைவிலும் உள்ளது. பேருந்து வசதிகள் உள்ளன. வரலாற்றுச் சிறப்புமிக்கது. அயல்நாட்டவர் பலர் இங்கு மிகுதியாக வருகின்றனர். இது ஒரு புகழ்மிக்க பயணியர் நகரம். மாமல்லன் என்னும் சிறப்புப் பெயருடைய நரசிம்மவர்ம பல்லவன் (கி.பி. 630-668), இந் நகரை அமைத்ததாக அறிஞர்கள் கூறுவர். இங்குப் பற்பல அழகிய சிற்பங்களும், பஞ்சபாண்டவர் ரதங்கள் என்னும் புகழ்மிக்க விமானங்களும் உள்ளன. தலசயனப்பெருமாள் கோயில், சந்திரிகிரி அரசர்களால் கட்டப்பெற்றது. சுமார் 100 ஆண்டுகளுக்கு முன்னர் சேஷாத்திரி சுவாமிகள் என்பவர் இதற்குத் திருப்பணி செய்தார். உற்சவமூர்த்தி நின்றநிலையில் உள்ளார். புண்டரீக முனிவருக்கு, இங்குப் பெருமாள் சங்கு சக்கரமின்றி நான்கு திருக்கைகளுடன் காட்சியளித்தார். மாசிமக நாளில், பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் இங்குக் கடலில் நீராடுகின்றனர். கோயிலின் பரப்பு 4 ஏக்கர். திருமங்கையாழ்வார், நம்மாழ்வார், பூதத்தாழ்வார் ஆகிய மூவரும் இக்கோயிலை மங்களாசாசனம் செய்துள்ளனர். ரூ. 6,000 மதிப்புள்ள நகைகள் உள்ளன. பக்தர்களும் சந்திரகிரி அரசர்களும் இவற்றை வழங்கியுள்ளனர். லின்லித்[illegible] பிரபு என்னும் வைசிராய், இக்கோயிலுக்கு ஒரு பெரிய வெள்ளிப்பாத்திரம் வழங்கியுள்ளார். ஆண்டு வருவாய் சுமார் 2,000. பட்டாச்சாரியர் ஒருவர் இரண்டு வேளைகள் பூசை செய்கின்றார். கோயிலுக்குத் தேர் பல்லக்கு மற்றும் பத்து வாகனங்கள் உள்ளன. அறநிலையத்துறை நியமிக்கும் மூன்று அறங்காவலர்கள்

இதனை நிர்வகிக்கின்றனர். இது பூதத்தாழ்வார் அவதாரத் தலம். ஊர்க்கோயில் தலசயனம். கடற்கரைக்கோயில் சலசயனம். தலசயனக்கோயிலுக்கு அரை கல் தொலைவில் ஞானப்பிரான் (வராகமூர்த்தி) கோயில் உள்ளது.

34) குழிப்பந்தண்டலம் :

இலட்சுமிநாராயணப் பெருமாள் கோயில்

செங்கல்பட்டு நிலையத்திலிருந்து 12 கல் தொலைவில் உள்ளது. 50 சென்ட் பரப்பில், 500 ஆண்டுகளுக்கு முன்பு கட்டப்பட்டது. 15 ஏக்கர் நிலங்கள் உள்ளன. மூன்று அறங்காவலர்கள் பணியாற்றுகின்றனர்.

35) புலிக்குன்றம் :

இலட்சுமி நாராயணப்பெருமாள் கோயில்

செங்கல்பட்டிலிருந்து 12 கல். சுமார் 100 ஆண்டுகளுக்கு முன்பு கட்டப்பட்டது. 60 ஆண்டுகளுக்கு முன்பு ஒரு கும்பாபிஷேகம் நடைபெற்றது. 4 சென்ட் பரப்பில் அமைந்துள்ளது. கோயிலுக்கு விமானம் உண்டு. மூலவர் அமர்ந்த நிலையில், இலட்சுமிதேவியை மடியில் அமர்த்திக்கொண்டு எழுந்தருளியுள்ளார். பரம்பரைப் பட்டாச்சாரியர் ஒருவர் பூசை செய்கின்றார். கோயிலுக்கு 3.75 ஏக்கர் நிலம் உள்ளது. 16 கலம் நெல் கிடைக்கின்றது. மூன்று பரம்பரை அறங்காவலர் உள்ளனர்.

36) பொன்பதிர்க்குட்டம் :

கோதண்டராமசுவாமி கோயில்

செங்கற்பட்டுக்கு அடுத்த ஒத்திவாக்கத்திலிருந்து 2 கல் தொலைவில் உள்ளது. 200 ஆண்டுகளுக்கு முன்பு கட்டப்பட்டது. 20 சென்ட் பரப்பு. 500 ரூ. மதிப்புள்ள ஆபரணங்கள் உள்ளன. நிலத்திலிருந்து 7 வண்டி நெல் கிடைக்கின்றது. புரட்டாசி தை பங்குனி மாதங்களில் விழாக்கள் நடைபெறுகின்றன. மூன்று அறங்காவலர்கள் உள்ளனர்.

37) பொன்விளைந்த களத்தூர் :

அ) இலட்சுமி நரசிம்ம சுவாமி கோயில்

ஒத்திவாக்கம் நிலையத்திலிருந்து அரைக் கல் தொலைவில் உள்ளது. கோயில் 31 சென்ட் [illegible]லப்பரப்பு. மூலவர் அமர்ந்த நிலையில் சீதேவி [illegible]தேவிகளுடனும், அபயஹஸ்தத்துடனும், 5 [illegible]டி உயரம் உள்ளவராக விளங்குகின்றார். 6,[illegible]00 ரூபா மதிப்புள்ள அணிகலன்கள் உள்ளன. நி[illegible]ங்களின் மூலம் ஆண்டுவருவாய் ரூ. 2,000. வாகனங்கள் பல இருக்கின்றன. வைகுண்ட ஏகாதசி கருடசேவை விழாக்கள் நடைபெறுகின்றன. மூன்று அறங்காவலர்கள் உள்ளனர்.

ஆ) கோதண்ட ராமசுவாமி கோயில்

சுமார் 500 ஆண்டுகளுக்கு முன்பு கட்டப்பெற்றது. அகோபில மடத்து ஜீயர் திருப்பணி செய்துள்ளனர். கோயிலின் பரப்பு 2 ஏக்கர். 150 ரூபா மதிப்புள்ள நகைகள் உள்ளன. 12 ஏக்கர் நன்செய் புன்செய் நிலங்கள் இருக்கின்றன. அவற்றின்மூலம் 2000 ரூபா ஆண்டு வருமானம் கிடைக்கின்றது. ஏழு வாகனங்களும், ஒரு பல்லக்கும் உள்ளன. பிரம்மோற்சவம், நவராத்திரி, பரிவேட்டை விழாக்கள் நடைபெறுகின்றன. அறங்காவலர்குழு உள்ளது.

இ) கல்வி விநாயகர் கோயில்

கிராமமக்களால் சுமார் 70 ஆண்டுகளுக்குமுன் கட்டப்பட்டது. 1959ஆம் ஆண்டில் குடமுழுக்கு விழா நடைபெற்றது. கோயிற் பரப்பு அரை சென்ட். விநாயகர் அமர்ந்த நிலையில் உள்ளார். பூசாரி ஒருவர் பூசை செய்கின்றார். 97 சென்ட் நன்செய்யும், 4 சென்ட் புன்செய்யும் உள்ளன. இரண்டு அறங்காவலர்கள் உள்ளனர்.

ஈ) திருவாலீசுவரர் கோயில்

இதுசோழ அரசர் ஒருவரால் கட்டப்பெற்றது. 1946-ஆம் ஆண்டில் குடமுழுக்கு விழா நடந்தது. விநாயகர் முருகர் திரிபுரசுந்தரி சந்நிதிகள் உள்ளன. கோயிற் பரப்பு ஒரு ஏக்கர். கோபுரம் பிராகாரங்கள் உள்ளன. சுயம்பு லிங்கம். சுப்பிரமணியர் உற்சவர். பரம்பரை ஆதிசைவக் குருக்கள் பூசை செய்கின்றார். ஏழு ஏக்கர் நிலங்கள் உள்ளன. ரூ. 200 ஆண்டு வருவாய். பரிவேட்டை உற்சவம் தை மாதத்தில் நடக்கின்றது. ஓர் அறங்காவலர் உள்ளார்.

உ) முன்குடுமீசுவரர் கோயில்

இதுவும் சோழ அரசர் ஒருவரால் கட்டப்பெற்றது. 1961-ஆம் ஆண்டில் குடமுழுக்கு விழா நடைபெற்றது. கோயில் 3.58 ஏக்கர் பரப்புள்ளது. விநாயகர் முருகர் அம்மை ஆகிய மூலவர் விக்கிரகங்கள் உள்ளன. மூலவராகிய லிங்கத்திற்கு முன் குடுமி உள்ளதாகத் தலபுராணம் கூறுகிறது. கூற்றுவநாயனுர் இவரைப்புகழ்ந்து துதிப் பாடல்கள் பாடியிருப்பதாகத் தெரிகின்றது. இருவேளை பூசை. 3.50 ஏக்கர் நன்செய் உள்ளது. அதன் ஆண்டு வருவாய் ரூ. 350. ரிஷப வாகனம், சூரியப்பிரபை இரண்டு கேடய வாகனங்கள் உள்ளன. வைகாசியில் பிரமோற்சவம். மாசியில் சிவராத்திரியும் கொண்டாடப்படுகின்றன. ஒரு நியமன அறங்காவலர் உள்ளார்.

38) மணப்பாக்கம் :

கன்னியம்மன் ஆலயம்

ஒத்திவாக்கத்திலிருந்து இரண்டு கல். கோயிற் பரப்பு 2.65 ஏக்கர். 200 ஆண்டுகளுக்கு முற்பட்டது. ஆண்டு வருவாய் ரூ. 200 நெருப்புத் திருவிழா ஆடிமாதத்தில் நடக்கின்றது. பரம்பரைப் பூசகர் பூசித்து வருகின்றார்.

—(தொடரும்)

அருள்மிகு பஞ்சமுக விநாயகர், திருநாகைக் காரோணம் திருக்கோயில், நாகப்பட்டினம்

 பதிவு எண். எம். 7039



சுந்தரமூர்த்தி சுவாமிகள், பரவை நாச்சியாருடன்.
பெருஞ்சேரி, அருள்மிகு வாகீசுவரர் கோயில்.

வெளியிடுபவர்; ஆணையர், தமிழ்நாடு அரசு இந்து சமய அறநிலைய ஆட்சித் துறை, சென்னை-600034.
ஆசிரியர் : ந. ரா. முருகவேள், எம்.ஏ.,எம்.ஓ.எல்.
அச்சிடுவோர் : தமிழரசு அச்சகம், அரசினர் தோட்டம், சென்னை-600002.